612

612

The "Bharati." Reg. No. M. 2911.

பவ—ஆவணி-புரட்டாசி

1934 ஆகஸ்ட்டு-செப்டம்பர்-அக்டோபர்.

OFFICE OF THE REGISTRAR
30 OCT 1934
MADRAS

மாலை 6. மணி 5 & 6.

ஓர் செந்தமிழ்

மாதப் பத்திரிகை.

ரா. நாராயணஸ்வாமி,

ஆசிரியர்.

ரா. சுப்ரமண்யம்,

பொறுப்பாசிரியர்.

பிரசுராலயம்:-

உத்தமபாளையம்,

மதுரை ஜில்லா.

72

ன211, N2934

N34.6.5-6

197902

Cardamom Sale Company, Limited.

ஏலக்காய் விற்பனைக்-

-கம்பெனி, லிமிடெட்.,

தேவாரம்.

1913-ம் வருஷத்திய 7-வது இந்தியன் கம்பெனி ஆக்டுப்படி ரிஜிஸ்டர் செய்யப் பெற்றது.

மூலதனம் ரூ. 2,10,000.

ஏல விவசாயிகளையே அங்கத்தினராகக் கொண்டது. அங்கத்தினர்கள் ஏலத் தோட்டத்தில் விளையும் சரக்குகளை வட இந்தியாவிலிருக்கும் பல முக்கிய பட்டணங்களுக்கு அனுப்பியும், ஐரோப்பா அமெரிக்கா முதலிய அயல் நாடுகளுக்கு அனுப்பியும் விற்றுக் கொடுக்கிறோம்.

தங்கள் ஏல மகசூலை நல்ல விலைக்கு விற்க வேண்டுமானால், ஏல விவசாயிகள் தங்கள் சரக்குகளை எங்கள் மூலமாய் விற்க வேண்டுகிறோம்.

O. R. கோண்டேலு செட்டியார்,

மானேஜிங் டைரக்டர்,

ஏலக்காய் விற்பனைக் கம்பெனி, லிமிடெட்,

தேவாரம்,

மதுரை ஜில்லா.

ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை.

எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனம்,
எல்லாரும் இந்தியா மக்கள்;
எல்லாரும் ஓர் நிறை, எல்லாரும் ஓர் விலை,
எல்லாரும் இந்நாட்டு மன்னர்.

ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர்.

ரா. சுப்ரமணியம், பொறுப்பாசிரியர்.

மாலை 6	பவ-ஆவணி 1934ஆ ஆகஸ்டு-செப்டம்பர்மீ	மணி 5

OFFICE OF THE REGISTRAR
30 OCT 193
MADRAS

எனது சுக துக்கங்கள்.

பண்டித திரு. தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள்.

1. வான வெளிதனிலே—கவிந்தெழு
   மாலைப் பொழுதினிலே
   கூனப்பிறை வரவே—சிவன் திருக்
   கோலந் தெளிவேனடி.

2. முற்றிய ஆழியிலே—அலைவந்து
   மோதி யெறிகையிலே
   கற்றைக் கதிரெழவே—உலைதிருக்
   காட்சி வியப்பேனடி

இவ்வுலகில் நன்மையும் தீமையும் எல்லா விஷயங்களிலும் எல்லா சாஸ்திரங்களிலும் கலந்திருக்கின்றன.

197902

சென்னை-600 0

3. தாமரைப் பொய்கையிலே—கதிரொளி
[illegible] வேளையிலே
[illegible]ர் தோங்கிடவே—[illegible]ரியென்ற
பேதம் [illegible]ப்பேனடி

4. மாமலைச் சாரலிலே—மதமிகு
வாரணக் கூட்டத்திலே
காமலர் சிந்திடவே—கணேசனென்
கண்முன்னே நிற்பாரடி

5. மேட்டு நிலங்களிலே—திணைக்கதிர்
விம்மி விளைகையிலே
காட்டு மயில்வரவே—குகனுமென்
காதல் விளைப்பாரடி

6. காவுயர் சோலையிலே—பசுவொடு
கன்று களிக்கையிலே
தாவிப் புலிவிழவே—வருந்துயர்
தாங்க முடியவில்லை

7. புல்வளர் கானத்திலே—கலையினம்
பொங்கிக் குதிக்கையிலே
கொல்கடுவாய் வரவே—நெஞ்சமதில்
கூரம்பு பாய்ந்ததடி

8. வானுயர் கொம்பினிலே—மதுவினை
வண்டுகள் சேர்க்கையிலே
கானவர் வந்திடவே—உதிரமென்
கண்கள் சொரிந்திடவே

9. நேரைகள் ஏரியிலே—இனத்தொடு
சேர்ந்து மிதக்கையிலே
நாரைகள் சூழ்ந்திடவே—பாவிமனம்
நைந்து குழைந்ததடி

இவ் வுலகத்தில் நமக்கு நேரிடக் கூடிய சகல சோதனைகளினின்றும் தப்புவிக்கும் சிறந்த மருந்து வேலையே.

"பாரதி" வாழ்த்துப் பாக்கள்.

திரு. சே. ரா. சோமசுந்தரம் அவர்கள்.

கட்டளைக் கலித்துறை

பார்க்கத் தகுந்தநற் காயிதந் தன்னிற் பதித்து, வுயர்
நோக்கத்தில் நாரண சாமி யெனும்பெயர் நுண்ணறிவோன்
தூக்கத்தில் ஆழ்ந்த தமிழனைத் தட்டி யெழுப்புதற்கே
ஆக்கத்திற் "பாரதி"யே! நினை நாட்டிற் களித்தனனே. 1.

ஒன்றேனு மூதியங் காணு திருந்துந்தன் ஊக்கமது
குன்றாது தாய்நாடு பாஷை யிதற்குக் குவலயத்தில்
நன்றே யியற்றுவ லென்றேநன் ஞாரணன் நல்கியநீ
நின்றே செழித்துத் தமிழ்த்திரு நாட்டில் நிலைக்குவையே. 2.

அந்நாளிற் பாற்கடல் தன்னைக் கடைந்தே அளித்ததுபோல்
இந்நாள் தமிழ்க்கடல் தன்னைக் குடைந்திந்த நாட்டினர்கள்
எந்நாளுங் காணாத "பாரதி" தன்னை யெடுத்தளித்தான்
பன்னாட்கள் நாரா யணசாமி வாழ்த்திடப் பாடுதுமே! 3.

கற்றோர்கள் இக்காலக் கம்பன் எனவே கழறுறுபேர்
உற்றார்நற் பாரதி யென்னும் பெயர்கொள் உயர்கவியின்
வற்றாப் பெரும்புகழ் சஞ்சிகை தோறும் வழங்கிடும்பேர்
பெற்றாய்; அரும்புகழ் உற்றாய் இனும்நீ பெருகுவையே! 4.

கண்டோர் மயிர்கூச் செடுக்கப் படிக்குநின் கட்டுரைக்கும்
தண்டே னொழுகுந் தமிழ்க்குமப் பொன்மொழி தன்னிலன்பு
கொண்டோர்க ளோரிரு ரூபாய்கள் ஆண்டிற் கொடுத்ததனால்
பண்டே பிறந்த பயன்பெறு வாரென்று பாடுதுமே! 5.

"விநாடிதோறும் மாறி வரும் பிரபஞ்சத்தின் புது உண்மைகளை நீங்கள்
ஒவ்வொருவரும் உணரல் வேண்டும். உலகத்திலேயுள்ள உன்னத ஞானி
கள் தத்துவத்தை அறிய வேண்டும். பெரியார்கள் சரிதங்களை உன்னிப்
பார்த்தல் வேண்டும். மற்ற தேசங்களின் பெருமையை மதிக்க வேண்டும்.
பரந்த நோக்கங் கொண்டு அரசிய[illegible]கொள்ள வேண்டும்.

க 11, 524BH
N34.6.5-6

ஆடு ராட்டே.

ஸ்ரீமான் வ. பதுமநாப பிள்ளை அவர்கள்.

ஆடு ராட்டே சுழன் றாடுராட்டே—வருந்தும்
ஆரிய நாட்டார் உய்ய ஆடு ராட்டே!

முதலை வாய்ப் பட்ட கரி முறையிடவே—அதன்
முன் விரைந்து சென்(று) அதன்றன் துயர் கெடவே
உதவிய நாரணன் கைச் சக்கரமதே—இங்கு
உருமாறிச் சர்க்காவாய்ப் புக்க ராட்டே!—ஆடு ராட்டே 1.

டக்கா மஸ்லின் முதல் நுண்ணிய துணி—பல
தூரத்தினில் முன்னாளில் பண்ணிய துணி
இக்காலம் பழங்கதை யாகிவிட்டதே—புகழ்
இந்தியர் கைத்திறனும் ஏகிவிட்டதே!—ஆடு ராட்டே 2.

உன்னைப் பாராட்டாது கைவிட்ட பின்னரே—இங்கு
உரைப்பரும் பலவிதத் துன்பம் மன்னவே
பன்னுமவை தொலையக் காந்தி உரைத்த—உரைப்
படி அன்பர் சுழற்ற இங்(கு) ஆடு ராட்டே!—ஆடு ராட்டே 3.

இந்நாட்டில் முன்னாளில் நூற்ற கைகளே—உரிமை
இன்னமும் ஊணும் தரற்(கு) ஏற்ற கைகளே
இந்நாளில் 'கதிர் முனையில் இந்திய நாடு—எய்தும்
அன்ய சுதந்திரம்' என்றாடு ராட்டே!—ஆடு ராட்டே 4.

செல்வர் வறிஞர் எனும் வேற்றுமையின்றி—இத்
தேசத்(து) எவர்களையும் ஏற்றலை யின்று
நல்ல இன்ப நாதமெனும் சங்கீதமே—எழுப்பி
நாட்டினர் தம் வாட்டமற ஆடு ராட்டே!—ஆடு ராட்டே 5.

வம்பளக்க வருவோரை வாயடக்கியே—சோம்பல்
மனம் ஒன்றி நிற்குமாறு செய்தொடிக்கியே
அம்புயத்து மங்கை அருட்(கு) ஆட்படச் செய்தே—மனையில்
அணங்குகள் மகிழ்ந்திட ஆடு ராட்டே!—ஆடு ராட்டே 6.

வெப்ஸ்டர் என்னும் அறிஞர் ஒரு பெரிய ஆங்கில அகராதியை எழுதி முடிக்க 36 வருஷம் விடாது உழைத்தார். ஜார்ஜ் ஸ்டீபென்ஸன் ஆவியில் ரயிலை ஒழுங்குபடுத்த 15 வருஷம் விடாது உழைத்தார். எடிசன் நாள் 1-க்கு 19 மணி நேரம் வீதம் பல மாதங்கள் உழைத்து தனது கருவியைச் சரிப்படுத்தினர். விடா முயற்சியால் இவர்கள் அடைந்த பலனைப் பாருங்கள்.

நேர் நிமிர்ந்து நன்கமரச் செய்திடுவதால்—உடல்
நேர்மை பெற நல்வளமே எய்திடச் செய்தே
சோர் வொழித்து வேலையினில் உற்சாகமே—மிகத்
தோற்றுவித்து மங்கையர் உள்ளங் களிக்கவே—ஆடு ராட்டே 7.

செல்வர் தம் செருக்கினை மறந்திடச் செய்தே—பல
தீய செயல்களைத் துறந்திடச் செய்தே
அல்லற்படும் வறிஞர்க்(கு) இரங்கிடச் செய்தே—எளிய
அன்பு வாழ்வை மேற்கொளச் செய்(து) ஆடு ராட்டே!—
ஆடு ராட்டே 8.

ஏழைகள் பசிப்பிணி விலகிடச் செய்தே—குடியில்
என்றும் அவரிடை மகிழ்(வு) இலகிடச் செய்தே
'கோழைகள்' எனும் இழிவை ஓடிடச் செய்தே—ஒற்றுமை
குடும்பத்தினில் என்றும் நாட்டிடச் செய்தே—ஆடு ராட்டே! 9.

காந்தி திருவுள்ளம் மிக இன்புறச் செய்தே—கொடிய
'கவலை' எனும் பேய(து) இங்கு துன்புறச் செய்தே
சாந்தியது பாரதத்தில் நிலவிடச் செய்தே—நல்ல
சன்மார்க்கம் அதுவே இங்(கு) உலவிடச் செய்தே—
ஆடு ராட்டே! 10.

சுதந்திர முரசு!

திரு. க. அ. ஆறுமுகன் அவர்கள்.

[ஆடு பாம்பே என்ற மெட்டு.]

கொட்டு முரசே! வெற்றி கொட்டு முரசே!! சாதிக்
கொடுமை யழிந்தன் போங்கக் கொட்டு முரசே!!!

(1) எட்டுத் திசைகளிலு மிருள்நீங்க மிக்க
இனிய தமிழ் மொழி இனிதோங்க
முட்டுக்கட்டை மூடநம் பிக்கைநீங்க உயர்
மொய்ம்புடன் சமத்துவம் வளர்ந்தோங்க (கொ)

ஆயிரக் கணக்கான மைல் தூரத்திலுள்ள விசேஷங்களை ஒரு கணப் பொழுதில் அறிவிக்கக்கூடிய மின்சார சக்தியே ஒரு மனிதனை இமைப்பொழு தில் கொல்லக்கூடியது. ஆதலின் மின்சார சக்தியை உபயோகப்படுத்தக் கூடாதென்று சொல்வது யுக்தமாகுமோ?

(2) பெண்ணடிமை கொள்ளுதல் பாவமென்று அச்சப்
பேயிந்நாட்டிலிருந்து நீங்கினதென்று
அண்ணல் காந்திசொல் மொழி வாழ்கவென்று தூய
அஹிம்ஸா தருமமெங்கு மோங்கநன்று (கொ)

(3) நயவஞ்சகச் செயல்கள் நாட்டில் மடிய தெய்வ
நம்பிக்கையால் நாத்திக யிருள்விடிய
பயமெனு மடிமை விலங்கு ஒடிய துன்பப்
பட்டோர்க ளின்பவாழ்வில் மகிழ்வடைய (கொ)

(4) சன்மார்க்க நீதிமன்றந் தழைத்திடவே தமிழ்
தாயைச் சிங்காசனத்திற் கழைத்திடவே
துன்மார்க்க வீணர்கொள்கை ஒழித்திடவே சாதி
தொலைந்து இந்தியாதேசம் செழித்திடவே (கொ)

(5) வீரர்கள் வாழ்ந்த இந்தியா தேசம் இதில்
வீணே சாதிகளென்றோர் பெருமோசம்
பாரதிக் கவிஞன் மனவுத்தேசம் நாட்டில்
பலித்ததென நமக்குச் சந்தோசம் (கொ)

மார்த்தாண்ட வர்ம மஹாராஜா.

திரு. S. K. சாமி அவர்கள்.

உவரி கவரிய உலகின் கண் உத்தம வீரர் பலர் தோன்றி அரிய பெரிய வீரச் செயல்கள் பல ஆற்றி, புகழுடம்பெய்தி மறைந்துள்ளரென்பது சரித்திர உண்மையாகும். பாரத நாட்டின் பூங்காவனம் (Garden of India) என்று போற்றிப் புகழப்படும் திருவிதாங்கூர் தேசத்தை இந்நிலைமைக்குக் கொண்டு வந்த பெருமை, திருவிதாங்கூர் அரசர் மரபில் இற்றைக்கு

உலகத்தில் பெரிய காரியங்களைச் சாதித்தவர் அனைவரும் விடாமுயற்சியுடையவர்களா யிருந்திருக்கிறார்கள் என்பது பல தேச சரித்திரத்தாலும் நன்றாய் விளங்கும்.

சுமார் 225 வருடங்களுக்கு முன்னர் தோன்றிய மார்த்தாண்ட வர்ம மன்னனுடையதே யாகுமென்று சரித்திரம் கூறுகின்றது. உத்தம வீரர்களின் உயர் சரிதைகள் எதிர்கால நாட்டு மக்களாகிய இளைஞர்களுக்கு இன்பம் நல்குவதோடு, அவர்களின் எதிர்கால நல்வாழ்வுக்கு ஊன்றுகோலாகவு மிருக்குமென்பது அநுபவ சித்தாந்தமன்றோ? ஆகவே சுத்த வீரனாகிய மார்த்தாண்டவர்மனின் சரிதையை வரைவது மிகுந்த பலனளிக்குமென்று கருதுகிறோம்.

மார்த்தாண்டவர்மன் 904-ம் ஆண்டு (மலையாள வருடம்) தமது 23-வது பிராயத்தில் அரச பீடத்திலமர்ந்ததாகச் சரித்திரத்தில் காணப்படுவதால், 881-ம் ஆண்டு அவதரித்தாரென்று எண்ணயிடமேற்படுகின்றது. இளவரசனின் ஒரு வயது பிராயத்திலேயே தாயும் தந்தையும் உலக வாழ்வை நீத்தார்கள். குழந்தை சிற்றன்னையால் போற்றி வளர்க்கப்பட்டு வந்தது. எங்கும் காணமுடியாத "மருமக்கத்தாயம்" திருவிதாங்கூர் அரச குடும்பத்திலுண்டென்பதை நேயர்கள் அறியக்கூடும். அரசர் பதவி மருமகனுக்கே உரியதாகும். மார்த்தாண்டவர்மனின் மாமனாராகிய இரவி வர்ம மஹாராஜாவுக்கு பப்புதம்பி, இராமன் தம்பி என்று இரண்டு புதல்வர்களிருந்தனர். தந்தைக்குப் பின்னர் தனக்கு இராஜ்ய பாரம் கிட்ட வேண்டுமென்று ஆசை கொண்ட பப்புத்தம்பி, இளவரசனின் எதிரியாகத் தோன்றினான். திருவனந்தபுரம் பத்மநாப சுவாமி தேவஸ்தான காரியங்களைச் சரிவர நடாத்துவதற்கு ஏற்படுத்தப் பட்டிருந்த போற்றிமார்களும் (பார்ப்பனர்கள்) காரியஸ்தர்களும், பப்புத்தம்பிக்கு உதவியாயிருந்தனர். தூதுவர்கள் வழி இவ்விஷயத்தை இரகசியமா யறிந்த மந்திரியும், மகாராணியும், இளவரசனை அரண்மனையிலிருந்து அகற்றி, எச்சரிக்கையுடன் பாதுகாத்து வந்தனர். பப்புத்தம்பி 1000 படைவீரர்களை அனுப்பி, இளவரசனைக் கொல்வதற்கு ஏற்பாடு செய்தான். பிராது சண்டாசு என்னும் ராஜ பக்தனொருவன், குழந்தையைக் கையிலெடுத்துக் கொண்டு, மறைந்து ஓடும்போது, காட்டாளேசன் என்னும் தம்பியின் ஏவலாளன் தடுத்ததின் பயனாக இருவரும் மற் சண்டை செய்ய நேர்ந்தது. என்றாலும் இறுதியில் பிராது சண்டாசு குழந்தையுடன் மறைந்து சுமார் 4 மாத காலம் கானகத்திலேயே வதிந்து வந்தான். பின்னர் இளவரசன் இரணியலில் வாசம் செய்து வரவே, எதிரிகள் சந்தர்ப்பம் நோக்கி யிருந்தமையால் பெருத்த எச்சரிக்கையுடன் வாழவேண்டியதாக யிருந்தது.

கடந்து போனதற்காகத் துக்கப்படுவதும், வருங்காலத்தைப் பற்றிய கவலையும், பாடுபட்டதற்குத் தக்க பலன் கிடைக்குமோ வென்ற சந்தேகமும் நமது மனதுள் புக விடுவோமாயின், நமது உற்சாகம் நாசமாகிவிடும்.

நாலு வயது பருவமுடைய இளவரசனை இரணியலில் தங்கச் செய்வது அபாயமென்று கருதி மந்திரி பிரதானிகள் பாலனை படை வீரர்களோடு வேறொரு ஊரில் இரகசியமாகத் தாமதிக்க ஏற்பாடு செய்த பின்னர், வேறொரு குழந்தையை இளவரசனென்று வெளியே கூறி வந்தனர். பகிரங்கமாகப் போர்புரிந்தால் ஒரு வேளை தோல்வி நேரிடுமோ வென்று எண்ணிய எதிரிகள், அரச குமாரனை நயவஞ்சகமாகக் கொல்ல வேண்டுமென்று தீர்மானித்து அதற்காக இரகசியமாயுழைத்து வந்தனர். அரச குமாரன் என்று வெளியில் கூறி வந்த பாலன் கத்தியால் குத்தப்பட்டு மாண்டான். பப்புத்தம்பி இராமன் தம்பி இருவரும் இராஜ குமாரன் கொல்லப்பட்டதைக் குறித்து வெளிப்படையாகக் கோபமுற்றவர் போலக் காணப்பட்டாரெனினும், அந்தரங்கத்தில் அளவு கடந்த இன்பமெய்தினரென்று இயம்பவும் வேண்டுமோ?

இளவரசன் சுகமாக வாழ்ந்து வந்தான். 9-வது பிராயத்தில் படை வீரர்களோடு அரண்மனைக்கு வருவதைக் கண்ணுற்ற பப்புத்தம்பியின் மனம் வெதும்பியது. ஒன்றுமறியாத குழந்தையைக் கொன்றதைக் குறித்துப் பச்சாத்தாபமுற்றான். தனக்கு ஆண்டவனால் என்ன தண்டனை கிடைக்குமோ வென்று மனச்சாக்ஷி கூறியதென்றாலும், மார்த்தாண்ட வர்மனை எப்படியாவது நமனுலகம் அனுப்ப வேண்டுமென்று உறுதி பூண்டு பதினாயிரம் மல்லர்களை அனுப்பினான். அரச குமாரன் மலையுச்சியில் நிற்பதைக் கண்டு ஆயுதம் தாங்கிய வீரர்கள் தொடர்ந்தாரென்றாலும், அதி, நுட்ப புத்தி படைத்த அரசிளங் குமாரன் அண்மையில் காணப்பட்ட குகையில் மறைந்தான். இராஜகுமாரனை எங்கும் தேடிக் காணாது வீரர்களும் திரும்பினார்கள். இரண்டு நாள் உணவின்றி குகையினுள் பதுங்கியிருந்தமையால், நிழல் கண்ட இடத்து இருந்து, வாடி வதங்கிய வதனத்துடன் மெல்ல மெல்ல வழி நடந்து சோர்ந்து இறுதியில் "திக்கற்றவனுக்கு தெய்வமே துணை" யென்ற சொல்லுக்கேற்ப காளி கோவிலொன்றைக் கண்டு அங்கு சென்றான். பசியின் கொடுமையால் வாடிய பாலன், அர்ச்சகனிடம் சோறு கேட்டு வயிறார உண்டு அங்கேயே படுத்து ஆயாசம் தீர்ந்தான்.

அரசனைத் தேடி ராஜ பக்தர்கள் பலர் அங்கு மிங்கும் அலைந்த பின்னர் காளி கோவிலில் வருந்திக்கொண்டிருக்கும் குமாரனை

கண்களிலிருந்து உண்டாகும் கிருபா நோக்கமே அரும்பாகவும், புன்சிரிப்புடன் கூடிய வதனமே அன்று பூத்த மலராகவும், சத்யமாகிய இனிய சொல்லே மதுரமுள்ள காயாகவும், கொடுத்தலே கனியாகவும் கொண்டு நன்மை செய்கிறவர்களே, சலிக்காமல் கொடுக்கிற கற்பக விருட்சத்திற்கு ஒப்பாவார்.

அழைத்துச் சென்றார்கள். பப்புத்தம்பியின் கோபம் ஒவ்வொரு நிமிடமும் அதிகரித்துக்கொண்டே வந்தது. அரச குமாரன் குளிப்பதற்குப் போகும் சந்தர்ப்பம் நோக்கி ஆயிரம் படை வீரர்களை அனுப்பிப் போர் செய்ய ஏற்பாடு பப்புத்தம்பி செய்தான். இவ்வேளை இராஜாவின் பக்கமே வெற்றி கிட்டியமையால், சுமார் ஒரு வருட காலம் நிம்மதியாகக் கழிந்தது. பின்னர் சுசீந்திரம், கன்னியாகுமரி முதலிய இடங்களுக்கு மஹாராஜா எழுந்தருளியிருக்கும் சந்தர்ப்பத்திலும் போர் நிகழ்ந்தது. தக்க வேளையில் மந்திரிக்கு அறிவு கிட்டாமையாலும், பப்புத்தம்பியின் படைவீரர்கள் ஏராளமாயிருந்தமையாலும் அரசனுக்குத் தோல்வி ஏற்பட்டது. மார்த்தாண்டவர்மன் அண்மையிலிருந்த பகவதி க்ஷேத்திரத்தின் முன்பக்கம் காணப்பட்ட மண் யானையினுள் சென்று மறைந்திருந்தார். இவ்வாறு அரசனைக் காப்பாற்றியது, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஓர் விவசாயி என்பது ஈண்டுக் குறிப்பிடத் தக்கதாகும். அன்று இரவு தன்னைக் காப்பாற்றிய நாகரத்ன நாடாரின் இல்லத்தில் தங்கிவிட்டு அரண்மனைக்குச் சென்றார். குமார கோவிலுக்கு தர்சனத்திற்குப் போகும் வழியில் பப்புத்தம்பியின் ஏவலாளர்கள் மறுபடியும் அரசனை எதிர்த்தனர். அரசன் ஓர் சிவ க்ஷேத்திரத்தில் ஓடி மறைந்தார். அங்கும் வீரர்கள் தொடர்ந்து சென்றார்கள். இவ் விஷய மறிந்த பண்டாரம் தனது உடையை அரசனிடம் நல்கி, அரசனுடையைத் தானணிந்தமையால், பண்டாரம் இறக்கவும், அரசன் காப்பாற்றப்படுவதற்கும் இடமேற்பட்டது. மஹாராஜா கொல்லப்பட்டதாக வதந்தி எங்கும் உலாவியது. புப்புத்தம்பி முதலியோர் ஜயகோஷம் செய்தனர். உண்மை யறியாத மந்திரியும், நாட்டு மக்களும் தீராத் துயரடைந்தாரென்றாலும், பின்னர் உண்மை யறிந்து ஆனந்தம் கொண்டார்கள்.

இடை யிடையே இடையூறுகள் நேரிடுவதைக் கண்ணுற்ற மந்திரியும், மகா ராணியாரும், அரசனும் கலந்தாலோசித்து பார்ப்பன னொருவனை அரசனாகப் பாவனை செய்ய ஏற்பாடு செய்துவிட்டு மார்த்தாண்ட வர்மன், திருச்சினாப்பள்ளி, மதுரை முதலிய இடங்களுக்கு மாறுவேடம் தாங்கிச் சுற்றி வந்தமையால் மதுரை அரசனோடு பழக இடமேற்பட்டது மதுரை மன்னனின் மந்திரியாகிய அழகப்ப முதலியாரோடு நேசம் காட்டி வந்தார். ஆகவே மதுரையில் தங்கவிடமேற்பட்டது. மாரனைப் பழிக்கும் அரச குமாரனாகிய மார்த்தாண்ட வர்ம மன்னனோடு, மதுரை அரச குடும்பத்தைச் சார்ந்த

அசைவில்லாத ஊக்கமுடையாரிடம் ஆக்கம் அடையும் வழி தேடிச் செல்லும்.

ஓர் நங்கையர் திலகம் காதல் கொண்டாள். இருவரும் இரகசியமாக மணமுடித்து வாழ்ந்துவந்தார்கள். இதற்காக மன்னவன் மூன்று வருட காலம் மதுரையில் தங்க இடமேற்பட்டது. பின்னர் அழகப்பன் முதலியாரும், மார்த்தாண்ட வர்மனும் திருவனந்தபுரம் வந்து சேர்ந்ததைக் கண்ட நகர மக்கள் இதுகாறும் அரசன் இல்லாததை யறிந்து ஆச்சரியமுற்றார்கள். தமது காதலியுடன் அரண்மனைக்குள் அரசன் சென்றார். பின்னர் பட்டாபிஷேகத்திற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கொல்லம் வருடம் 904-ம் ஆண்டு தமது 23-ம் வயதில் ராஜ்ய பாரத்தை யேற்றார்.

அடுத்த நாள் பப்புத்தம்பியைக் கண்டு அழகப்ப முதலியார் எச்சரிக்கை செய்ததின் பயனாக "இனிமேல் அரசனுக்கு விரோதம் செய்ய மாட்டேன்" என்று உண்மை செய்தான். பின்னர் முதலியார் மதுரைக்குப் போயினர். மார்த்தாண்ட வர்மன் ராஜ்ய பாரம் கையேற்கும் பொழுது திருவிதாங்கூர் மிகச் சிறியதே யாகும். அதாவது கன்னியாகுமரி முதல் வடக்கு இடவாவரை 70 நாழிகை நீளம், சுமார் 20 நாழிகை அகலம், கொல்லம், நெடுமங்காடு, செங்கோட்டை, கோட்டாரக்கரை, ஆலங்காடு, ப்றவூர், பத்தனாபுரம் இவை யெல்லாம் ஒவ்வொரு இட பிரபுக்களின் அதிகாரத்திலிருந்தது. மார்த்தாண்ட வர்மனைப்பற்றிப் பிரபுக்களுக்கு அச்சம் தோன்றிய எதாவினால் பப்புத்தம்பியுடன் இரகசியமாக உதவி செய்வதாக ஒத்துக்கொண்டார்கள்.

நாகர்கோவில் திருவிழா காண்பதற்கு மஹாராஜா விஜயமாயிருந்தார். பப்புத்த்தம்பியும் படை வீரர்களுடன் நாகர்கோவிலில் தங்குவதர்காக வந்தான். இருவருக்கும் போர் நிகழ்ந்தது. இப்பொழுது தளவா (மந்திரி) வேலையா யிருந்தது, அதி புத்திசாலியாகிய ஆறுமுகம் பிள்ளை யாகும். மந்திரி வெகு தைரியமாகப் போர் செய்தாரென்றாலும் இறுதியில் பப்புத்தம்பிக்கும், அரசனுக்கும் மல் யுத்தம் நேர்ந்தது. இதுகாறும் இடையூறுகள் பல செய்து வரும் பப்புதம்பியை முடித்துவிட வேண்டுமென்ற முடிவான எண்ணம் படைத்த மார்த்தாண்ட வர்மன் மிக வன்மையாக யுத்தம் செய்தார். பப்புத்தம்பி படைக்களத்திலிருந்து பதுங்கி ஓடிச் சென்று அரண்மனைக்குள் மறைந்தாரென்றாலும், வீரனாகிய அரசன் பின்தொடர்ந்து சென்று வெட்டிக் கொன்றார். இது கண்ட இராமன் தம்பி அரசனைக் கொல்வதற்கு அடங்காக் கோபம் படைத்து வாளேந்திய கையுடன் சென்றார். அதி சூரனாகிய அரசன் அவரை

நாம் பிரதிதினமும் ஒரு மணி நேரமாவது தனிமையான இடத்தில் போய் மௌனமா யிருந்து தியானம் செய்வதின் மேன்மை பெரிது பெரிது.

யும் நமனுலகம் அனுப்பினார். பப்புத்தம்பியின் ஆஸ்தி யனைத்தும் ஏழைகளுக்குத் தானம் செய்யப்பட்டது.

பின்னர் தமது ராஜ்யத்தைப் பெருக்க வேண்டுமென்ற ஆசை கொண்டு கொல்லம் அரசனோடு போர் புரிந்து வெற்றி பெற்றார். இந்த யுத்தத்தில் மஹாராஜாவுக்குப் பெரிய ஆபத்துக்கள் பல நேர்ந்ததென்றாலும், அவையனைத்தும் பரிதியைக் கண்ட பனி போல மாறியது. அதுபோது டென்மார்க் தேசத்தினர் முட்டம் என்னும் துறைமுகத்தில் வந்திறங்கி திருவிதாங்கூரில் பல அக்கிரமங்கள் செய்தனர். இதைத் தடுக்க அரசர் போர் புரிந்து அத் தேசத்தாரை முறியடித்து எதிரிகளைச் சிறைப் படுத்தினார். அவர்களில் தலைவனாகிய டிலினாய் என்பவரைத் திருவிதாங்கூர் படைத் தலைவனாக நியமனம் செய்து, மேனாட்டு முறையில் பட்டாளத்திற்குப் பரிசீலனை யளிக்க ஏற்பாடு செய்தார். புல்லிய குறிச்சியில் பலத்த கோட்டை யொன்று டிலினாய் அவர்களால் கட்டப்பட்டது இக் கோட்டை இன்னும் இருக்கின்றது. ஏராளமான ஜனங்கள் இன்றும் இதைக் கண்டு போகின்றார்கள்.

திருவிதாங்கூரை இந் நிலைமைக்குக் கொண்டு வருவதற்கு டிலினாய் உழைத்து வந்தார். அப்பொழுது தளவாயாக யிருந்த ராமய்யன் அரிய ஊழியம் ஆற்றி வந்தது பாராட்டத் தக்கதாகும். காயன்குளம் பிரபுவோடு சமர் புரிந்து வெற்றி பெற்று, திருவிதாங்கூரோடு சேர்ந்தார். பின்னர் கருநாகப்பள்ளி, கார்த்திகைப்பள்ளி, நெடுமங்காடு, நாவாக்குளம் முதலிய சிறிய தேசங்களையும் கீழடக்கினார். 924-ல் செம்பகச்சேரி அரசரோடு போர் செய்து வெற்றி பெற்றார், இவ்வாறு வெற்றிக்கு மேல் வெற்றி கிடைத்தமையால் திருவிதாங்கூரின் எல்லை பெருகிக் கொண்டே வந்தது. தமது வெற்றிக்கு ஞாபகமாக "துலா வருஷ தானம்" என்ற அடியந்திரம் நடத்தி ஏழைகளுக்கு அன்ன தானம், சொர்ண தானம் முதலிய அகில நற்தானங்கள் செய்து வந்தார். இதோடு நிற்காமல் விடா முயற்சி கொண்டு, ஆறன் முனையில் வைத்து தெக்கன்கூர் அரசரோடு போர் செய்து அத் தேசத்தையும் திருவிதாங்கூரோடு சேர்த்துக் கொண்டார். போர் பல புரிந்து திருவிதாங்கூர் எல்லையை வட பாகம் பெரியார் முதல் தென் பாகம் களக்காடு வரையிலும் சுமார் 220 மைல் நீளமாகப் பெருக்கி, நவீன கேரள ஸ்தாபகர் (Maker of Modern Travancore) என்று போற்றி ஏற்றப்படும் நிலைமையைப் பெற்றார்.

925-ம் ஆண்டில் இராஜ்யத்தின் க்ஷேமத்தை யுன்னி முறை ஜபம் ஏற்படுத்தி நடத்தியது இன்றும் அனுஷ்டிக்கப்படுகிறது. போரில்

நமக்குள்ளிருக்கும் குற்றம் குறைகளை அறிந்து அவைகளைச் சீர்படுத்த மௌன தியானம் அவசியம்.

ஏற்பட்ட கொடும் செயல்களை நினைத்து பாவ சாந்திக்காக ஏற்படுத்தியதே முறை ஜபமாகும். தமது வெற்றிக்கும், இடையூறுகளின் நிவர்த்திக்கும் ஆண்டவனே துணை யென்ற எண்ணம் கொண்டு, திருவிதாங்கூர் தேசத்தை ஸ்ரீ பத்மநாப சுவாமிக்கு நல்கி, தான், ஆண்டவனின் அடிமை யென்பதை வெளிப்படுத்துவதற் கேதுவாகிய "திருப்படி தானம்" என்ற அடி யந்திரத்தை திருவனந்தபுரம் பத்மநாப க்ஷேத்திரத்தில், அதி விமரிசையாக நடத்தினார். அதனாலேயே, இன்றும் திருவிதாங்கூர் அரசர்களை பத்மநாபதாஸர் என்று அழைத்து வரப்படுகின்றது. பின்னர் 926-ம் ஆண்டில் இரணிய கர்ப்பம் என்ற ஓர் அடியந்திரம் நடத்தப்பட்டது. இதல்லாமல் ஊட்டுச் சாலைகள், சத்திரங்கள், தண்ணீர் பந்தல், அம்பலங்கள், கிணறுகள் முதலியவைகள் நாட்டில் ஏற்படுத்தினார். ராமய்யன் தளவாயின் செல்வாக்கின் பயனாக பார்ப்பனர்களுக்குப் பெருத்த தானங்கள் வழங்கப்பட்டன. கன்னியாகுமரிக் கருகாமையில் மஹாதானபுரம் என்று வழங்கும் ஓர் கிராமம் இருக்கின்றது. அக்கிராமத்தைப் பார்ப்பனர்களுக்காக அரசன் தானம் செய்ததாகும். இவ்வாறு பல கிராமங்களும், ஏராளமான நிலங்களும் பார்ப்பனர்களுக்கு இவரது அரசாட்சியில் கிடைத்தது.

திருவிதாங்கூரைப் பெருக்க வேண்டுமென்ற ஆசை அரசன் மனதை விட்டு அகலவில்லை யாதலால், போர் புரிந்து நாட்டின் எல்லையை மேலும் பெருக்கிக் கொண்டே வந்தார்.

ஸ்ரீமார்த்தாண்டவர்ம மஹாராஜா அவர்கள் 904-ம் ஆண்டு முதல் 933-வரை, தமது ஆட்சி காலத்தில், நாட்டின் எல்லையைப் பெருக்கியதோடு நில்லாது பல வசதிகளும், நாட்டு மக்களுக்குச் செய்து வந்தாரென்பது குறிப்பிடத்தக்கதாகும். நாஞ்சி நாட்டில் விவசாய சௌகரியத்தை எண்ணி பொன்மனை அணையும், புத்தனாறும் பயன் தருமாறு செய்து முடித்தார். அநேகம் ரோடுகள் வெட்டித் திருத்தி மக்களின் வசதியை மனதில் கொண்டுழைத்ததின் பயனைத் திருவிதாங்கூர் வாசிகள் இன்றும் போற்றிக் கூறி வருகின்றார்கள். சோலைகள் பல ஏற்படுத்தினார். வியாபாரத்தைப் பெருக்குவதற்குப் பெருத்த உபயோகமா யிலங்கும் பண்டக சாலைகள் பல ஆங்காங்கு நிறுவ ஏற்பாடு செய்தார். உப்பளங்கள் (Salt Factories) உற்பத்தி செய்தார். இவ்வாறு பல காரியங்கள் செய்து நாட்டை நன்னிலைமைக்குக் கொண்டு வந்த வீர மார்த்தாண்ட வர்ம மஹா ராஜாவுக்கு, அப்பெரியாரின் சந்ததிகளும், நாட்டு மக்களும் பெரிதும் கடமைப் பட்டிருக்கின்றார்கள் என்பதை ஈண்டுக் குறிப்பிடுகிறோம்.

அன்பு, சாந்தம், உண்மை முதலிய நற்குணங்களால் நமது ஒழுக்கங்களை அழகாக்குவதே முறை.

904-ம் ஆண்டில் குமார சுவாமி பிள்ளை என்பவர் படைத் தலைவராக யிருந்து அரிய பெரிய ஊழியங்கள் ஆற்றியுள்ளார். மார்த்தாண்டவர்மா மஹா ராஜாவின் ஆட்சி காலத்தில் ஆறுமுகம் பிள்ளை, தாணு பிள்ளை, ராமய்யன் என்று மூவர் தளவா வேலை பார்த்து வந்தார்களென்று சரிதையில் காணக் கிடக்கின்றது. திருவிதாங்கூர் தேசத்தை இத்துணை தூரம் உயர் நிலைமைக்குக் கொண்டுவருவதற்கு மூலகாரணமாயிருந்த மார்த்தாண்ட வர்மாவின் நுட்ப புத்தியும், அனுபவ சித்தாந்த உண்மையும் போற்றத் தக்கதேயாகும்.

ரவிவர்ம மஹா ராஜாவின் புதல்வர்களாகிய பப்புத்தம்பியும் இராமன் தம்பியும் ராஜ்ய உரிமை தங்களுக்கு வேண்டு மென்று ஆசைப் படுவதற்குக் காரணமுண்டு. மருமக்கத்தாயம் என்ற வழக்கம் திருவிதாங்கூரில் மட்டுமே நடைமுறையி லிருக்கின்றது. இது ஓர் விந்தையான வழக்கமேயாம் காஞ்சீபுரம் க்ஷேத்திரத்தில் சிலாலேகனம் ஒன்று காணப்படுகின்றது. அவை: 1. சுஸ்திஸ்ரீ ஜயஸிம்ஹ இத்திய ஹீபீத: ஸோமான்யயோத்தம்ஸகோ, 2. ராஜாஸீதிஹகோளே ஷ விஷயே நாதோ யதுக்ஷமா பிரதாம், 3. ஜாதோ ஸ்மாத் ரவிவர்ம பூபதிருமா தேவ்வியாம் குமாரசிவாத், 4. தேஹவியாப்பிய சகாத்பஜி ஸமயே தேஹீவஷீ ரோரஸ: என்பதாகும். இதிலிருந்து கொல்லம் அரசர்கள் மக்கத்தாயம் என்று எண்ண யிடமேற்படுகின்றது. இவர்களின் உற்ற உறவினரே திருவிதாங்கூர் அரச குடும்பத்தைத் சார்ந்தவர்கள் என்று சரிதத்திலிருந்து அறிகின்றோம். மேலும் பாண்டிய அரசர்களோடு உறவு காணப்பட்டமையாலும், மக்கவழியாகவே யிருத்தல் வேண்டுமென்று கருத யிடமேற்படுகின்றது. ஆனால் எப்படியோ இன்று திருவிதாங்கூர் அரசர் மரபில் மருமக்கத்தாயம் நடைமுறையில் காணப்படுகின்றது. இதைக் குறித்து ஆராய்ச்சி செய்யின் விரியும்.

உத்தம வீரனாகிய மார்த்தாண்ட வர்மனின் உயர் சரிதை நம்மனோருக்கு உள்ளத்தில் புத்துணர்ச்சியையும், தைரியத்தையும், விடா முயற்சி வெற்றி தரும் என்ற உயரிய மனப்பான்மையையும் ஓங்கச் செய்யுமென்பது உறுதி. மதுரை அரசர் விருந்தினராகச் சுமார் 3 வருட காலம் தங்கி அரச குடும்பத்தைச் சார்ந்த நங்கை யொருவளை மனைவியாக்கி, நாட்டிற்கு அழைத்து வந்தார். மதுரை மந்திரியாகிய அழகப்பன் முதலியாரும் திருவிதாங்கூர் அரச குடும்பத்திலிருந்து பெண்மணி யொருவளைத் தன்னுடன் அழைத்துச் சென்றதாகவும் அறிகின்றோம். மதுரை அரசருக்கும் மார்த்தாண்ட வர்மனுக்கும்

கடலில் நிற்கும் கற் பாறை போல் உறுதியாய் நிற்பவனை உலக அலை—கவலை அசைப்பதில்லை. குன்றின் மேல் தோன்றும் கோபுரம்போல் அபாய காலத்தில் அசையாமல் நிற்பவனே தைரியசாலி.

இந்தியரது கல்வி இலட்சியம்.

(287-ம் பக்கத் தொடர்ச்சி.)

பண்டித திரு. சாமுபதி அவர்கள், M. A.

குருகுலத்தில் பிரமச்சாரிகள் யாவரும் சமத்துவமாக நடத்தப்படுகின்றனர். தோட்டி மகனும், தொண்டமான் மகனும் ஒன்றாகவே வாசித்து விளையாடி, உண்டு இன்புறுகின்றார்கள். பிறப்பு அந்தஸ்துக்கும் குடும்ப அந்தஸ்துக்கும் அங்கு இடமில்லை. குபேரன் மகனும், கூலிக்காரன் மகனும் அவரவர் அந்தஸ்தை மறந்து விடுகின்றனர். முன்னால் கூறியபடி அவர்கள் தேசத்தின் சம்ரட்சணையில் வளர்வதால், யாவரும் சம அந்தஸ்துடைய சகோதரர்களெனக் கருதப்படுகின்றார்கள். ஆனால் பொருளாதார நிலையைப் பொறுத்திராத மதிநுட்பத்தில் அவர்களுக்குள் வேற்றுமை உண்டு. பல ஆண்டுகள் ஒன்றாக வாசிப்பதால், அவர்களுக்குள் ஜீவிய முழுதும் நிலைத்திருக்கக் கூடிய சகோதர உணர்ச்சி உண்டாகி விடுகிறது. தனவந்தன் மகனுக்குக் குற்றேவலாளர் உதவியின்றித் தானே சகலத்தையும் செய்துகொள்ளும் நற்பழக்கம் குருகுலத்தில் உண்டாகிறது. தற்-

நெருங்கிய நட்புண்டு என்று எண்ணப் பல ஆதாரங்கள் இருக்கின்றன. இணக்கத்திற்கு இணக்கமாகவும், பிணக்கத்திற்குப் பெரிய பிணக்கமாகவும் இருந்திருக்கிறது மார்த்தாண்ட வர்மனின் குணம். உத்தியோகஸ்தர்களின் உண்மை யோக்கியதையறிவதில் அரசர் பேர்பெற்றவரென்பதை அவரது சரிதை இனிது விளக்குகின்றது. எதிர்கால நாட்டு மக்களாகிய இளைஞர்கள் இவ்வித சுத்த வீரர்களின் சரிதையைப் படிக்கவேண்டியது நாட்டிற்குப் பெருத்த நன்மை பயப்பதாகும்.

வாலிபம் அதிசயிக்கத் தக்க சக்தி வாய்ந்ததாகும். ஆனந்த மயமான மனக்கோட்டை கட்டிக் களிப்பதிலும் பகற் கனவு காண்பதிலும் வாலிபத்துக்கு விருப்ப மதிகம்.

காலப் பொருளாதார நிலையினால் உலகம் பிளவுபட்டு, முதலாளிகளுக்கும் தொழிலாளருக்கும் ஓயாத போர் நடந்து கொண்டிருக்கிறது. தனவந்தன் மகனைக், கூடப் படித்த ஏழைச் சகோதரனுக்கு உதவி செய்யத் தூண்டி, குருகுலம் பணக்காரர்களின் கொடுமையைப் போக்கியும், ஏழைகளின் பொறாமையை அகற்றியும் இரு சாராரிடையும் பரஸ்பர ஒத்துழைப்பை வளர்க்கிறது. விரிஷ்ணிஸ் அரச குலத்தில் உதித்த கிருஷ்ணன், பிராமணச் சிறுவனாகிய சூதமன்* ஆகிய இருவருடைய கதை மிகச் சுவையுடையது. பிற்காலத்தில் இருவருக்கிடையிலும் பெரும் விருக்ஷமாகத் தோன்றிப் பேரன்பிற்கும் உபசரிப்புக்கும் சாண்டிபணி குருகுலத்தில் வித்திடப்பட்டது. கந்தையணிந்த வேதியனை அரசன் அன்புடன் அரண்மனையில் வரவேற்றார். குருகுலத்தில் இருவரும் சேர்ந்து குருவுக்குப் பணியாற்றிய விஷயங்கள் கிருஷ்ணன் மனதை விட்டகலவில்லை. அரச போகத்தை அனுபவித்துக் கொண்டிருக்க தன் கல்வித் தோழன் உண்ணவும் உணவின்றித் தவிப்பதைப் பார்க்க அவன் மனம் சகிக்கவில்லை. பள்ளி நட்பே நீடித்திருக்கக் கூடியது. ஆதலால் உலகில் உயர்வு தாழ்வற்று, சகோதர உணர்ச்சி தழைத்தோங்க வேண்டுமானால், அரச குமாரன் முதல் கூலிக்காரன் மகனீறாகவுள்ள சகலரும் குருகுலத்தில் கல்வி பயில வேண்டும்.

குருகுலப் படிப்பில் ஒளிர்கின்ற தத்துவங்களால் மாணவனுக்கும் ஆசிரியருக்கும் உள்ள நெருங்கிய பழக்கம், ஆசிரியரின் அபார ஆன்ம சக்தி, அவரது கூர்ந்தமதி, குருகுல ஏகாந்தம், அதன் அழகு, அதன் தூய்மை, பிரமச்சாரியம், தன்னடக்கம், எளிய வாழ்வு, உயரிய நோக்கத்திற்கு வேண்டிய அதன் கண்டிப்பான சட்ட திட்டங்கள், முதலிய பிறவும் எந் நாட்டாரும் உவந்து ஏற்றுக்கொள்ளத் தக்கன. வனத்தில் கூடாரங்கள் அமைத்து, அங்கு தங்கிப் படிக்கும் அமெரிக்கர் முறை குருகுலப் போதனா முறையை ஒரு சிறிது பின் பற்றுவதா யிருக்கிறது. மேற்கூறிய தத்துவங்கள் பார் முழுதுக்கும் பயன் படுவனவா யிருப்பதால், ஒருவன் இவைகளைக் கைக்கொண்டொழுகின் வச்சிரம் போன்ற தேகத்தையும், குன்றா ஒழுக்கத்தையும் பேரறிவையும் பெற்று மேன்மை யுறுவனெனச் சொல்லத் தேவையில்லை.

இந் நாளிலே பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் தாய்ப் பாஷைகளின் மூலம் கல்வி போதிப்பதற்கும் குருகுலந்தான் வழி காட்டியா யிருந்தது. தாய் பாஷையில் கல்வி கற்பிக்கப்பட வேண்டிய அவசியத்தைத் தற்காலம் சகலரும் ஒப்புக்கொள்வர். அருங்காலம் விதேச பாஷை பயில்வதில் வீணாகிற தென்பதையும், அதன்

---

* குசேலர்.

பின் அதில் தன் எண்ணங்களை வெளியிட இந்திய சர்வகலாசாலைப் பட்டதாரியும் அசக்தனா யிருக்கிறான் என்பதையும், இப்பொழுது தான் நம் தேயத்து கல்வி விற்பன்னர்கள் (Educationists) உணர்ந்து வருகின்றனர். ஓர் இந்திய சர்வகலாசாலையின் பி. ஏ. (B. A) பரீக்ஷைக்கு பரிசோதகரா (Examiner) யிருந்த ஆங்கிலேயர் ஒருவர், "இந்திய சர்வகலாசாலைப் பட்டதாரிகளை விடத் தனது நாய்க்கு நல்ல ஆங்கிலம் தெரியும்" என இழி மொழி பகர்ந்துளார். இதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. இந்திய சர்வ கலாசாலைப் பட்டதாரி, இந்திய பாஷைகளைக் கற்பது கௌரவக் குறைவு எனப் புறக்கணித்து, ஆங்கிலத்திலும் போதிய பயிற்சியில்லாது போகின்றான். அவன் நிலை என்ன? தனது எண்ணங்களையும், உணர்ச்சிகளையும் வெளியிடும் விஷயத்தில் அவனுக்கும் ஒரு வாயில்லாப் பிராணிக்கும் யாதொரு வித்தியாசமுமில்லை. குருகுலங்கள் இந் நிலமையை மாற்றி, தாய் மொழி, நாட்டு மொழி இவைகள் பரவுவதற்கு ஆக்கம் அளித்துள்ளன. ஆங்கிலத்தையே பிரதானமாகக் கொண்டுள்ள இந்திய சர்வ கலாசாலைகளிலும் இப்போது ஹிந்தி, எம். ஏ. (M. A.) பரீக்ஷைக்கு ஓர் பாடமாக வைக்கப்பட்டிருக்கிறது. இச் சர்வகலாசாலைகளின் மாணவர் இதுவரை "பாபுஸ்" (Baboos) எனக் கருதப்பட்டனர். இப் பதத்திற்கு சேம்பர்ஸ் என்சைக்கிளோப்பீடியா (Chambers Encyclopaedia) என்னும் ஆங்கில நூலில் "ஆங்கிலத்தில் மேற்போக்கான அறிவுடைய இந்தியர்" எனப் பொருள் கூறுகிறது. என்ன கியாதி! குருகுல மாணவனோவெனில் தாய்மொழியில் பேசியும் நாட்டு மொழியை வாசித்தும் தெளிவுறப் பயில்கின்றான். உண்மையில் அவன் இரு பாஷைகளையும் உணரும்போது இரண்டு முறைகளையும் கையாளுகிறானெனினும், அவை அளவில்தான் வித்தியாசப்படுகின்றன. குருகுல மாணவன் ஒவ்வொருவனும் நாட்டு மொழியில் நன்கு பேசக்கூடும். அத்துடன் வருஷாந்தர உற்சவ சமயங்களில் அவர்கள் வேகமாக தேச பாஷை பேசுவதைக் கேட்டு ஆனந்திக்கலாம். ஹங்கேரி குருகுலப் பட்டதாரிகள் ஹிந்தியில் பல நூல்கள் எழுதி அதன் இலக்கியத்தைப் பெருக்கி யிருக்கின்றார்கள். அவர்கள் நாட்டுக்குப் புரிந்துள்ள இப் பணியே குருகுலத்திற்குப் பெருங் கௌரவம் அளிப்பதா யிருக்கிறது. சமஸ்கிருதம் நன்கு தெரிவதினால் பொருள் ஈட்ட முடியாவிடினும் வயது முதிர முதிர அது ஓர் பெரும் ஆஸ்தியாகக் கருதப்படுகிறது. ஜெர்மானிய தத்துவ ஞானிகள் உபநிஷத்துக்களால் தங்கள் மரணாவஸ்தையினின்றும் விடுபட நம்பினார்களென்றால், அவைகளைப் படிக்

அறிவாளியின் நாக்கு அவனது ஹிருதயத்தில் இருக்கிறது. மூடனது ஹிருதயம் அவனது வாயில் இருக்கிறது.

கும் ஒவ்வொரு வயோதிகரும் ஆறுதல் அடைவார்களென்பது சொல்லாமலே விளங்கும். தொல்லியற் கலைஞர் (Antiquarian) சமஸ்கிருதத்தில் புத்தம் புது விஷயங்களைக் கண்டுபிடித்து வருகின்றனர். சமஸ்கிருத இலக்கியத்தில் விஞ்ஞான சாஸ்திரங்களும் (Positive Sciences) இல்லாமலில்லை. இதினின்றும் கிடைத்திருக்கும் விஷயங்கள் பண்டிதருக்கு மாத்திரமன்றி பாமரருக்கும் மிக்க பயன்படக்கூடியனவாக யிருக்கின்றன. தொல்லியற் கலைஞர் முற்காலத்தைத் தற்காலத்தோடு ஒப்பிட்டு நாட்டின் நாகரீக வளர்ச்சிக்கு அரும் சேவை புரிவது போற்றத் தக்கது.

சமஸ்கிருதத்தை உயர்த்திக் கூறியதிலிருந்து ஆங்கில பாஷை உபயோகமற்றது எனக் கூறியதாக எண்ணிவிட வேண்டாம். குருகுலத்தில் ஆங்கிலம் முக்கிய பாடமாக யில்லாவிடினும், பயனற்றது எனப் புறக்கணிக்கப்படவில்லை. மற்ற சர்வகலாசாலைகளின் கல்லூரிகளில் சமஸ்கிருதம் போதிக்கப்படுவதைக் காட்டிலும், குருகுலத்தில் ஆங்கிலம் அதிக கவனத்துடன் கற்பிக்கப்படுகிறது. பிரமச்சாரி ஆங்கில சாஸ்திரங்களையும் கலை நூல்களையும் இலகுவில் கற்றுணரும் சக்தியுடையனா யிருக்கிறான். அவன் இப் பாஷையில் தன் கருத்துக்களை வெளியிடுவதுதான் கிடையாது. ஆனால் அவ்விதம் முயன்ற சிலர் இதில் எழுதவும் பேசவும் திறமை வாய்ந்து விளங்குகின்றனர். பிரமச்சாரி தற்கால முற்கால இலக்கிய பொக்கிஷங்களுக்குத் திறவுகோல்களைப் பெற்றுப் புராதன நூதன இலக்ஷியங்களுக்கு உறைவிடமாய் இலங்குகிறான். அவன் இந்தியாவின் புராதன நாகரீகத்தைக் கைவிடாமலும், தற்கால சாஸ்திரம், கலை முதலியவைகளை உவந்து ஏற்றும் இந்திய நாகரீகத்தைச் சிறப்பிக்கிறான்.

சகல தேய மக்களும் குருகுலத்தில் கல்வி பெறின் உலகின் பொருளாதார தேசீய நிலைகள் யாவும் மாறுதலடையும். சமூகப் பராமரிப்பில் மாணவர் படித்திருப்பதினால், தங்களை நாட்டின் தொண்டரெனக் கருதி வாழ இடமேற்படுகிறது. அன்னையினும் அதிக காலம் வளர்த்தது தேசமே என்பதை எவ்வாறு அவர்கள் மறக்கமுடியும்? ஜன சமூகத்தின் பல பிரிவுகளிலிருந்தும் வந்த யாவரும் ஒருவரோடொருவர் நெருங்கிப் பழகி நட்புக்கொள்ளக் குருகுலம் சந்தர்ப்பம் அளிக்கிறது. ஹரிதுவாரக் குருகுலத்தில் பார்ப்

மனித சமூக முன்னேற்றத்திற்கு வாலிபர்களுடைய மனக் கோட்டைகளும் கனவுகளும் அதிகமாகப் பயன்பட்டிருக்கின்றன வென்பது சரித்திர பூர்வமான உண்மையாகும்.

பணச் சிறுவனுக்கும் அறியாமையால் தீண்டத் தகாதார் எனக் கருதப்படும் பஞ்சமப் பையனுக்கும் வித்தியாசம் காண்டலரிது. நானாவித ஜாதி, நிலைமைகளுடைய இளைஞர்கள் குருகுலத்தில் சமத்துவமாக நடத்தப்பட்டு வந்திருப்பதால், சந்தடியின்றி ஓர் சமுதாய சீர்திருத்தம் நடைபெற்றிருக்கிறது. இந்தியாவின் பல மாகாணங்களிலிருந்தும் பர்மாவிலிருந்தும் அநேகர் குருகுலத்திற்கு வந்து, கல்வி பயின்று சென்றிருக்கின்றனர். மேனாட்டாரும் தங்கள் குழந்தைகளை இந்தியரிடம் சர்வதேச சகோதரத்துவத்தைப் பற்றிய மேலான பாடங்களைக் கற்க அனுப்புங் காலம் சீக்கிரம் வருமென நாங்கள் எதிர்பார்க்கிறோம். அப்போது சகல தேச மக்களும் இந்திய ஆசிரியர்களிடந்தான் அவரவர் நாட்டுக்குரிய வாழ்வின் நியதிகளைக் கற்க வரவேண்டும் என்ற மனுவின் வாக்கியம் தற்காலத்தும் மெய்த்துவிடும்.

கனவான்களே! கடைசியாக, தினசரி பாடம் ஆரம்பிக்கு முன் மாணவனும் ஆசானும் செய்யும் பிரார்த்தனையை இங்கு தருகிறேன். இச் சிறு ஜெபத்தில் குருதலத்தின் முழு இலக்ஷியமும் அடங்கியிருக்கிறது. இதைத் திரும்பத் திருமப உச்சரிப்பதின் மூலம் குருகுலவாசிகள் இதன் வயப்படுகின்றனர். இதுவே குருகுலத்தின் உயிர் நாடியாகவிருந்து, அவர்களின் உணர்ச்சியைக் கிளப்பி, அவர்களை வேலை செய்யத் தூண்டுகிறது. அது வருமாறு: "ஆண்டவன் நம்மைப் பாதுகாப்பாராக! நம்மைப் போஷிப்பாராக! நமக்கு அபார சக்திகளை அளிப்பாராக! கல்வியால் நாம் பெரும் புகழ் எய்துவோமாக! பகைமையை நாம் ஒழிப்போமாக!" என்பதாகும்.

குருதலக் கல்வியின் முதல் நோக்கம் தங்களையும் தங்கள் சமூகத்தையும் பாதுகாக்கும் ஆண்மையை இளைஞரிடை உண்டாக்குவதாகும். ஆபத்து வந்துற்றகாலை தங்களையும் தேச மக்களையும் பாதுகாக்க முன்னணியில் நிற்கும்படி அவர்களுடைய தேகங்கள் எஃகு போன்றவைகளாகயிருக்க வேண்டும்.

இரண்டாவது நோக்கம் பிரமச்சாரியை, சம்பாதிக்கும் சக்தியுடையவனாகச் செய்வதாகும். தன் குடும்பத்தைப் போஷிப்பது அவன் பொறுப்பாகயிருக்கிறது. குடும்பம் என்னும் வார்த்தைக்கு முற்காலத்தில் விரிவான அர்த்தம் இருந்தது. விருந்தினரை உபசரிப்பது இந்திய இல்லறவாசியின் மதக் கடமை. தன்னிடம் வரும் விருந்தினரை உபசரித்து, உணவளித்து,

---

உனது வார்த்தைகளெல்லாம் அம்புகளாகாதபடி கணக்குப்படி அன்புடன் பேசு.

தங்க வசதி கொடுப்பது மாத்திரமன்றி நகர் புகாதுறையும் பிரமச்சாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசி ஆகிய இவர்களையும் பாதுகாப்பது இல்லறவாசியின் கடன். தன் சம்பாத்தியத்தினால் ஜனசமூகம் விரும்பும் பல தர்மங்களையும் செய்து, எஞ்சியதை தன் சுற்றத்தாருக்குப் பங்கிட்டுக் கொடுத்து, தானும் அனுபவித்து எழிலுற இல்லறம் நடத்தல் வேண்டும். இல்லற வாழ்வில் ஒருவனுடைய சக்திகள் பல விதத்திலும் சிதைவுருவதால் அதற்கு ஈடு செய்யத் தக்க விதமாய் கல்வி முறை அமைந்திருக்க வேண்டும்.

மேற்கூறிய பாதுகாக்கும் சக்தியையும் சம்பாதிக்கும் சக்தியையும் பிரமச்சாரி அடைவதுடன், புகழ், கல்வி, அன்பு ஆகிய இம் மூன்றையும் வளர்க்கக் கடமைப்பட்டுள்ளான். வேறெக் கல்வி இலட்சியங்கள், இவ்வளவு உயர்ந்தும் இவ்வளவு பரந்த நோக்கமும் கொண்டிருத்தல் முடியும்? குருகுல மாணவன் சேமிக்கும் சக்திகள் தனக்கு மாத்திரம் சொந்தமன்று. தேசத்தின் ஒப்புயர்வற்ற பிரதிநிதியாக விளங்கும் ஆசிரியருடன் அவன் அவைகளை அபிவிருத்தி செய்கிறான். இவ்விதம் மாணவன் வாழ்வு கேவலம் சுயநல வாழ்வாகக் கூடாதென்ற விரதம் தினசரி பலப்படுத்தப்படுகிறது.

பிரமச்சரி தன் தேச நலத்தையும் உலகச் சேமத்தையும் பற்றியே சதா நினைக்கிறான்.

முற்காலத்தில் கல்வி, ராஜதந்திரிகளின் ஓர் கருவியாயிருக்கவில்லை. ஆசிரியர் கொற்றவனுக்குங் கட்டுப்படாத அவ்வளவு சுதந்தரமுடையவராயிருந்தார். தன் ராஜ்யத்திலுள்ள கல்வி ஸ்தாபனங்களுக்குப் பாதுகாப்பும் பொருளுதவியும் அளிப்பதுடன் அரசன் கடமை நின்றுவிட்டது. குருகுலத்தின் கொள்கையை நிர்ணயித்து, அதன்படி நடப்பது உபாத்தியாயர்களின் கடமையைப் பொருத்திருந்தது. அவர்கள் உயர்ந்த எண்ணமும் பரந்த நோக்கமுங் கொண்ட, விருப்பு வெறுப்பற்றுச் செந்தண்மை பூண்ட பெரியார்களாய் விளங்கினர். தன் தேயம் அன்னியருக்கு அடிமைப்படவும், அன்னிய நாட்டைத் தானடக்கியாளவும் விரும்பாத மனப்பான்மையுடைய சிலர்களைக் குருகுலம் ஈன்றது. பண்டைப் பிரஜைகளின பெருமைதான் என்னே!

கனவான்களே! தகதகவென்று கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருக்கும் பகைமையைப் போக்கி, உலக மக்களிடை சமாதானத்தை நிலைநிறுத்த புராதனப் பிரஜாக் கொள்கையை

அறிவுள்ளவர்கள் அதிகம் நினைப்பதால், அவர் கொஞ்சமாய்ப் பேசுகிறார்கள்.

ஒரு சொட்டு இரத்தம்.

(ஒரு சிறு கதை.)

திரு. O. P. தேசிகன் அவர்கள்.

விடியற்காலை; பொழுது விடிவதற்கு இரண்டு மணி நேரத்திற்கு மேலிருக்கும். டாக்டர் வனமாலி இன்னும் நித்திரை கலைந்து எழுந்திருக்கவில்லை. அவருடைய வீட்டு வாயிற்கதவு தடதடவென்று தட்டப்பட்டது. கதவைத் திறந்த வேலையாளிடம் யாரோ ஒருவர், தான் டாக்டரை மிகவும் அவசரமாகப் பார்க்க வேண்டுமென்றும், தன்னால் ஒரு நிமிட நேரமேனும் காத்திருக்க இயலாதென்றும், நித்திரையிலிருந்தாலுங்கூட அவரை உடனே எழுப்பியாக வேண்டுமென்றும், பிடிவாதங் கலந்த உரத்த த்வனியில் வார்த்தையாடிக் கொண்டிருந்தார். இது டாக்டரின் செவிகளில் நுழைந்தது. வேலையாள் எவ்வளவோ தடுத்துக் கூறியும் கேளாமல் அந்த மனிதன் மிகவும் அசாதாரணமான அவசரத்தோடும் பரபரப்போடும் அவனிடம் பதிலளித்ததைச் செவியுற்ற அவர் தன் வேலையாளை விளித்து, "நல்லது, அவரை உள்ளே வரச் சொல்" என்று கூறித் தனது உடைகளை யணிந்துகொண்டு அவரை வரவேற்பதற்குச் சித்தமானார்.

உள்ளே வந்தவர் மிகவும் நேர்த்தியாகவும், நாணயமாகவும் உடையணிந்திருந்தார். அவருடைய முகத் தோற்றத்தையும், ஆடைகளின் நேர்த்தியையும் கவனித்த டாக்டர், அவர் கௌரவமான குடும்பத்திலுதித்தவராக யிருக்கவேண்டுமென்று கருதினார். ஆனால் அவரது முகம் சவம்போல் வெளுத்திருந்தது. அன்றியும் அவருடைய முகக் குறிகளிலிருந்து அவர் சகிக்கவொண்ணாத துன்பத்தை யனுபவித்துக் கொண்டிருக்க வேண்டுமென்று புலனாயிற்று. அவருடைய வலக்கரமானது ஓர் துணியினால் இறுகக் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தது. இடையிடையே ஓர் சிறு சத்தம்—அதைப் புலம்பல் என்றே கூறலாம்—அவருடைய தொண்டையினின்றும் வெளிப்பட்டது. "தயவு செய்து உட்காருங்கள்; உங்கள் உடம்புக்கு என்ன? நான் தங்களுக்கு என்ன செய்யக்கூடும்?" என்று அவரை நோக்கி டாக்டர் வினவி, ஒரு நாற்காலியைச் சுட்டிக் காட்டினார்.

"ஐயா, நான் சரிவர நித்திரை செய்து ஒரு வாரத்திற்கு மேலாகிறது. எனது வலக் கையில் ஏதோ தொந்தரவு ஏற்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் இன்னதென்று எனக்குத் தெரியவில்லை. ஆதியில் அதனால் எனக்கு அதிக உபத்திரவ மேற்படவில்லையாயினும், நாளாக ஆக அது குபீரென்று தீப்பற்றி எரிவதுபோன்று ஒரே எரிச்சலாகவும், குத்தலாகவுமிருக்கிறது. அதனால் ஒரு நிமிஷங்கூட எனக்கு நிம்மதியில்லை. மணிக்கு மணி அதிகரித்துக்கொண்டே வரும் இத் துன்பத்தை—இம் மரண வேதனையை என்னால் வருணிக்கவே முடியாது. இன்னும் ஒரு மணி நேரம் மட்டுமே இதே மாதிரியாக இருக்கும் பக்ஷத்தில் எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும். அதைச் சுட்டெரித்தோ அல்லது அறுத்தெடுத்தோ அல்லது ஆபரேஷன் செய்தோ, எப்படி வேண்டுமானாலும் செய்து எனது வலியைப் போக்குங்கள்" என்று தவித்தார் அம் மனிதர். ஆபரேஷன் ஒன்றும் செய்யாமலேயே தான் அதைக் குணப்படுத்த முடியுமா என்று முதலில் ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று டாக்டர் கூறினார். பிணியாளி மிகுந்த கஷ்டத்துடன் தனது வலக் கையைத் தூக்கி டாக்டரிடம் காண்பித்தார். "தங்கள் கண்களுக்கு அந்த இடத்தில் ஏதேனும் காயமோ அல்லது வியாதிக் குறைகளோ தென்படாதது பற்றி நீங்கள் அதிசயமடைவீர்கள்; ஆனால் என்னுடைய வியாதியானது அசாதாரணமானது; விசித்திரமானது. எனக்குத் தாங்க முடியாத வேதனையை யுண்டாக்கும் அந்த இடத்தை அடியோடு கீறியெடுப்பதைத் தவிர இந் நிலையில் வேறொன்றும் உபயோகப்படாது."

தனது அனுபவத்தில் அதனிலும் அபூர்வமான கேசுகளைத் தான் பார்த்திருப்பதால், தான் அதிசயமடைய வேண்டியிராதென்று டாக்டர் கூறி, நோயாளியின் கரத்தைப் பரிசோதிக்கத் தொடங்கினார். ஆனால் அவர் எதிர்பார்த்ததற்கு மாறாக, நோயாளியின் கரத்தை

(Formula of Citizenship) தேசங்களின் பெயரால் உயிர்ப்பிக்க நீங்கள் விரும்பவில்லையா?

அந்தக் கொள்கை வருமாறு:— நாம் பயிலும் கல்வி நம்மைப் பாதுகாத்து, நம்மைப் போஷித்து, நம் சக்திகளை வளர்த்து, நமக்குப் பெரும் புகழ் நல்கி, பொறாமைக்கும் பகைக்கும் வயப்படாதபடி நம்மைத் தடுத்தாட் கொள்ளுமாக!

நீ தவறி விழுந்தால், மறுபடியும் எழுந்து நிற்கலாம். நீ தவறிச் சொன்ன சொற்களை மறுபடியும் கூப்பிட்டுக்கொள்ள முடியாது.

வெகுநேரம் கூர்ந்து பரிசோதித்தபோதிலும், தம்மை நாடி வந்தவருக்கு ஒருவிதமான வியாதிக் குறியையேனும் அல்லது அவருக்கு அவ்வளவு கொடிய துன்பத்தை விளைவிக்கக்கூடிய நோயின் சின்னங்களையேனும் அவரால் காணமுடியவில்லை. அவரது ஆச்சரியம் மேலிட்டது.

உண்மையில் அந்த வலக் கையானது மற்ற கரத்தைப்போல் சாதாரணமாகவே காணப்பட்டது. நிறத்தில்கூட வித்தியாசத்தைக் காணோம்!

ஆனால் அந்த மனிதனோ வாயினால் விவரித்தற்கரிய பயங்கரமான வேதனையை யனுபவித்து வந்திருக்க வேண்டுமென்பதில் அவருக்கு ஐயமில்லை. ஏனெனில் டாக்டர் அவரது கையைத் திடீரென்று கீழே தொங்கவிட்டபோது, அதைப் பூர்வ ஸ்திதிக்குக் கொண்டுவருவதற்குள் அவர் தவியாகத் தவித்தது அதை ருசுப்பித்தது.

“உங்களுக்கு எந்த இடத்தில் தொந்தரவு கொடுக்கிறது?”

தனது கையில் இரண்டு நரம்புகளுக்கிடையே ஓரிடத்தைச் சுட்டிக் காட்டினார் அம் மனிதர். டாக்டர் அந்த இடத்தைத் தன் விரல் நுனியினால் தீண்டுவதற்குள் ‘வெடுக்’கென்று அக் கரத்தை அவர் உள்ளே யிழுத்துக்கொண்டார்.

“அந்த இடத்தில்தானே வலி?”

“ஆமாம். வலியென்றால் சாமானியமானதல்ல; நான் சொல்வதைவிட அதைத் தாங்களே ஊகித்துக்கொள்ளலாம்.”

“எனது விரல் அவ்விடத்தில் பட்டவுடனே தங்களுக்கு எப்படியிருந்தது?”

நோயாளி அதற்குப் பதில் கூறவில்லை; ஆனால் அவர் கண்களினின்றும் தானாகப் பெருகிய நீரானது அவரது உணர்ச்சியை வெளிக்குக் காட்டியது. டாக்டர் மீண்டும் அந்த இடத்தை அணுதரிசனியைக்கொண்டு அதிநுட்பமாகப் பரிசோதித்துப் பார்த்தார். நோயாளியின் ‘டெம்பரேச்சரை’ யெடுத்தார். அப்பொழுது அவருக்கு ஒன்றும் விளங்கவில்லை. முடிவில் தீர்மானமாக, “உங்களுடைய மேற்சருமம் நல்ல ஆரோக்கிய நிலைமையிலேயே யிருக்கிறது. நரம்புகளிலும் ஒன்றையும் கோளாறைக் காணோம். வீக்கமோ, காயமோ ஒன்றும் கிடையாது. நான் எவ்வளவு ஆரோக்கியமுள்ளவனாக இருக்கிறேனோ அவ்வளவு ஆரோக்கியமுள்ளவராகத்தான் நீரும் இருப்பதாகக் காணப்படுகிறது.”

சந்தோஷமே சௌக்கியம்.

“அந்த இடம் சிறிது சிவந்திருக்கிறதல்லவா?”

“எங்கே?”

நோயாளி, தன் வலக் கையின் பின்புறத்தில் ஓர் காலணா அகலத்திற்கு வட்டமாகக் காட்டினார்.

டாக்டர் தன் எதிரே நிற்கும் மனிதனை மீண்டுமோர் முறை நோக்கினார். அவனுக்கு ஒருவேளை சித்தப்ரமை ஏற்பட்டிருக்குமோவென அவர் சந்தேகித்தார்.

“அப்படியாயின் தாங்கள் சில நாட்கள் வரையில் இங்கேயே தாமதிக்கவேண்டும். நாலைந்து தினங்களுக்குப் பிறகு தங்கள் வியாதியின் கூறு இப்படிப்பட்டதென்று நான் நிதானித்து ஓர் முடிவுக்கு வரக்கூடும். அதன் பிறகே நான் ஏதேனும் உங்களுக்கு சிகிச்சை செய்யமுடியுமா என்று பார்க்கலாம்” என்றார் டாக்டர்.

“என்னால் ஒரு நிமிஷம்கூடத் தாமதிக்க இயலாது; டாக்டர்! என்னைப் புத்தி ஸ்வாதீனமிராதவனாகவாவது, அல்லது ஏதோ மனப்பிராந்தியினால் அவஸ்தைப்படுபவனாகவாவது தாங்கள் நினைத்தால், அது தவறாகும். கண்களுக்குப் புலனாகாத அந்த யாதனையினால் நான் படுந் துயரத்தைப் பகவானே யறிவார். தாங்கள் சிறிதேனும் தயங்காமல் அந்த இடத்தில் எலும்பு வரையிலும் ஆழமாகக் கீறி எடுத்துவிட வேண்டுமாக மிகவும் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.”

“நான் அப்படிப்பட்ட காரியமொன்றும் செய்யமுடியாது.”

“ஏன்?”

“ஏனெனில் உங்களது கையைப்பற்றியவரை யாதொரு விதமான கோளாறும் கிடையாது.”

“ஆனால் எனது வார்த்தையில் உங்களுக்கு நம்பகம் ஏற்படவில்லையா? நல்லது” என்று கூறிக்கொண்டே அம் மனிதர் சட்டென்று தன் பணப் பையைக் கையிலெடுத்து, அதிலிருந்து ஒரு ஆயிரம் ரூபாய் நோட்டை யெடுத்து மேஜையின்மீது வைத்தார்.

“டாக்டர், இப்பொழுதேனும் நான் உண்மையையே கூறுகிறேன் என்பதைத் தாங்கள் ஒப்புக்கொள்ளுவீர்களா? எனக்கு இந்த 1000 ரூபாய் ஒரு பெரிதல்ல. நான் அனுபவிக்கும் வேதனையைக் கருதுகையில் அதற்காகக் கொடுக்கப்படும் இந்தப் பணம் ஒருபொழுதும் அதற்கு ஈடாகாது. தயவுசெய்து ‘ஆபரேஷ’னிற்காகத் தங்களைச் சித்தப்படுத்திக்கொள்ளுங்கள்.”

முகமலர்ச்சி யுள்ளவனிடம் லட்சுமி கடாட்சம் தங்கி யிருக்கும்.

"இப் பூமண்டலத்திலுள்ள அத்தனை பணத்தையும் கொண்டு வந்து கொட்டினாலும், நல்ல ஆரோக்கிய நிலைமையிலுள்ள ஓர் அங்கத்தை எனது ஆபரேஷன் கத்தியினால் தொடுவதற்கு உட்படுவேன் என்றுமாத்திரம் தாங்கள் கனவிலும் கருதவேண்டாம்" என்றார் டாக்டர்.

"நீங்கள் ஏன் அப்படிச் செய்ய மறுக்கிறீர்கள்?"

"ஏனெனில் அது தொழில் முறைக்கு விரோதமானது. உங்களுடைய பலவீனத்தை எனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, அதன் மூலம் பணம் பறிக்க நான் விரும்பவில்லை."

"அப்படியாயின் தாங்கள் நான் கடைசியாக இப்பொழுது செய்துகொள்ளும் வேண்டுகோளையேனும் மறுக்கக்கூடாது. நானாகவே இந்த ஆபரேஷனைச் செய்துகொள்ளுகிறேன். எனது கரமானது அதனால் செயலற்றுப் போனாலும் பாதகமில்லை. ஆனால் நானாக ஆபரேஷன் செய்துகொண்ட பிறகு அதனாலேற்படும் காயத்தை பட்டில் சற்று கவனிப்பதாகத் தாங்கள் ஒப்புக்கொண்டால் போதும்."

அவரது வார்த்தைகள் ஒவ்வொன்றும் உண்மை யுணர்ச்சியுடன் த்வனித்தன. மறுகணமே அவர் தனது மேற்சட்டையைச் சுழற்றி உட்சட்டையைச் சரிப்படுத்திக்கொண்டார். வேறொரு கூரிய ஆயுதமும் தன் வசமிராததால், தன்னுடைய பேனாக்கத்தியை யெடுத்துக் கொண்டு, டாக்டர் அதைத் தடுப்பதற்குள்ளாகவே—அதனுடைய உதவியால் ஆழமாகச் சதையில் கீறிவிட்டார்.

டாக்டருக்கு அச்சமுண்டாயிற்று—தன்னுடைய முரட்டுப் பிடிவாதத்தால் நரம்புக் கால்கள் எதையேனும் அவர் வெட்டிக்கொண்டு விடுவார் என்று அஞ்சிய அவர், திடுக்கிட்டு "நீங்கள் இவ்வளவு பிடிவாதம் செய்வதால் நானே அதைச் செய்து முடிக்கிறேன்" என்று கூச்சலிட்டார்.

அதன்பிறகு டாக்டர் ஆபரேஷன் செய்வதற்கு வேண்டிய சகல சாமான்களையும் சித்தப்படுத்தினார்.

ஆபரேஷன் செய்யப்பட்டது; அந்தப் புதுமையான மனிதர் அதை மிகுந்த மனோ தைரியத்துடன் சகித்துக்கொண்டதுமன்றி, அவருக்குப் பேருதவியாகவுங்கூட இருந்தார். அவரது கரமானது சிறிதேனும் நடுங்கவேண்டுமே! அதுகூட இல்லை. குறித்த இடத்தில் காலணா அகலத்திற்கு மேற் சதை துண்டித் தெடுக்கப்பட்டவுடன் அவர் சற்று நிம்மதியடைந்தவராகப் பெருமூச்சு விட்டார், பெரிய பாரமொன்று தோளிலிருந்து கீழே இறக்கியதுபோல்.

"இப்போது வலி எப்படி யிருக்கிறது?"

"கொஞ்சங்கூட இல்லை; வலி யடியோடு நின்றுவிட்டது. கத்தியினால் காயப்படுத்தியதுகூடக் குளிர்ந்த காற்று வீசுவதுபோ லிருக்கிறது. இரத்தம் வடிவதுகூட எனக்கு இதமாகவே யிருக்கிறது."

காயத்தின்மீது கட்டு கட்டப்பட்டது. ஆபரேஷனுக்குப் பிறகு பரம சந்தோஷமடைந்த அவரது தோற்றமே அடியோடு மாறிவிட்டது. டாக்டருக்குத் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தபின் அவர் வெளியேறினார்.

*   *   *   *   *

அதற்குப் பின் வெகுநாட்கள் வரையில் டாக்டர் வனமாலி, தன்னுடைய பிணியாளியை அவர் தங்கியிருந்த ஹோட்டலுக்கே சென்று கவனித்துவந்தார். அவரிடம் பழகப் பழக அவரது உயர்தர குணங்களும் ஒவ்வொன்றாக வெளியாகவே அவர்பால் அவர் கொண்டிருந்த மதிப்பும் அதற்கேற்ப உயர்ந்தது. தம்மிடம் சிகிச்சைக்காக வந்த அக் கனவான் கண்ணியமும் பெருந்தன்மையும் ஒருங்கே வாய்ந்த உத்தமர்களில் ஒருவரென்பதையும், நாகரீகமான பழக்க வழக்கங்களை யுடையவர் என்பதையும் அவர் நாளடைவில் கண்டுகொண்டார்.

காயம் பூர்ணமாகச் சுவஸ்தமாய்விட்டது. முரளீதரர் தமது ஊருக்குப் புறப்பட்டுச் சென்றார்.

*   *   *   *   *

மூன்று வாரத்திற்குப் பிறகு அதே மனிதர் டாக்டரின் ஆபீசுக்கு (எதிர்பாராதவாறு) வந்து சேர்ந்தார். அவருடைய வலக் கையானது முன்போலவே கட்டு கட்டித் தொங்கவிடப்பட் டிருந்தது. பழையபடி அதே யிடத்தில் மீண்டும் சித்திர வதையைப் போன்ற வேதனையைத் தாம் அனுபவிப்பதாக அவர் தெரிவித்தார். அவருடைய முகத்தைப் பார்க்கச் சகிக்கவில்லை. நெற்றியில் முத்து முத்தாக வியர்வை அரும்பிப் பெருகலாயிற்று. மறுவார்த்தை பேசாமல் நாற்காலியின்மீது சாய்ந்து டாக்டரிடம் தனது கையை நீட்டினார்.

இந்தியா டண்டைக் காலத்தில் பெற்றிருந்த இன்ப வாழ்வையும் தீரச் செய்கை மீதுள்ள விருப்பத்தையும் மீண்டும் பெறும்படி செய்வதே இந்திய வாலிபரின் முதன்மையான கடமையாகும்.

சுயநலமற்ற தேச பக்தனுக்கு ஊழியமும் உணர்ச்சியும் சகோதர மனப்பான்மையுமே தைரியமாக ஈடுபடும்படி தூண்டி சக்தி யளிக்கின்றன.

டாக்டரின் ஆச்சரியம் முன்னிலும் அதிகமாயிற்று.

"இப்பொழுது புதியதாக உங்களுக்கு என்ன நேர்ந்துவிட்டது?"

"நீங்கள் அதைப் போதுமான ஆழத்திற்குத் தோண்டியெடுக்கவில்லை! வலி மறுபடியும் திரும்பிவிட்டது. ஆனால் அது முன்னைவிட இப்போது அதிகக் கடுமையாக இருக்கிறது. தங்களுக்குத் தொந்தரவு கொடுக்கக் கூடாதென்று எண்ணியே இதுவரையிலும் பொறுத்துப் பார்த்தேன். இனி ஒரு க்ஷணம்கூட என்னால் இதை சகித்திருக்க முடியாது. மறுபடியும் தாங்கள் ஆபரேஷன் செய்துதான் ஆகவேண்டும்."

டாக்டர் மீண்டும் அந்த இடத்தைப் பரீக்ஷிக்கத் தொடங்கினார். அவர் ஆபரேஷன் செய்த இடம் நன்றாக ஆறிப் புதிய சருமமும் அதன்மீது முளைத்திருந்தது. நரம்புகளில் ஒருவிதமான கோளாறும் இல்லை. நாடித் துடிப்பு சரியாகவே யிருந்தது. அவருக்குக் குளிரோ ஜுரமோ ஒன்றுமே யில்லை ஆனால் அவருடைய ஒவ்வொரு அங்கமும் நடுங்கிக்கொண்டிருந்தது.

"இதைப்போன்ற அதிசயத்தை நான் கண்ணுற்றதேயில்லை" என்று டாக்டர் திகைத்துப்போனார்.

பழையபடி ஆபரேஷன் செய்வதைத் தவிர வேறு வழியொன்றுமிருப்பதாகத் தெரியவில்லை. முன் தடவை நிகழ்ந்தபடியே ஒவ்வொன்றும் நடந்தது. வலி கொஞ்சம் கொஞ்சமாகக் குறைவுற்றது. பிணியாளிக்குச் சற்று மனோ நிம்மதி யேற்பட்டபோதிலும், அவர் முகத்தில் புன்னகை இப்போது அரும்பவில்லை. டாக்டருக்குத் தன் நன்றியைத் தெரிவித்தபோது முன்னிருந்த உற்சாகம் அவரிடம் காணப்படவில்லை.

டாக்டரிடம் விடைபெற்றுச் செல்லும்போது, "நான் இன்னும் ஒரு மாதத்திற்குள்ளாகத் தங்களை மறுபடியும் சந்திக்க நேரிடுமாயின், அது ஆச்சரியமாகவிராது" என்று அவர் அழுத்தம் திருத்தமாகக் கூறினார்.

*　　*　　*　　*　　*

மாதம் ஒன்றும் ஆயிற்று முரளீதரர் வரவில்லை.

அதற்கு மேலும் பல வாரங்களாயின. கடைசியாக ஒரு நாள் அவரிடமிருந்து டாக்டருக்கு ஒரு கடிதம் கிடைத்தது. முரளீதரருக்கு ஒருக்கால் பூர்ண சௌக்கியம் ஏற்பட்டு, வலியே திரும்பவும்

செய்கருமத்தில் முழுநம்பிக்கையும் முழுமுயற்சியும் எவனுக்குள்ளதோ அவனுக்கே தெய்வம் முன் அணியில் வந்து உதவி செய்யும்.

வராமலிருந்திருக்கக் கூடும் என்ற கருத்துடன் டாக்டர் அக் கடிதத்தை மிக்க மகிழ்ச்சியுடன் பிரித்துப் பார்த்தார். அக் கடிதத்தில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது.

அன்பார்ந்த டாக்டர் வனமாலி அவர்களுக்கு,

என்னுடைய வியாதி ஆதியில் எப்படி ஆரம்பமாயிற்று என்பதைக் குறித்து இனித் தங்களுக்கு யாதொரு விதமான சந்தேகமும் இருக்கக் கூடாதென்று எண்ணியே இக் கடிதத்தைத் தங்களுக்கு எழுதத் துணிந்தேன். தவிரவும் இந்த மர்மத்தை என்னோடு சுமந்து செல்லவும் எனக்கு இஷ்டமில்லை. பயங்கரமான இவ் வியாதியின் விருத்தாந்தம் முழுவதையும் தங்களுக்காவது தெரிவிக்க வேண்டியது எனது கடமையாகும். ஏனெனில் முன் யோசனையின்றி நான் புரிந்த கொடிய குற்றத்திற்காக இவ் வுலகிலுள்ள நியாய ஸ்தலங்களின் முன்னிலையில் நான் விசாரிக்கப்படவில்லையாயினும் மறு உலகிலேனும் அதன் பொருட்டு நான் மறுமொழி கூறியே ஆகவேண்டும். ....இந்த மாதிரி அது திரும்பவும் திரும்பவும் தோன்றுவது மூன்றாவது தடவையாகும். இதற்கு மேல் அதையெதிர்த்துப் போராடுவதில் பயனில்லை. ஜ்வலிக்கும் தணலை அக் காயத்தின் மீது வைத்துக்கொண்டே இக் கடிதத்தைத் தங்களுக்கு யெழுதுகிறேன்.

"ஆறு மாத காலத்திற்கு முன் என்னைப் போன்ற சந்துஷ்டியுள்ள புருஷன் இப் பூலோகத்திலேயே ஒருவருமிரார். எனக்கு ஏராளமான ஐசுவரியமிருக்கிறது. சந்துஷ்டியான இன்ப வாழ்க்கையையே நான் நடத்தி வந்தேன். முப்பத்தைந்து பிராயத்திலுள்ள ஒருவனுக்கு எந்தெந்த விஷயங்களெல்லாம் இன்பத்தை யூட்டி மகிழ்விக்கச் செய்யுமோ அவை யனைத்தையும் நான் இடைவிடாமல் அனுபவித்து வந்தேன். ஒரு வருஷத்திற்கு முன்பாகத்தான் எனக்கு விவாகமாயிற்று. நாங்கள் ஒருவரோடொருவர் நன்கு பழகிக் காதலித்துக் கடிமணம் புரிந்து கொண்டவர்கள் எனக்கு மனைவியாக வாழ்க்கைப்பட்டவள் நல்ல ரூபலாவண்யம் வாய்ந்தவள். அழகுடன் அன்பும், அன்புடன் அறிவும் ஒரு மிக்கப் பொருந்தியவள். என்னுடைய ஜமீனுக்கு அடுத்தாப்போலுள்ளது சிறுகாட்டூர் ஜமீன்தாரணியைச் சேர்ந்தது. சிறுகாட்டூர் ஜமீன்தாரணியை எனது மனைவி உயிருக்கு உயிராக நேசித்து வந்தாள். என் மனைவிக்கு என் மீதுள்ள காதல் கரைபுரண்ட வெள்ளத்திற்குச் சமமானதாக யிருந்தது.

எடுத்த காரியம் கைகூட வேண்டுமென்ற ஆசை ஒருவனுக்கு ஏற்பட்டாலன்றி, மீண்டும் மீண்டும் உழைக்க அவனுக்கு மனம் வராது.

ஆறு மாத காலம் எங்களது இல் வாழ்க்கை இன்பகரமானதாகவே கழிந்தது. பிரதி யொருநாளும் அதற்கு முந்திய நாளைக் காட்டிலும் இன்பகரமாகவே யிருந்தது. தன்னை யொரு நிமிட நேரமேனும் நான் பிரிந்திருக்க எனது மனைவி சகித்திருக்க மாட்டாள். சொந்த ஜோலியாக நான் நகர்புறத்திற்குச் சென்றால், சில மணி நேரங்கூட நான் அங்கு தாமதிக்க மாட்டேன். அதற்குள் அவள் எனது வரவை யெதிர்பார்த்து ஏங்கி யிருப்பாள். பல சொல்லி யென்ன? கனவிலுங்கூட என்னைத் தவிர வேறொருவனையும் அவள் கருதியறியாள். அவள் அவ்வளவு மாசுமறுவற்ற உத்தமி.

ஆனால் அவளுடைய நடவடிக்கைக ளெல்லாம் வெறும் வேஷமே. நான் பார்ப்பதனைத்தும் வெளித் தோற்றமே யன்றி வேறல்ல வென்ற சந்தேகம்—துற்புத்தி—என் மனத்திடையே எப்பொழுது உதயமாயிற்று என்று என்னால் இப்பொழுது கூற முடியவில்லை. ஆனால் மனிதனைப் போன்ற முட்டாள்தனமான ஜந்து சிருஷ்டியில் வேறு எது இருக்கிறது? பரம சுகத்தினிடையே துன்பத்தை வலுவிலே தேடிக்கொள்வது மனிதப் பிறவியின் முக்கியமான குணங்களில் ஒன்றல்லவா?

அவளுடைய அறையில் சிறிய மேஜை யொன்றிருந்தது. அதனுடைய இழுப்பை (drawer) அவள் எப்பொழுதும் பூட்டியே வைத்திருப்பது வழக்கம். அதை யொரு பொழுதும் என்னெதிரில் திறப்பதே கிடையாது. அது என் மனத்தை யுறுத்தத் தொடங்கியது. அவள் அதைப் பூட்டாமல் வெளியே செல்லவும் மாட்டாள். அல்லது அதன் சாவியை மறதியாகக் கூட அதன் துவாரத்தில் விட்டு வைப்பதும் கிடையாது. இதெல்லாம் என் மனத்திடையே சந்தேகத்தைக் கிளப்பி அவள் அவ்வளவு ஜாக்கிரதையாக எதை மறைத்து வைக்க வேண்டும்? நாளுக்கு நாள் பொங்கி யெழும் பொறாமையாலும், அவ நம்பகத்தாலும் எனக்குப் பயித்தியம் பிடித்தது போலாயிற்று.

அதுமுதல் அவளுடைய கபடமற்ற பார்வையும், சரச சல்லாபங்களும், அன்பு முத்தங்களும் எனக்கு வேம்பாயின. அவை யாவும் வெறும் வேஷமே யென்று நான் கருதவும் தலைப்பட்டேன்.

ஒரு நாள் அவளது சிநேகிதியான சிறுகாட்டூர் ஜமீன்தாரணி எங்களிருவரையும் தமது மாளிகையில் தான் நடத்தும் விருந்தொன்றுக்கு அழைப்பதற்காக நேரில் வந்திருந்தாள். நான் சிறிது நேரம் கழித்து வருவதாகக் கூறவே, அவள் எனது மனைவியைத் தன்னுடைய காரில் அழைத்துக்கொண்டு சென்றாள்.

பிறர் மனதைக் குளிரச் செய்யும் அன்பு பொருந்திய வாக்குகளையே பேசு.

ஜமீன்தாரணியின் 'கார்' எனது பங்களாவின் எல்லையை விட்டுச் சிறிது தூரங்கூட நகர்ந்திராது. நான் அவளது மேஜையைத் திறந்து பார்க்க ஆவல் கொண்டேன். என்னிடமிருந்த பல சாவிகளில் ஒன்றின் உதவியால் அதைத் திறப்பதற்கு முடிந்தது. நான் டிராயரிலுள்ள சாமான்களை ஒவ்வொன்றாக எடுத்து ஆராயத் தொடங்கினேன். அவ்வாறு ஆராய்ந்து வருகையில் ஓர் பட்டுத் துணிக்கு அடியில் ஓர் கடிதக் கட்டு இருந்தது. அதைப் பார்த்த மாத்திரத்திலேயே அதிலடங்கி யிருந்ததனைத்தும் காதற் கடிதங்களாக யிருக்க வேண்டுமெனத் தோன்றியது. இந்தக் கடிதங்கள் யாவும் ஓர் நீல நாடாவினால் சேர்த்து ஒன்றாகக் கட்டப்பட்டிருந்தன!

அவ் வமயம் நான் எத்தகைய இழிவான செய்கையைப் புரிவதற்குத் துணிந்தேன் என்றுகூட எனக்குத் தோன்றவில்லை. என்னுடைய மனைவி தனது கன்னிப் பருவத்தில் எழுதிய காதற் கடிதங்களைத் திருட்டுத்தனமாகக் கண்காணிப்பது எவ்வளவு ஈனமான தொழில்! எனினும் என் மனதில் ஏதோ வோர் உணர்ச்சி, மேன்மேலும் அதைப் பரிசோதிக்குமாறு தூண்டியது. ஒருக்கால் அவை பின்னிட்டு—அவள் எனக்கு மனைவியாக வாழ்க்கைப்பட்ட பின்னர் எழுதியவைகளாக யிருந்தால்.....................?

அதற்கு மேல் யோசிக்க இடமேது? நாடாவை அவிழ்த்து அக் கடிதங்களை ஒன்றுவிடாமல் படித்துப் பார்த்தேன்.

எனதாயுளில் அப்படிப்பட்ட துர்ப்பாக்கியத்தை நான் ஒரு பொழுது மனுபவித்ததில்லை. ஒரு மனிதனானவன் எவ்வளவு மோசத்தனமான அளவிற்கு வஞ்சிக்கப்படக் கூடும் என்பதை அக் கடிதங்கள் மிகத் தெளிவாக வெளியிட்டன. மன்னிக்க முடியாத அப் பெருந் துரோகத்தைப் பற்றி நினைக்கவும் என் மனம் பதறிற்று. என்னுடைய அத்யந்த நண்பன் ஒருவனாலேயே அவை யனைத்தும் எழுதப்பட்டிருந்தன. அவைகளின் போக்கோ........... ......அக் கடிதங்களின் ஒவ்வொரு வார்த்தையும் பொங்கி யெழும் காதலுணர்ச்சியின் வேகத்தினால் தூண்டப்பட்டு, ஆழ்ந்த உருக்கமான வேண்டுகோள்களை—பிதற்றல்களை—ஆவேசச் சொற்களை அடக்கிக்கொண்டிருந்தன. ஆஹா! அவன்—விசுவாச காதகனான மானிட உருக் கொண்ட அந்தப் பேய் அந்தக் கடிதப் போக்குவரத்து எவ்வளவு இரகஸ்யமாக யிருக்க வேண்டுமென்று விரும்பி யிருந்தான்! அவனுடைய 'புருஷனுடைய' மடத்தனத்தைப் பற்றியும், இந்த விஷயம்

பிறர் உதவி யில்லாமலும் பொருள் உதவி யில்லாமலும் எவ்வளவுபேர்கள் தங்கள் வாழ்நாட்களில் முன்னேற்ற மடைந்திருக்கிறார்கள் என்பதைக் கவனி.

அவனுக்கு எட்டாதவாறு அவ்வளவு ஜாக்கிரதையாக யிருக்க வேண்டுமென்றும் அவன் எவ்வளவுதான் ஏளனமாக எழுதி யிருந்தான்! மேலும் இக் கடிதங்கள் யாவும் நான் சந்தேகித்தபடியே எங்களுடைய விவாகத்திற்குப் பிறகே எழுதப்பட்டவை. இதிலொரு விசேஷம் யாதெனில், இந்தத் துரோகம் என் கண்களுக்கெதிரே நிகழ்ந்து வருகையில், என்னைக்காட்டிலும் சந்துஷ்டியான மனிதர் ஒருவனும் இல்லையென்று எண்ணி நான் இறுமாந்திருந்ததுதான். அவ்வமயம் என் மனத்திடையே தோன்றிய எண்ணங்களையும்— பழிவாங்கும் உணர்ச்சியையும் வெளியிட்டுக் கூறுவதில் என்ன பயன்? எனக்காக அவர்கள் தயாரித்திருந்த விஷம் பூராவையும் ஒரு சொட்டுக்கூட விடாமல் பருகித் தீர்த்தேன். அதன் பின் அக் கடிதங்களை மடித்து முன்னிருந்த இடத்திலேயே வைத்துவிட்டு, டிராயரைப் பூட்டினேன். நான் ஜமீன்தாரணியின் மாளிகைக்குச் செல்லாவிடில் அவள் மாலையிலேயே திரும்பி விடுவாள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். நான் எதிர்பார்த்தபடியே அது நிகழ்ந்தது. அவள் திரும்பியவுடன் வண்டியிலிருந்து துள்ளிக் குதித்து, என்னையாலிங்கனம் செய்து முத்தத்தின் மேல் முத்தமீந்தாள். நான் யாதொன்றும் நிகழாதது போல் சும்மா யிருந்தேன்.

போஜனத்திற்குப் பிறகு நாங்கள் இருவரும் வழக்கம் போல் எங்களது அறைகளில் தனித் தனியாகப் படுத்துக்கொண்டோம். இதற்குள்ளாகவே அடுத்தபடியாக என்ன செய்ய வேண்டுமென்பதைக் குறித்து நான் ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன். நான் உன்மத்தம் பிடித்தவன் நிலைமையிலிருந்ததால் ஓர் வெறி பிடித்தவனின் பிடிவாதத்துடன் நான் அதை அப்பொழுது நிறைவேறிவிட வேண்டுமென்று உறுதி கொண்டேன் ஆஹா! அவ்வளவு அழகிய முகத்தினால் மறைக்கப்பட்ட அவளுள்ளத்திலே ஆலகாலத்தை யொத்த கொடிய நஞ்சு எவ்வாறு சேர்ந்தது? என்று எண்ணியவாறே அவளது படுக்கை யறையை யடைந்தேன்.

அவள் நித்திரை புரிந்து கொண்டிருந்தாள். அவளுடைய கபடற்ற பார்வையையும், சுந்தர வதனத்தையும் கடைசி முறையாக ஊன்றிக் கவனித்தேன். ஆனால் எனக்குப் பித்தம் தலைக்கு ஏறியிருந்தது. அவ் விஷமானது ஏற்கெனவே என் சரீரம் முழுவதிலும் பரவித் தனது வேலையைச் செய்யத் தொடங்கிவிட்டது. மெதுவாகச் சந்தடி செய்யாமற்—பூனைபோற் சென்று எனது இரு கரங்களாலும் அவளது நெஞ்சை இறுகப் பிடித்து, என் பலங்கொண்ட

“உதவி செய்பவர்களில்லை” என்கிறாய். யார் உதவி உனக்குத் தேவை? கடவுள் உதவியைவிட வேறு உதவியும் நீ தேடலாமா? கடவுள் எங்கும் நிறைந்தவர்.

மட்டும் அழுத்தி நெறித்தேன். ஒரு நிமிஷ நேரம் அவள் தன் கண்களைத் திறந்து, மருண்ட, திகிலடைந்த பார்வையுடன் என்னை நோக்கினாள். மறுகணமே அவளது இமைகள் மூடின! அவளது உடலினின்றும் உயிர் பிரிந்து விட்டது! ஒரு சிறு சப்தமேனும் அவள் வாயினின்றும் புறப்படவில்லை.

தற்காப்புக்காகக் கூட அவள் ஒன்றும் செய்யவில்லை. ஏதோ கனவினிடையே ஆவி துறப்பது போல் அவ்வளவு அமைதியாக அவள் உயிர் நீத்தாள். தன்னை எவ்வளவு குரூரமாக—மிருகத்தனமாகக் கொலை புரியும்போது கூட அவள் என் மீது கோபங் கொண்டாளில்லை. அவளுடைய உதடுகளின் வழியாக ஓரே ஒரு சொட்டு இரத்தம் பெருகி எனது வலது கையில் வீழ்ந்தது. அந்த இடம் தான் உங்களுக்குத் தெரியுமே! மறுநாட் காலையில் அது நன்றாக உலர்ந்து போன பின்பே நான் அதைக் கவனித்தேன்.

அதிகமான கலவரத்திற் கிடமின்றி நான் அவளது சவத்தை அடக்கம் செய்வதற்கு ஏற்பாடு செய்துவிட்டேன். நானோ ஓர் பெரிய ஜமீன்தார். நான் நாட்டுப்புறத்தில் வசித்து வந்ததும் தவிர எனது நடத்தையைக் குறித்து விசாரணை செய்யவும் ஒருவரும் துணியார். அதைத் தவிர அவளுடைய மரணத்தைக் குறித்து யாரும் வேறு விதமாக எண்ண முடியாது. ஏனெனில் அவள் எனது மனைவியன்றோ? நாங்களிருவரும் பரமவிசுவாசத்துடன் காலங் கழித்து வந்ததை உலக முழுதும் அறியுமன்றோ?

“அவளுக்கு உற்றார் உறவினர் ஒருவருமில்லை. தவிரவும் பிரேத அடக்கத்திற்குப் பிறகே நான் மற்ற உறவினர்களுக்குக் கடிதம் எழுதினேன். ‘குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்’ என்பது போல எனது நடத்தையைக் குறித்துப் பிறர் குசுகுசுவென்று பேசுவதற்குக்கூட இடமளிக்க நான் விரும்பவில்லை.

“மனச்சாக்ஷி என்பதொன்றிருக்கும்பக்ஷத்தில், அது என்னையொன்றும் செய்யவில்லையென்றே கூறவேண்டும். எனது செய்கை மிகவும் குரூரத்தன்மையும் பைசாசத்தனமும் பொருந்தியதென்பதில் ஐயமில்லை. ஆனால் அவளுடைய நடத்தையை யுத்தேசிக்கையில், அவளுக்கு அந்தத் தண்டனை விதிக்கப்பட வேண்டியது நியாயமே. நான் அம்மாதிரி பயங்கரமான முறையில் அவளைப் பழிவாங்கியது யாருடைய குற்றம்? எந்தக் கொலையாளியும் அவ்வளவு அலட்சியமாகவும் படபடப்பின்றியும் அதைச் செய்திருக்க முடியாது.

வாழ்க்கையில் வெற்றிபெற்றானா இல்லையா என்பதை அவனவன் லட்சியத்தைக்கொண்டே முடிவு செய்ய வேண்டியதா யிருக்கிறது.

"மயானத்திலிருந்து நான் வீட்டுக்கு வந்ததும் சிறுகாட்டூர் ஜமீந்தாரணி அம்புஜம்மாள் தன் வண்டியினின்றும் கீழே இறங்கினாள். அவள் பிரேத அடக்கத்திற்கே வரவிருந்தபோதிலும், அதற்கு நேரமாய்விட்டது. நான் வேண்டுமென்றே அவ்வாறு கடிதம் எழுதியது அவளுக்கு எப்படித் தெரியும்? எதிர்பாராத இச் செய்தியால் அவள் திக்பிரமையும் குழப்பமும் அடைந்துவிட்டாள். பிறகு அவள் எனக்கு ஆறுதல் மொழிகள் கூறியபோது, எனக்கு அவற்றின் பொருள் விளங்கக்கூட யில்லை. நான் அதைச் செவிகொடுத்துக் கேட்கவுமில்லை, ஏனெனில் அவ்வமயம் ஒருவரும் தேறுதல் கூறுவது எனக்குப் பிடிக்கவில்லை. அதன்பிறகு அவள் சிறிது நேரம் தயங்கித் தயங்கி, மிகவும் அந்தரங்கமான செய்தியொன்றை உரைக்கும் பான்மையில் என் காதுகளைப் பற்றித் தான் மிக மிக இரகஸ்யமான சமாசாரத்தை என்னிடம் கூற விரும்புவதாகவும், அதை நான் எக் காரணத்தை முன்னிட்டும் வெளியிடக் கூடாதென்றும் கேட்டுக்கொண்டாள்.

"அதாவது, தான் ஏதோவோர் கடிதக் கட்டை எனது மனைவியிடம் ஒப்புவித்திருந்ததாகவும், அக் கடிதப் போக்குவரத்து பரம இரகஸ்யமா யிருக்கவேண்டுமென்பதுபற்றி அதைத் தம்மிடம் வைத்திருப்பது பத்திரமானதல்லவாதலின், அவற்றை எனது மனைவியிடம் கொடுத்து வைத்திருந்ததாகவும், நான் அவைகளைத் தேடிப் பார்த்துத் தம்மிடம் திருப்பிக் கொடுக்க முடியுமா வென்றும் அவள் வினவினாள்.

"அதைக் கேட்டதும் எனக்கு இடிவிழுந்தது போலாயிற்று. என் சரீரத்திலிருந்த இரத்தமனைத்தும் அப்படியே உறைந்துபோய் விட்டதுபோன்ற உணர்ச்சி தோன்றியது. முகத்தில் தோன்றிய கலவரத்தை ஒருவாறு மறைத்துக்கொண்டு "அந்தக் கடிதத்தில் கண்ட விஷயங்கள் யாவை?" என்று கேட்டேன்.

"அதைக் கேட்க, அவளது முகம் மாறுதலடைந்தது. 'நான் இதுவரையிலும் சந்தித்துப் பழகிய ஸ்திரீகளுக்குள்ளே உம்முடைய மனைவியைப்போன்ற அவ்வளவு நம்பிக்கைக்குப் பாத்திரமான வேறொருவரையும் கண்டதில்லை. அக் கடிதங்களில் என்ன எழுதப்பட்டிருந்தன வென்றுகூட அவள் என்னைக் கேட்கவில்லை. அவற்றையொருபொழுதும் படித்துப் பார்ப்பதில்லை யென்றும் அவள் எனக்கு வாக்களித்திருந்தாள்.'

"அப்படியாயின், உங்களது கடிதங்களை எங்கே பத்திரப்படுத்தியிருந்தாள் என்று சொல்லியிருக்கக் கூடுமல்லவா?"

பொன் நாக்கா யிருக்க வேண்டியதைப் புண்ணாக்குவது தருமமன்று.

"தன்னுடைய மேஜை டிராயரில் அவற்றைப் பத்திரமாகப் பூட்டி வைத்திருப்பதாக அவள் பன்முறையும் என்னிடம் கூறியிருக்கிறாள். அதிலுள்ள 30 கடிதங்களும் ஓர் நீல நாடாவினால் கட்டப்பட்டிருக்கும். அதைப் பார்த்தபோதே தெரியும்."

"நான் அவளை எனது மனைவியின் சொந்த அறைக்கு அழைத்துச் சென்று, மேஜையின் 'டிராயரை'த் திறந்தேன். அவளுக்குத் தேவையாக யிருந்த கடிதங்களை யப்படியே கட்டாக எடுத்து, அவளிடம் ஒப்புவித்தேன்.

"மிக்க ஆவலுடன் அவள் அதனைப் பெற்றுக்கொண்டாள். நானோ எனது திருஷ்டியை அப்படி யிப்படிக்கூடத் திருப்பவில்லை. ஒருக்கால் அவைகள் எனது குற்றத்தை வெளியிட்டு விடக்கூடுமோ என்ற ஐயத்தினால் அவள் எனக்கு வந்தனம் செய்துவிட்டு உடனே திரும்பிவிட்டாள்.

"பிரேத அடக்கத்திற்குச் சரியாக ஒரு வாரத்திற்குப் பிறகு, பயங்கரமான அன்றிரவு ஓர் சொட்டு இரத்தம் என் கையில் எந்த இடத்தில் வீழ்ந்ததோ, அதே யிடத்தில் குத்தலும் எரிச்சலோடும் கூடிய வலியேற்பட வாரம்பித்தது. மற்றவைகள் யாவும் உங்களுக்குத் தெரிந்ததுதான். அது தனக்குத்தானே தோன்றும் ஓர் உணர்ச்சியாக யிருக்கலாம். ஆனால் என்னால் அதனைச் சகிக்கக் கூடவில்லை. எனது முழு அன்பிற்குரிய—மாசுமருவில்லா உத்தம ரத்தினமாகிய என் கண்மணியை ஆய்ந்தோய்ந்து பாராது அவ்வளவு ஈவிரக்கமின்றி நான் கொலை செய்ததற்குப் பிரதிபாக ஆண்டவன் எனக்கு விதித்த பயங்கரமான தண்டனை அதுவேயாம். இனி அதை யெதிர்த்துப் போராடுவதற்கு என்னால் ஒருக்காலும் இயலாது. இன்னும் சில நாழிகைக்குள் நான் அவளிருக்குமிடத்தையடைந்து, அவளது மன்னிப்பைப் பெறப்போகிறேன். அவள் என்னை மன்னித்து, எனது குற்றத்தை மறந்துவிடுவாள் என்பது நிச்சயம். உயிருடனிருந்தபோது எங்ஙனம் தனது களங்கமற்ற காதலால் அவள் எனது வாழ்க்கையை இன்ப வாரிதியாகச் செய்தனளோ, அவ்வாறே பின்னும் என்மீது அவள் தன் அன்பைச் செலுத்துவாள் என்ற நம்பகத்துடன் இக் கடிதத்தைத் தங்களுக்கு எழுதுகிறேன். டாக்டர் அவர்களே! தாங்கள் என்பால் எடுத்துக் கொண்ட சிரமத்திற்காக மீண்டும் எனது வந்தனம் தங்களுக்கு உரியதாகுக."

தங்கள்,
முரளீதரன்.

ஹரி ஜனங்களின் பொருளாதார நிலைமை.

திரு. ரா. ஸ்ரீ. ஸ்ரீகண்டன் அவர்கள், M.A.

2. செலவுகளும் சேதங்களும்

முன் ஒரு கட்டுரையில் ஹரி ஜனங்களின் வருவாய் மார்க்கங்கள் வர்ணிக்கப்பட்டன. பெரும்பான்மையான ஹரி ஜனங்கள் சம்பாதிக்கும் தொகை அல்லது படி எவ்வளவு ஜாக்கிரதையாக உபயோகித்த போதிலும், அவர்களின் சாப்பாட்டுக்குத்தான் போதுமானதாய் இருக்கும் என்ற உண்மை எடுத்துக் காட்டப்பட்டது.

இதனால் மிகவும் ஜாக்கிரதையாய் இருப்பவர்கள் கூட அவசியமான சில செலவுகளுக்குக் கடன் வாங்க வேண்டியவர்களாய் இருக்கிறார்கள். எனவே, கடன் பட்டும் அஜாக்கிரதையாகவும் இருப்பவர்கள் நிலைமை மிகவும் மோசமாக இருக்குமென்று சொல்ல வேண்டியதில்லை.

இங்கு வர்ணிக்கப்படும் ஹரிஜனங்களின் நிலைமை இருப்பதற்குள் பரவாஇல்லை என்ற உண்மையையும் ஞாபகப்படுத்திக்கொண்டால், வேறு இடங்களிலுள்ளவர்கள் எப்படி இருக்க வேண்டுமென்று எளிதில் ஊகித்துக்கொள்ளலாம்.

சாப்பாட்டுச் செலவைத் தவிர வேறு செலவுகள் வருமாறு:

1. குடி=மதுபானம்

சாப்பாட்டுக்கே கஷ்டமானவர்கள் சதா சர்வகாலமும் குடியிலேயே முழுகிக் கிடப்பார்கள் என்று நம்ப முடியவில்லை. கள்ளுக் கடைக்காரர்கள் கள்ளை ஊற்றுவதற்கு முன் பணம் கேட்கிறார்கள். அது சுண்டப்படாவிட்டால், அல்லது எப்படியும் அது வசூலாகி

விஞ்ஞானத் துறையிலும் இதர முயற்சிகளிலும் இதுகாறும் ஏற்பட்டுள்ள அபிவிருத்திகளெல்லாம் மனோ கற்பனைகளிலிருந்து பரிணமித்தவையேயென்று சொல்லலாம்.

விடும் என்ற நம்பிக்கை இல்லாமற் போனால், மற்ற எல்லா வஸ்துக்களையும் போலக் கள்ளும் கிடைப்பதில்லை. குடியானது மிதமீறிப் போகாமலிருப்பதற்கு இதுவே மற்ற எல்லாவற்றைக் காட்டிலும் முக்கியமான காரணமாகும். இதன் உண்மையைச் சமீப காலத்தில் வெளியிடப்பட்ட கலால் அறிக்கை ஒன்றில் சர்க்காரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் குடிப் பழக்கம் அறவே அற்றுப்போய் விட்டதென்று எண்ணும் பிசகை மாத்திரம் நாம் செய்யலாகாது. பல பழக்க வழக்கங்களால் இந்தத் துர்க் குணம் அசைக்க முடியாதபடி வேரூன்றிப் போய்விட்டது. அவைகளிற் சில வருமாறு:—

(அ) மற்றவர்களைப் போல் ஹரி ஜனங்களும் வாரத்திலோ, மாதத்திலோ ஒரு தடவை தாங்கள் தினம் கஷ்டப்பட்டு உழைத்ததற்குக் கூலியைப் பெறுகிறார்கள். அதை வைத்துக்கொண்டு இன்னொருதரம் கூலி பெறும் வரையிலாவது அவர்கள் காலக்ஷேபம் செய்ய வேண்டும். ஆனால், தற்காலிகமான செலவைக் காட்டிலும் அதிகமான பணம் அல்லது படி அவர்கள் கையில் இப்பொழுது இருப்பதால் அவர்கள் விரும்பினால் (பெரும்பாலும் அப்படி விரும்புகிறார்கள் என்பதுதான் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ள வேண்டிய விஷயம்) தாராளமாகக் குடிக்கலாம். எனவே வாரத்துக்கொருதடவையாவது மிதமீறிக் குடிப்பதென்பது சாத்தியமாகிறது. அப்பொழுது ஜாக்கிரதையாய் இருப்பதினாலேயே பொருளாதாரத் துறையில் அவர்கள் எவ்வளவோ சிறப்பாக இருக்கலாமென்பது உண்மையே. அதனால்தான் ஹரிஜன ஊழியர்கள் இதை எடுத்துச் சொல்லிக்கொண்டே இருந்து ஊக்கமூட்டுவதனால் விசேஷ பலன் ஏற்படுகிறது என்று சொல்லுகிறேன்.

(ஆ) தனிப்பட்ட நபராய் இருந்தால், ஒவ்வொரு தடவையும் கள்ளுக் கடைக்குப் பணம் கொடுப்பதென்பது கஷ்டமாய் இருக்கும். ஆனால் 5 அல்லது 6 பேர் ஒன்று சேர்வதால் கஷ்டம் விலகிப் போகிறது. இதற்காக ஒன்று சேரும் ஸ்தாபனத்தை அவர்கள் "பாங்கு" என்று சொல்லுகிறார்கள். ஒவ்வொரு தடவை "பாங்கு" நடக்கும் போதும் ஒருவன் மற்றவர்களுக்கெல்லாம் சப்ளை செய்ய வேண்டும். இம்மாதிரி எல்லாருடைய முறைகளும் தீர்ந்த பிறகுதான் ஒவ்வொருவனுக்கும் இன்னொரு முறை பணத்தை எண்ண வேண்டி வருகிறது. இதனால் குடியைப் பொருத்த மட்டில் பணக் கஷ்டம் ஒருவாறு

பழைய கொள்கைகளையும் மூடப் பழக்க வழக்கங்களையும் வாலிபர்கள் எதிர்த்து செய்கை எண்ணம் முதலிய சகல விஷயங்களிலும் அவர்கள் சுதந்திரம் பெற வேண்டுமெனக் கோருகிறார்கள்.

நீங்கிவிடுகிறது, என்னே கூட்டுறவின் மகிமை! கூட்டுறவு பாங்குகளின் கொள்கைகளை ஹரி ஜனங்களுக்கு விளக்கிக் காட்டும்போது, நான் முதன் முதல் அவர்களுடைய இந்த "பாங்"கைத்தான் உதாரணமாக எடுத்துக் காட்டுகிறேன்.

(இ) விவாகங்கள், மரணங்கள், மாரியம்மன் கம்பங்கள், தேர் திருவிழாக்கள், விருந்தோம்பல் முதலானவைகள் அடிக்கடி வந்து கொண்டே இருக்கின்றன. பணமுள்ளவர்கள் வீட்டில் இம்மாதிரி சந்தர்ப்பங்களில் எப்படிக் காப்பியானது தண்ணீருக்குப் பதிலாக உபயோகப்படுகின்றதோ, அதே மாதிரி ஹரிஜனங்களுக்குள் கள் உபயோகப்படுகின்றது. பல சமயங்களில் கள்ளுக்குப் பதிலாக எலுமிச்சம் பழம் பிழிந்து தாளித்துச் சுவையுள்ளதாகத் தயாரிக்கப்பட்ட நீர் மோரை உபயோகிக்கும்படி செய்தால், செலவு அதிகமாகாமலிருப்பதுடன் ஆரோக்கியமாகவும் இருக்குமே என்று கூட நான் நினைத்ததுண்டு.

ஹரி ஜனங்களுடைய திருவிழாக்களில் மற்றவர்களும் தாராளமாகக் கலந்து கொள்வதுடன் அவர்களுடைய ஆகாராதிகளைச் செலவு அதிகமில்லாமல் சுவையுள்ளவைகளாகத் தயாரிக்கும் முறைகளைப் பிரசாரம் செய்தால்தான் நலம் என்று எனக்குத் தோன்றுகிறது.

(ஈ) ஹரிஜனங்களின் எஜமான்கள் பல தடவைகளில் அவர்கள் மேல் சந்தோஷமடைந்தவர்களாகக் காணப்படுகிறார்கள். கள்ளுக்கடைகள் செழித்தோங்க இதுவும் ஒரு காரணமாகிறது. என்ன செய்தால், எஜமான்கள் சந்தோஷப்படும் சமயங்களும் அதிகரித்து, கள்ளுக் கடைகளும் குன்றிப்போகும் என்பதுதான் கேள்வி.

2. புட்டு, சுண்டல் கடைகள்

காப்பிக் கடைகள், சாப்பாட்டு ஓட்டல்கள் முதலியன இப்பொழுது தேசமெங்கும் மலிந்து கிடக்கின்றன. ஆனால் பழங்கால இந்தியாவில் இவைகள் இல்லை என்றே சொல்லிவிடலாம். நமது முன்னோர்கள் ஆகார விற்பனையை ஒரு பெரும் பாதகமாகவும், அன்னதானத்தை ஒரு பெரும் புண்ணியமாகவும் கருதிவந்தார்கள். ஆகாரக் கடைகள் என்ற ஸ்தாபனத்தை நாம் மேல்நாட்டு இறக்குமதியாக அறியவேண்டும். நாட்டின் ஒரு சிறந்த கொள்கைக்கு விரோதமாக இந்த வழக்கம் பரவியிருப்பதற்கு முக்கிய காரணம் மனிதனுடைய ஓர் அடிப்படையான குணத்தில் பொதிந்து கிடக்

உலகின் எப் பாகத்திலும் வாலிபர்களிடையே ஓர் புத்துணர்ச்சி தோன்றியிருப்பது நற்காலத்தின் அறிகுறியாகும்.

கிறது. பாரதியார் ஓரிடத்தில் அருமையாக வாதம் செய்கிறபடி, பிராமணர்கள் மட்டுமல்ல, "ஸர்வே ஜனா: போஜனப்ரியா:" என்பது உண்மையே. எல்லாரும் தின்ன விரும்புகிறார்கள். தின்பண்டம் சற்று ருசியுள்ளதாக மட்டும் இருந்துவிட்டால், மிதமீறித் தின்றுவிடுகிறார்கள், என்ன ஆனாலும் சரி என்று. ஆனால் ருசியுள்ள சாமான்களைத் தயாரிப்பதென்பது எல்லாராலும் ஆகக் கூடியதன்று. ஒரு சிலர்தாம் நளபாகம் செய்யக் கூடியவர்கள். அவர்கள் தயாரிப்பதைத் தின்பதற்கென்றே தூரதூரத்திலிருந்து வந்து துட்டைக் கொடுத்துவிட்டுப் போகிறவர்களும் இருக்கிறார்கள். இந்தக் காரணத்தால்தான் ஹரிஜனச் சேரியின் வாயிலில் புட்டு, காராமணி, சுண்டல் முதலியன விற்கும் பெண் பிள்ளைகளுக்கு நல்ல வியாபாரம் நடக்கிறது.

ஆனால் சுவையுள்ள பண்டங்களை இம்மாதிரி வாங்கித் தின்பதால் செலவு அதிகமாகிறது. காப்பிக் கடைக்குச் சென்றால் ஒருவனுடைய நாக்கின் திருப்திக்காக 4 அணா, 6 அணா செலவிடுவதென்பது சர்வ சாதாரணமாய் இருக்கிறது. ஆனால் அந்தத் தொகையை வைத்துக்கொண்டு ஒரு குடும்பமே அருந்தும்படி செழிப்பாகச் சிற்றுண்டி தயாரிக்க முடியும். அதேமாதிரி ஹரிஜனங்களுக்குள்ளும் ஒருவன் சிற்றுண்டி அருந்துவதென்றால், பலர் அவசியமான ஆகாரமில்லாமற் போகவேண்டும். அல்லது கடன் (கிடைத்தால்) வாங்கிச் சாப்பிடவேண்டும்.

ஹரிஜனங்கள் பகலில் விவசாய வேலைக்குச் சென்றிருக்கும்போது, ஸ்திரீகள் வேலையின்றி வீட்டிலேயே இருக்கிறார்கள். அப்பொழுது ஏதாவது தானிய தவசம் கைவசமிருந்துவிட்டால், புட்டுக் கடைக்கு யோகந்தான்.

எனவே, இந்த வழக்கத்தைக் கூடுமானவரையில் நிறுத்த முயல வேண்டும். ஆனால் இது மிகவும் கஷ்டமான காரியமே. மானிட நாக்கை எளிதில் அடக்க முடியாது. இதனால்தான் சுவையுள்ள, அதிகச் செலவில்லாத தின்பண்டங்களை வீடுகளிலேயே தயாரிக்கும் முறைகளைப் பிரசாரம் செய்யவேண்டியது அவசியம் என்றேன்.

3. 'மொய்'

விவாகம், மரணம் முதலான காலங்களில் கடன் வாங்காமலிருப்பதற்காக மொய் வைப்பதென்ற வழக்கம் சாதாரணமாய்ப் பிராமணரல்லாத எல்லாச் சமூகங்களுக்குள்ளும் இருப்பதாக நான் அறிகி

புதிய வாழ்வு முறையில் இந்தியாவைத் திருத்தி அழைப்பது இந்திய வாலிபரின் உரிமையே.

றேன். ஹரிஜனங்களுக்குள்ளும் இவ் வழக்கம் உண்டு. சிறந்த கொள்கைகளுடன் ஆரம்பித்து, காலக்கிரமத்தில் அவைகளை மீறியதால் இது இப்பொழுது பெரிய கஷ்டங்களையெல்லாம் விளைவித்து வருகிறது. இவ் விஷயம் தனிச் சிறப்புடையதாகையால், இதற்கென்றே ஒரு கட்டுரை யெழுதவேண்டுமென்று இதை இத்துடன் விட்டுவிடுகிறேன்.

4. இதர செலவுகள்

தொழில் சம்பந்தமான செலவுகள், ஜாதி நியாயங்களில் விதிக்கப்படும் குற்றங்கள் (அபராதங்கள்), வியாதியால் நேரும் செலவு, துணிமணி, திருவிழா முதலான வேறு பல செலவுகளும் அவர்களுக்கு இருக்கின்றன.

இந்த வியாசத்தால் ஹரிஜனங்களுடைய வருமானம் செலவுகளுக்குப் போதுமானதாய் இல்லை என்றும் கடன் வாங்க வேண்டிய அவசியம் அடிக்கடி ஏற்படுகிறதென்றும் தெரியவரும். கடன் வாங்குவதனாலேயே வருமானம் இன்னும் குறைவடைகிறது. எனவே, பொருளாதார நிலைமை நாளுக்கு நாள் சீர்குலைந்து அவர்களைப் படுகுழியில் ஆழ்த்தி வருகிறது என்று செல்ல வேண்டியதில்லை.

ஹரிஜனங்களைப் பற்றி மேலே சொன்ன விஷயங்கள் பல அம்சங்களில் இந்தியாவின் எண்ணிறந்த ஏழை ஜனங்களுக்கும் பொருந்தும் என்றும் அவர்களும் இதே காரணங்களால் கஷ்டப்படுகிறார்கள் என்றும் கவனித்தவர்கள் அறிவார்கள்.

இவைகளைத் தவிர தீண்டாமை என்னும் பேய்வேறு ஹரிஜனங்களை வாட்டி வதக்கும் விவரங்கள் முன் ஒரு வியாசத்தில் ஏற்கெனவே வர்ணிக்கப்பட்டிருக்கின்றன.

கீழ் குறிப்பிட்டவரிடம்
நமது பத்திரிகையும் பிரசுரங்களும் கிடைக்கும்.

K. N. Sankaran Pillai,
No. 281, 2nd Division, Maradana,
COLOMBO.

உண்மையாக உழைக்கும் பொழுது, ஓர் உறுதியான மகிழ்ச்சி உண்டாகிறது.

197903

"பாரதி"

ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை.

மாலை 6	பவ-புரட்டாசி 1934 செப்டம்பர்-அக்டோபர்மீ	மணி 6

மதிக்கப்பட வேண்டுமானால் மரணமடையுங்கள்.

"ஆனந்தா."

விசாலமான அழகிய தோட்டம். அத் தோட்டத்தின் நடுவே சிற்ப வேலை மிகுந்த நேர்த்தியான ஒரு மண்டபம். அம் மண்டபத்திற்குள் பளிங்குக் கற்களால் பாவப்பட்ட தரையின் நடுவே ஒரு சமாதி. இரவு மணி ஒன்று. பூரணச் சந்திரன் தனது நீல நிறச் சிம்மாதனத்தில் வீற்றிருந்தபடி கெம்பீரமாய் இவ் வுலகைக் கூர்ந்து நோக்கிக்கொண்டிருக்கிறான். இளந் தென்றலின் அலைகள்மீது பூக்களின் நறுமணம் ஆரோகணித்து நாலா திசையும் செல்லுகிறது. ஓங்கி வளர்ந்த மரங்கள் ஒய்யாரமாய் அசைந்தாடுகின்றன. சந்திரனின் ஒளி மரங்களின் உச்சிகளையும், மண்டபத்தையும் அழகுபடுத்துகிறது. இச் சமயம் இரண்டு எலும்புக் கூடுகள் மண்டபத்திற்குள், சமாதியினருகே நின்று கொண்டிருந்தன.

ஒன்று மற்றொன்றை நோக்கி 'உஸ்! சத்தம் போடாதே! வந்து விடுவார் சீக்கிரம்' என்றது தனது வலதுகையின் ஆள்காட்டி விரலின் எலும்பை மூக்குவரை உயர்த்தி.

'நேரம் ஆகிறதே!' என்று மண்டையோட்டை அசைத்தது மற்றது.

உண்மையான எல்லா வேலைகளிலும் ஒய்வு அடங்கியிருக்கிறது.

இதற்குள் 'டப்' என்று சமாதி வெடித்து அதிலிருந்து ஒரு எலும்புக்கூடு 'அப்பாடா!' வென்று வெளிப்பட்டது. அதிலிருந்த எலும்புக் கூடுகளைப் பார்த்துத் 'தோழர்களே! அதிக நேரமாகி விட்டதோ? என் பந்துக்கள் இன்று நல்ல சாப்பாடு கொஞ்சம் அதிகமாய் அனுப்பியிருந்தார்கள். அதை நானும் அளவுக்கு மீறி உட்கொண்டுவிட்டதால் சீக்கிரம் வெளியேற முடியவில்லை. உங்களைக் காத்துக்கொண்டிருக்கச் செய்ததற்காக மன்னிக்கவேண்டும். நமது சங்கக் கூட்டம் ஆரம்பமாகிவிட்டதோ?' என்றது.

'தாங்கள் இல்லாமல் எப்படிக் கூட்டம் ஆரம்பமாகும்? தங்கள் தலைமையில்தான் இன்றையக் கூட்டம் நடைபெறவேண்டும். சீக்கிரம் போவோம்' என்றன அவையிரண்டும்.

மூன்றும் நடந்து தோட்டத்திற்கு வந்தன. தோட்டத்தின் நடுவே இன்னும் பல எலும்புக் கூடுகள் ஆசனங்களில் அமர்ந்திருந்தன.

'சமாதி எலும்புக் கூடு' தலைமை வகிக்க, 'எலும்புக் கூடுகள் சங்கத்தின் மாதாந்திரக் கூட்டம்' ஆரம்பமாயிற்று. கூட்டத் தலைவர் எழுந்து கீழ்க் காணுமாறு பேசினார்:—

"தோழர்களே! உயிருள்ளவரை சமத்துவம், சமத்துவம் என்று நாங்கள் பேசிக்கொண் டிருந்ததெல்லாம் வெறும் பேச்சு. உண்மையான சமத்துவம், எல்லாரும் மண்ணில் புதைந்த பிற்பாடுதான் கண்டோம். உண்மைச் சகோதரத்துவம் இப்போது நம்மிடையேதான் இருக்கிறது. ஹிந்து, முஸ்லிம், கிறிஸ்து என்னும் மத பேதங்களோ, ஜாதி உயர்வு தாழ்வோ, கருப்பன், வெள்ளையன், மஞ்சள் நிறத்தான் என்ற நிற வித்தியாசமோ, ஆண் பெண் என்கிற பால் வேற்றுமையோ நம்மிடை உண்டா? ஆகையால் உயரிய வாழ்க்கை—நாகரீக வாழ்க்கை நடத்த வேண்டுமானால், உயிருள்ளவர் அனைவரும் மாண்டு நம் சங்கத்தில் அங்கத்தினராகவேண்டும்! அப்போதுதான் மனிதர் கனவு காணும் 'சகோதரத்துவ உலகத்தை' சிருஷ்டி செய்யலாம். இன்று சில புதிய அங்கத்தினர் நமது சங்கத்தில் சேருவதற்கு வந்திருப்பதாக அறிந்தேன். வழக்கம்போல் அவர்கள் தங்கள் விருத்தாந்தங்களைக் கூறி சங்கத்தில் சேர்ந்துகொள்ளலாம்."

இவ்வாறு கூறித் தலைவர் அமர்ந்தவுடன் ஒரு சிறு எலும்புக் கூடு எழுந்து:—

"தலைவர் அவர்களே! சங்கத் தோழர்களே! நான் உங்களோடு சேர்ந்துகொள்ளுவதற்காக சந்தோஷப்படுகிறேன். மாண்டால்

சோம்பலுள்ளவன் ஜீவியப் போரில் நிலைத்திருக்க முடியாது.

தான் மதிக்கப்படுவோம் என்பதை இப்போதுதான் தெரிந்துகொண்டேன். நான் உயிரோடும் சதையோடும் இருந்தபோது, சினிமாவுக்குப் போக இரண்டணா கொடுக்கும்படி என் அப்பாவைக் கேட்டால், 'போடா! தடிப்பயலே! உனக்கு சினிமா வேறே! கத்திரிக்காய் வேறே!' என்று உதைக்க வந்துவிடுவார். அவர் இல்லாதபோது சட்டைப் பையில் கைபோட்டுத் துளாவிக் காசைத் திருடிக்கொண்டு போனால்தான் முடியும். 'அப்பா! எனக்குப் பட்டுச் சட்டை வேண்டும்! ஜிலேபி வேண்டும்!' என்று கேட்டால், தடியைத் தூக்கிக்கொள்ளுவார். இப்போதோ எனக்காகத் திதியென்றும் திவசமென்றும் ஏராளமாய்ச் செலவு செய்கிறார். பலவித பக்ஷணங்கள் எல்லாம் அனுப்புகிறார். பட்டுச் சொக்காய்கள் தைத்து தானம் செய்கிறார். பால் ஏராளமாய் ஏற்றுமதி செய்கிறார்" என்று கூறி அமர்ந்தது

இரண்டாவது எலும்புக் கூடு எழுந்து 'தோழர்களே! நான் ஒரு பெண்ணாயிருந்தேன். நான் ஏன் பிறந்தேன் என்றுதான் உயிருள்ளவரை விசனித்தேன். என் பேச்சுக்குப் புக்ககத்தில் மதிப்புக் கிடையாது. தினம் நல்ல சேலை கட்டிக்கொள்ள மாமி அனுமதிக்கமாட்டாள். 'இப்படித் தெனம் புதுப் புதுச் சேலை கட்டிக்கணும்னா எங்கே போறது? சம்பாரிச்சுச் சம்பாரிச்சுக் கொணாந்து போட்டிருக்கோ, அம்மணி தினம் சிங்காரிச்சிக்கறதுக்கு? கிழிஞ்சு போச்சுன்னா என்ன பண்றது?' என்று சிடுசிடுப்பாள். ஏதாவது விசேஷ தினம் வந்தால்தான் அவைகளை உடுத்த உரிமை தருவாள். அதுமட்டுமல்ல. வீட்டிலுள்ள பாத்திரங்களையோ, இதர சாமான்களையோ, நகைகளையோ அடிக்கடி உபயோகிக்க விடமாட்டாள். அழகுக்காக அவைகளை அடுக்கி வைத்திருப்பாள். 'இதெல்லாம் பின்னே பெருமைக்கா?' என்று கேட்டுவிட்டால் போதும. 'நான் எங்கே யிருந்துதான் இவளைப் பிடிச்சேனோ! என் கிரகம்! இப்படி எதித்து எதித்துப் பேசறாள்' என்பாள். சதா முணுமுணுத்துக்கொண்டே யிருப்பாள். எங்கள் வீட்டுக் காரரோ! அவராச்சு! அவர் வேலையாச்சு! இதில் எல்லாம் தலையிடமாட்டார். 'என்ன சமாசாரம்?' என்றுகூடக் கேட்கமாட்டார். என் செலவுக்காகக் காசு கேட்டால் கொடுக்கமாட்டார். அப்படிக் கொடுத்தாலும் ஆயிரம் குறுக்குக் கேள்விகள் போட்டுத்தான் கொடுப்பார். சில சமயங்களில் தலையிலும் குட்டுவார். ஒரு நாளாவது எனக்கு விருப்பமான பலகாரம் செய்ததே கிடையாது. நான் இறந்த பிற்பாடு மாமி, 'ஐயோ! என் உழைப்பாளியான மருமகள்

காரிய சித்தி அடைவதற்கு முதல் ஆதாரம் உழைப்பே.

மாண்டு விட்டாளே!' என்று ஓலமிட்டாள். வீட்டுக் காரரோ ஏராளமாய்ச் செலவு செய்து பூப்பல்லக்கு தயார் செய்து வெகு ஆடம்பரமாகத் தகனக் கிரியைகள் செய்தார். என்னை அலங்காரமாகச் சிங்காரித்தார்கள். விலையுயர்ந்த சேலைகளை யெல்லாம் மாட என் பிணத்தின் மீது போட்டாள்' என்று கூறி முடித்தது.

அதற்குப்பின் மூன்றாவது ஒரு எலும்புக் கூடு எழுந்து கூறத் தொடங்கியதாவது:—

"தோழர்களே! நான் தேசத்துக்காக அதிகம் உழைத்தவன். வீணே எனக்கிருந்த ஆவேசத்தால் என் சொத்தையெல்லாம் தேச நலத்திற்காகச் செலவு செய்து ஓட்டாண்டியானேன். பல முறை சிறை சென்றேன். பிற்பாடு ஒரு பத்திரிகையை ஆரம்பித்து நடத்தினேன். பத்திரிகை அதிகமாக ஆதரிக்கப்படவில்லை. வியாசம் எழுதுவோருக்குப் பிரதிப்பிரயோஜனம் அளிக்கமுடியாத நிலையில் இருந்ததால், அவர்களுக்கெல்லாம் புகழ்மொழிகளை அள்ளி அள்ளிக் கொடுத்து வியாசங்களைப் பெற்றுப் பிரசுரித்துவந்தேன். இன்னும் என்னென்னவோ செய்தும் என்னை ஜனங்கள் போதிய அளவு மதிக்கவில்லை. நான் இறந்த பிற்பாடு அத்தனைபேரும் கூடி என் பேரால் ஞாபகார்த்தக் கட்டிடங்களும், சங்கங்களும் கட்டியிருக்கிறார்கள்."

இவ்வாறு சொல்லி அது அமர்ந்ததும் நான்காவதாக ஒரு எலும்புக் கூடு எழுந்து கீழ்க் காணுமாறு பேசியது:—

"நான் ஒரு பெரும் புலவன். 'குபீர் குபீர்' என்று உணர்ச்சியூட்டக் கூடிய பாட்டுக்களை யெல்லாம் பாடினேன். அழகிய காவியங்களை இயற்றினேன். மொழி வளர்ச்சிக்காக அரும்பாடு பட்டேன். ஆனால் எனக்கு சம்பாதிக்கும் திறமை இல்லாது போய் விட்டதால், உணவுக்கின்றி நான் பட்ட துயர் கொஞ்ச நஞ்சமல்ல. எனது பந்துக்கள், பொது ஜனங்கள், தனவந்தர்கள் அனைவரும் எனக்குப் போதிய உதவி செய்ய மறுத்துவிட்டார்கள், கடைசியில் ஆதரிப்பாரற்று அனாதையாய் அவ்வுலகத்தை விட்டு வெளியேறினேன். அந்தோ! நான் மாண்ட பின் யார் யார் என்னை உயிருள்ளபோது கண்ணெடுத்தும் பார்க்கவில்லையோ, அவர்கள் அனைவரும் ஒன்று கூடி என் ஞாபகார்த்தமாக ஒரு பெரிய கட்டிடத்தை எழுப்பி அதற்கு முன் என்னுடைய அழகிய சிலையையும் நிறுத்தி யிருக்கிறார்கள். அந்தச் சிலை மிகவும் சந்தோஷகரமான முகத்தோடு கெம்பீரமாய் நிற்கிறது. அந்தோ! என் முகம் உயி

தோல்விகளைக் கண்டு அதைரியப்பட்டுவிடக் கூடாது. வெற்றி பெறுதற்குரிய படிக்கற்கள் தோல்விகள் தான் என்பதை உணர வேண்டும்.

ருள்ளவரை வருந்திச் சுருங்கிக் கிடந்ததை யார் அறிவார்? உயிருள்ளபோது இரவைக் கழிக்க ஒரு குச்சும் இல்லாது அவஸ்தைப் பட்டிருக்கிறேன். தலைக்குத் தலையணை யில்லாது கையணையைக் கொண்டே படுத்துறங்கி யிருக்கிறேன். இப்போது என் பெயரால் அழகிய கெம்பீரமான கட்டிடம் காட்சி யளிக்கிறது. நான் பிறரைத் தேடிப் போனாலும் அவர்கள் என்னை சந்தோஷத்தோடு வரவேற்பதில்லை. இப்போது அவர்களெல்லாம் 'என் கட்டிடத்துக்கு' வந்து என் படத்திற்குப் பூமாலைகள் போடுகிறார்கள்."

இவ்வாறு அது கூறி முடித்ததும் கூட்டத் தலைவர் எழுந்து முடிவுரையாகப் பேசியதாவது:—

"தோழர்களே! கேட்டீர்களா! உலகத்தில் உயிருக்கு மதிப்பில்லை. ஆகையால் ஏன் அத்தனை பேரும் உயிர் வைத்துக்கொண்டிருக்க வேண்டும்? என்றுதான் கேட்கிறேன் (கரகோஷம்) அனைவரும் மாண்டு நம் சங்கத்தில் வந்து சேர்ந்துவிட்டால் நலமாகும். (கரகோஷம்) நான் உயிரோடிருந்த போது கூட என்னை மதிப்பார் யாருமில்லை. இங்கு கொண்டு வந்து புதைத்த பின்னர்தான் நான் மகானானேன். எனக்கு அழகிய விலையுயர்ந்த சமாதியும், மண்டபமும் இந்த நேத்திரானந்தமான சோலையும் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன. தினம் எவர் வீட்டிலிருந்தாவது எனக்கு நல்ல ஆகாரம் படைக்கப்படுகிறது. பூமாலைகளுக்கும், சாம்பிராணிப் புகைக்கும் ஒரு குறைவுமில்லை. இதை உத்தேசித்து நான் ஒரு தீர்மானம் கொண்டு வருகிறேன். அதை ஏக மனதாக நிறைவேற்றுவீர்கள் என்று நம்புகிறேன். அத் தீர்மானத்தை வாசிக்கிறேன் கேளுங்கள்:—

"உலகத்தாரால் மதிக்கப்பட வேண்டுமானால் மாணமடையுங்கள் என்று எல்லா ஜனங்களையும் இச் சங்கம் கேட்டுக்கொள்கிறது."

இதை ஆமோதித்தும் ஆதரித்தும் பலர் பேசிய பின் ஏக மனதாக அது நிறைவேறியது. பிற்பாடு புதிய அங்கத்தினர் சங்கத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். சுமார் நான்கு மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது. தலைமை வகித்தவர் சமாதியில் இறங்கிக் கொள்ளவே, அது மூடிக்கொண்டது.

காலையில் அந்த எலும்புக் கூடுகள் கூட்டங் கூடியிருந்த இடத்தில் பூச்செடிகள் காற்றில் அசைந்தாடிக் கொண்டிருந்தன. அவைகளின் மீது சின்னஞ்சிறு பறவைகள் ஆனந்தமாய்ப் பாடிக்கொண்டிருந்தன.

ஜீவாதாரமான கொள்கைகளை எக் காலத்தும் ஒருவரும் விட்டுக் கொடுக்கக் கூடாது.

பாரதியாரும் மெல்லியலாரும்.

திரு. ல. கிருஷ்ணசாமி பாரதியார் அவர்கள், எம்.ஏ., பி.எல்

நமது பாரதியார், உலகம் புகழும் வங்காளக் கவியரசர் தாகூரைவிடப் பன்மடங்குயர்ந்தவர் என்று ஆங்கிலமும் தமிழும் ஒருங்கே ஆராய்ச்சியுடன் படித்தறிந்த அறிஞர் ஒருவரின் துணிந்த அபிப்பிராயமாகும். இதனால் தாகூரைக் குறைத்துச் சொல்வதாக யாரேனும் பொருள் கொண்டால், அது தவறாகும். இரு பெரும்புலவரை ஒத்து நோக்கி, ஒருவர் மற்றவரினும் சிறந்தவர் என்றதால், பின் சொன்னவரைக் குறைப்படக் கூறியதாகப் பொருள் கொள்ளல் பொருந்தாது.

தமிழ் நாட்டுக் கவியரசர் பாரதியாரின் உண்மை உயர்வைத் தமிழர் இப்பொழுது சிறிதேனும் அறிந்துள்ளார். இன்னும் இக்கவியுள்ளத்தைச் சம்பூர்ணமாக அறிந்து கொள்வதற்குப் போதுமான தமிழர் முன் வந்திலர், என்பதே எனது தாழ்ந்த அபிப்பிராயமாகும். பொதுவாக அறிவில் ஆர்வக் குறைவே இதற்கு முக்கிய காரணமாகும். அன்னியர் ஆட்சியின் பலன் ஆங்கிலம் படிப்பதை அதிகரிக்கச் செய்தது, தமிழ் வளர்ச்சியைக் குன்ற வைத்துக் கொன்றது, என்பர் சிலர். இது அரைகுறை உண்மையேயாகும். வயிறு வளர்ப்பதற்கு வழிதேட வேண்டியது ஒன்றே, மானிட வாழ்க்கையின் திருக்கடன் என்ற அருங் கொள்கையுடையவர், ஆங்கிலம் கற்றவர்களின் நூற்றுக்கு தொண்ணூற்று ஒன்பது பெயர் ஆங்கிலத்தைக் கசடறக் கற்று பட்டங்களும் பெற்று, உத்தியோக ஆசனத்தில் அமர்ந்த பின்னர், ஆங்கில நூற்களை அறிவைப் பெருக்கு நோக்குடன் படித்து வருவோர் எத்தனை பேரோ? நூற்றுக்கொருவர் இருப்பதருமை. ஓய்வு நேரங்களில் நேரத்தைக் 'கொல்லுவ'தற்கு ஆங்கில நவீனங்களைப் (Novels) படிக்கும் நாகரீகர் சிலருளர். எனவே, பட்டாதாரிகள் ஆங்கில நூற்களைச் சதா கற்றுக்கொண்டிருப்பதாலேயே தமிழ் வளராது குன்றியது என்பது முழு உண்மை யாகாது என்பேன்.

சுயநலம் பாராட்டாது பிறர் நலங் கருதி உழைப்பதே மகிமையையும் செல்வாக்கையும் தரும்.

அறிவு ஒரு பெரிய சூரியன். அச் சூரியன் தன் கிரணங்களை எல்லா நாட்டிற்கும், எல்லா விடத்திற்கும் செலுத்துகிறான். அவனுக்குப் பாரபக்ஷம் கிடையாது; கருப்பு மனிதனென்றும், வெள்ளை மனிதனென்றும் அவனுக்கு வித்தியாசம் கிடையாது. அவன் தெய்விக ஒளி படைத்தவன். அவனே தெய்வம். இந்தியர் வசிக்கும் நாடாயினும் சரி, ஆங்கிலர் வசிக்கும் நாடாயினும் சரி, மலையாயினும் சரி, காடாயினும் சரி, நிலமாயினும் சரி, கடலாயினும் சரி, எங்கும் நிரந்தரமாய் தன் பரந்த கிரணங்களை வீசி இருளை ஒழிப்பான்.

எனவே, அறிவைத் தேடுவதில் ஆத்திரமுடைய எவனும் ஒரே பாஷையிலேயே தன் முழு கவனத்தையும் செலுத்துவான் என்பது ஒப்ப முடியாத காரியமென்பேன். அறிவுக்கு பாஷைக் கட்டுப்பாடு இல்லை—இருக்க முடியாது. எல்லாப் பாஷைகளிலும் அறிவு புகட்டும் அரிய பொக்கிஷம் உளது. தாய்ப் பாஷையான தமிழ்ப் பாஷையிலுள்ள திரவியத்தை ஒவ்வொரு தமிழனும் எளிதில் அறிந்து கொள்ளலாகும். பின் ஏனோ தமிழன் படிப்பதில்லை, என்பீரோ? சொல்லுவேன்: அடிமை வாழ்வின் கொடிய பலன் நம்மவர் அறிவையும் அறிவில் ஆர்வத்தையும் கொன்றதாகும். அறிவுச் சூரியன்முன் அடிமைப் பனி இருக்க முடியாது.

பாரதியார் ஏதோ சில தேசீய கீதங்கள் மட்டும் பாடிய ஓர் தேசீயக் கவி என்று சிலர் அபிப்பிராயப்படுவதை யானறிவேன். இந்தத் தப்பெண்ணத்திற்குப் பல காரணங்கள் உள. பாரதியாரியற்றிய நூல்களைப் படியாமை ஒன்று. தேசீயக் கூட்டங்களிலேயே தேசீய வாதிகளால் இவரியற்றிய தேசீயப் பாட்டுகள் மட்டும் பாடப்படுவதிரண்டு. இலக்கியத் துறைகளில் ஈடுபட்டு வரும் சங்கத்தாரும், பண்டிதர்களும், உபந்நியாசகர்களும் பாரதியாரைப் பற்றி முழக்காதது மூன்றாவது காரணமாகும். இன்னும் பள்ளிக்கூடங்களில் இவர் நூலைப் பாடப் புத்தகமாக வைக்காததும் ஒரு காரணமென்பேன். அடிமை வாழ்வே! உன் வலிமைதானென்ன? பாரதியாரையும் வெளிவர வொட்டாது மடக்குகின்றாயே! இனி உன் எண்ணம் சாயாது! பாரதியார் ஜீவன் ஓயாது. எங்கள் தலை சாயாது.

தேசீயத் துறையன்றிப் பல துறைகளிலும் பாரதியார் சிறந்து விளங்குகின்றார். எனில், சிறப்பாகத் தேசீயத் துறையில் தலைசிறந்து விளங்குகின்றார். பாரத மக்களின் அடிமை நிலையைக் கண்டு பாரதியார் நெஞ்சம் குமுறுகிறார்:

தைரியமும், கொள்கைகளைத் தைரியமாக வெளிப்படுத்துதலும் நியாயமற்ற முறையில் தாக்கப்படுபவர்களைத் தீர்க்கமாகப் பாதுகாத்தலும் வாலிபர்களுக்கு முக்கிய விசேஷ குணங்களாயிருக்க வேண்டும்.

“நெஞ்சு பொறுக்குதில்லையே—இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்.

* * *

நெஞ்சு பொறுக்குதில்லையே—இதை
நினைந்து நினைந்திடினும் வெறுக்குதில்லையே
கஞ்சி குடிப்பதற் கிலார்—அதன்
காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்,
பஞ்சமோ பஞ்சமென்றே—நிதம்
பரதவித்தே உயிர் துடி துடித்து
துஞ்சி மடிகின்றாரே—இவர்
துயர்களைத் தீர்க்கவோர் வழியில்லையே!”

என்று மனங் கசிந்து பாரதியார் கண்ணீர் உதிர்க்கின்றார்.

இந்த நிலைமைக்கும் பல காரணங்கள் உள. அவைபற்றி இவ் வியாசத்தில் குறிப்பிடின், நீண்டதோர் கட்டுரையாய் முடிவதோடு, தலைப்பில் கொண்ட விஷயத்திற்கும் பொருந்தாததாய் முடியும். பிறப்பினால் “உயர்வு, தாழ்வு” உண்டு எனும் கொடிய எண்ணம் நம்மிடம் குடிகொண்டு நம்மை இந் நிலைக் காக்கியது. “மனிதர் யாருமோருநிகர்” என்ற சுதந்தர நாதம் இப்பொழுது முழங்கப்படுகிறது. “தீண்டப்படாதோர்” என்றொரு வகுப்பினரை நாம் தாழ்த்தி வைத்துள்ளோம். அந்தப் பெரும் பாபமே உருவெடுத்து, நம்மை அடிமையாய்த் தலைகுனிய வைத்ததுபோலும் என்று அடிகள் கூறியுள்ளார். நாமிவரை அடிமைப்படுத்த, நம்மைப் பிறர் அடிமைப்படுத்துவதும் இயற்கையின் முறையேபோலும்!

“தாழ்த்தப்பட்ட” வகுப்பினத்தில், பெண்டிர் என்றோர் வகுப்புமுண்டு. மனு முதல் இன்றளவும் இவ் வகுப்பினர் தாழ்த்தப்பட்டுள்ளார். ஆடவர்க்குள்ள பல உரிமைகளை இவர்க்கு மறுத்து வந்துள்ளார்கள். பொதுவாகப் பெண்டிர்க்கு ஆடவர் சொத்தில் உரிமை கிடையாது. இதற்குக் காரணம், “ஆடவரைப்போல், அறிவும், நிர்வகிக்கும் திறமையும், உலக அனுபவமும் அதிகமில்லாமையால், பெண்டிர் சொத்துவைத்து ஆள அருகதை உடையவரல்லர்; திறமையில்லார் கையில் சொத்துக்கள் தரின், அவை விரைவிலழிந்து படும்” என்று மறைநூல் வல்ல யாக்ஞவல்கரும், விக்ஞாயரேஸ்வரும் கூறியுள்ளார். பெண்பாலரை, ஆடவர் இவ்வாறு பல

அன்பானது பிரபஞ்சமென்னும் உத்தியானவனத்தில் பூத்த நன் மலர்களென்றும் அம் மலர்களால் கோர்க்கப்பட்ட மாலையைக் கொண்டு அன்பென்னும் தெய்வத்தை அலங்கரிக்கச் செய்வதே விதி என்றும் எவனொருவன் நினைக்கின்றானோ அவனே அன்பென்னும் தேவியைத் தொழுதவனாகிறான்.

காரணங் காட்டிச் சொத்துரிமை மறுத்து வந்துள்ளார். இந்தக் காரணம், ஆங்கிலர் இந்தியாவிற்கு சுதந்திரம் வழங்குவதற்குக் காட்டிவந்த—இன்னும் காட்டி வருகிற—போலிக் காரணம்போலிருக்கிறது. “நீ இன்னும் உன் நாட்டை ஆண்டுகொள்ளப் பக்குவம் வரமில்லை; உனக்குத் திறமை கிடையாது; அறிவு கிடையாது. உனக்கு அந்தத் திறமை வந்தவுடன் சுய ஆட்சி தருகிறோம். அதுவரை, உன் நன்மைக்காக(!) நானே ஆண்டு வருகின்றேன். நீ இன்னும் அடிமையாயிரு” என்று ஆங்கில ராஜதந்திரிகள் இந்தியருக்கு அடிக்கடி உறுதிமொழி கூறுவதுண்டு. “வாஸ்தவம்தானே!” என்று சில மூத்தண்ணாக்களும் தலையாட்டுவதுமுண்டு.

அடிமை நிலைக்கு முடிவு என்றுமுண்டு. பெண்டிர் உலகம் விழித்தெழுந்துவிட்டது. தன் உரிமைகளைக் கேட்க ஆரம்பித்துவிட்டது. “நீந்தக் கற்றுக்கொள்வதற்குள், தண்ணீரிலேயே கால் வைக்கலாகாது” என்று (ஆங்கிலர் இந்தியருக்குச் செய்த உபதேசம் போலே) ஆடவர் செய்த அரிய பிரசங்கத்தின் உட்பொருளைப் பெண்டிர் அறிந்துகொள்ள ஆரம்பித்துவிட்டனர். பெண்டிர் சொல்கின்றார்கள்: “உண்மைதான்; இன்று நீந்தல் அறியோம். நீரில் இறங்கித்தானே நீந்தக் கற்றுக்கொள்ளவேண்டும்? எமை ‘மூழ்க்காத’ நீரில் இறங்கிக் கற்றுக்கொள்ளுவோம். கூடுமாயின், நீவிர், எமக்குத் துணைபுரிந்து விரைவில் கற்றுத் தருவீர்—இலையேல் எங்களுக்கே கற்றுக்கொள்ளத் தெரியும்!” என்று முழங்குகின்றார்கள். இம் முழக்கத்தின் வலிமையும் நியாயமும் தெரிந்து ஆடவர்கள், பெண்டிர் கேட்பதைக் கொடுப்பதே கௌரவமாகும். இனித் தடுக்கமுடியாது. கெடுக்க முயலின், அவர்களே எடுத்துக்கொள்வர் என்பதை மறக்கலாகாது. ஆங்கிலேயா! இதில் நீயும் அறிந்துகொள்ள வேண்டிய உண்மை உண்டு.

பெண்ணடிமை கொண்டதாலே, இந்தியா இந்நிலைமை அடைந்ததென்பேன் நம் தேசம் முன்னேற வேண்டுமாயின்—தழைத்தோங்க வேண்டுமாயின்—நாகரீக உலகத்தின் மதிப்பைப் பெறவேண்டுமாயின்—சுதந்திரக் கொடியோடு சுகமாக வாழ வேண்டுமாயின்—ஒப்பு வரி ஒழிய வேண்டுமாயின் நம் நாட்டில் பெருப்பாலோருள்ளத்தில் அறிவென்னும் ஜோதி வெள்ளம் கரை மீறிப் பாயவேண்டும். பெண்டிரே பாதித் தொகையினராதலின், பெண் மக்கள் யாவரும் அறிவுடன் திகழவேண்டும்.

தம்மைத் தாமே ஒழுக்கத்திற்குக் கட்டுப்படுத்திக் கொள்ளல், களங்கமற்ற மனப்பான்மையுடன் உழைத்தல் முதலியவைதான் வாலிபர் இயக்கத்துக்கு ஆக்கமளிக்கும் உண்மையான சக்திகளாகும்.

எனில், நம் நாடோ? ஐயோ! நினைக்கினும் நெஞ்சு பகீர் என்கிறது. அறிவுடைய ஆண் மக்களே மிகக் கொஞ்சம் என்றால், பெண்பாலரைப்பற்றிச் சொல்லுவானேன்? சிறிது காலம்வரை, பெண்மக்கள் கல்வி கற்கவேண்டியது அவசியந்தானா?—'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பென்னத்துக்கு?' என்று நிகழ்ந்த சந்தேக உபந்நியாச காலம் மலையேறிப் போய்விட்டது. பெண்களும் அறிவுடையராக விளங்கவேண்டுவது அவசியந்தான் என்ற ஞானோதயம் தோன்றிவிட்டது. எனில், உண்மையான உயர்ந்த கல்வியைப் பெண்டிர்க்குத் தரவேண்டிய நம் ஆடவர் கடமையை மறவாது செய்தல் வேண்டும்.

வாசகவி பாரதியார், பெண்டிர் முன்னேற்றத்தைப்பற்றி என்ன சொல்கின்றார்? "பெண் மக்காள்! அறிவுடையராவீர்!—ஆடவர்காள்! பெண்ணுக்கு ஞானத்தைப் புகட்டுங்கள்" என்று, தன் இனிய பாக்களால் வேண்டுகின்றார். அவர் பாட்டுக்களுக்கும் சாதாரண வசன நடைக்கும் வித்தியாசமில்லை. பாரதியார் நடையோ, தெய்விக நடை. யாவரும் எளிதில் அறிந்துகொள்ளக்கூடிய விதம். இருதயத்திலிருந்து 'குபீர்' என்று வெளிவரும் வார்த்தைகள். 'கணீர்' என்று கேட்பவர் காதில் நுழைந்து, இருதயத்தில் உறையும் வார்த்தைகள். அவர் பாடல்களை ஆங்காங்கு அப்படியே குறிக்கின்றேன்.

ஆண்டவன் பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான்; அதைக் கெடுத்தனர் ஆடவர் என்று குறிப்பிடும் பாட்டு வருமாறு:

"பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான்—புவி
பேணி வளர்த்திடு மீசன்—
மண்ணுக்குள்ளே சில மூடர்—நல்ல
மாதறிவைக் கெடுத்தார்.

* * *

அறிவு கொண்ட மனித உயிர்களை
அடிமை யாக்க முயல்பவர் பித்தராம்."

இவ்வாறு மாதறிவை வளர்க்க வொட்டாது கெடுத்த ஆடவரை மூடரென்றும், பித்தரென்றும் பாரதியார் கூசாது ஏசும் வீர வார்த்தைகளின் சாரத்தை அறிந்து, அப் பாதகத்தை ஆடவர் விரைவிலொழிக்க முன்வருவாராக.

உங்கள் மனங்களை உயர்த்தி, இதர நாடுகளிலும் தேசங்களிலும் நடக்கும் சம்பவங்களைக் கவனத்தோடு படித்தறிந்து விசால புத்தியுள்ளவர்களாகுங்கள்; வேறொன்றும் அறியாமல், ஆழ்ந்த கிணற்றில் அடைக்கப்பட்டிருக்கிற தவளைப் போல் இராதீர்கள்.

மாதரை ஆடவர் கேவலமாக நடத்தும் மடமையைப் பொசுக்கி விடுவோம் என்று விடுதலைப் பாட்டில் பேரிகை கொட்டுகிறார் பாரதியார்:—

"மாதர்தம்மை யிழிவுசெய்யு மடமையைக் கொளுத்துவோம்
வைய வாழ்வுதன்னிலெந்த வகையினும் நமக்குளே,
தாதரென்ற நிலைமைமாறி யாண்களோடு பெண்களும்
சரிநிகர், சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே."

"அடிமை நிலையிலிருந்து கைதூக்கி, ஆடவருடன் பெண்டிரையும் சரிநிகர் சமான சமத்துவ நிலைக்குக் கொண்டுவந்து, சுகமாக நம் நாட்டில். வாழ்வோம்" என்ற பாரதியாரின் கனவு என்று பலிக்குமோ? 'மடமையைக் கொளுத்துவோம்' என்ற பாரதியாரின் கோபம் பொங்கி வழியும் வீர வார்த்தைகளைக் கவனியுங்கள். பாரதியார் உள்ளத்திலிருந்து அப்படியே துள்ளி விழுந்தன. நம்முள்ளத்தை அள்ளுகின்றது. கொள்ளை கொள்ளுகிறது. "ஆம், கொளுத்துவோம் மடமையை" என்று நம் இருதயத்திலிருந்து எதிரொலி கிளம்புகின்றது.

ஆடவரின் அசுர ஆட்சியின் கீழ் அடிமைப்பட்டிருந்த பெண்டிர். விடுதலையடைந்து ஆனந்தக் கும்மி யடிக்கின்றார்கள்.

"பெண்கள் விடுதலை பெற்ற மகிழ்ச்சிகள்
பேசிக் களிப்பொடு நாம் பாடக்
கண்களிலே யொளிபோல வுயிரில்
கலந் தொளிர் தெய்வநற் காப்பாமே"

என்ற காப்புப் பாடித் தமிழ் தேவியர் விடுதலைக் கும்மி பாட ஆரம் ஆரம்பிக்கின்றார். எல்லாப் பாட்டுக்களும் நெஞ்சை அள்ளுவன. எனினும் சிலவற்றை மட்டும் கீழே குறிப்பிடுகின்றேன்.

"ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போமென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்.

மாட்டை யடித்து வசக்கித் தொழுவினில்
மாட்டும் வழக்கத்தைக் கொண்டு வந்தே
வீட்டினி லெம்மிடங் காட்ட வந்தாரதை
வெட்டி விட்டோ மென்று கும்மியடி.

ஓர் மனிதனுடைய மனக் கண்ணைத் திறந்து அவன் புத்தியை விருத்தி செய்வது கல்வியே.

காதலொருவனைக் கைப்பிடித்தே யவன்
காரியம் யாவினுங் கைகொடுத்து
மாத ரறங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சி பெறச் செய்து வாழ்வமடி."

பழமையிற் பைத்தியங் கொண்டோர்க்கும் பாரதியார் கடையடிகளால் "ஆண்களோடு பெண்கள் படித்தால் பழமை கெட்டுப்போகாது, இப் புது நிலையில் மாதர் அறங்கள் பழமையைக் காட்டிலும் மாட்சி பெறச் செய்வோம்" என்றழகுபடக் கூறியுள்ளார்.

அடிமை நிலை யழித்து, சரிநிகர் சமான சுதந்திர வாழ்வுபெற்றெழுந்த புதுப் பெண்—"புதுமைப் பெண்"—ஜயபேரிகை கொட்டுகின்றாள். அவள் முழங்கிய சொல் ஒவ்வொன்றையும் "இந் நங்கை கூறும் வியப்புக்கள் கேட்டிரோ?" என்று நம்மிடம் கேட்கும் முகத்தான் பாரதியார், புதுமைப் பெண் புகன்றதுரைக்கும் நயம் வியத்தற்குரியது.

"புதுமைப் பெண்"ணைப் பாரதியார் கண் முன் கண்டார். கண்டு, அவள் நல்வரவை வாயாரப் போற்றி—அப் பொன்னடிக்குப் பல்லாயிரம் போற்றி—முக மலர்ச்சியுடன் வரவேற்கின்றார்.

"........................—பாரத நாட்டிலே
துன்ப நீக்கும் சுதந்திர பேரிகை
சாற்றி வந்தனை, மாதரசே! எங்கள்
சாதி செய்த தவப் பயன், வாழிநீ!

* * *

மாதர்க்குண்டு சுதந்திரம் என்று நின்
வண்மலர்த் திருவாயின் மொழிந்த சொல்,
வேதம் பொன்னுருக் கன்னிகையாகியே
மேன்மை செய்தெமைக் காத்திடச் சொல்வதோ?

* * *

அறிவு கொண்ட மனித வுயிர்களை
அடிமையாக்க முயல்பவர் பித்தராம்
சிறிய தொண்டுகள் தீர்த்து அடிமைச்சுருள்
தீயிலிட்டுப் பொசுக்கிட வேண்டுமாம்.

* * *

ஜாதி பேதமே நம் தாய்நாட்டை க்ஷீணதிசைக்குள்ளாகி விட்டதற்குக் காரணமெனக் கண்டு பலரும் விசனித்து, மறுபடியும் இந்தியர்கள் ஒன்று சேர்ந்து நம் நாடு க்ஷேம திசையை அடையும்படி உழைத்து வருகின்றனர்.

ஆணும் பெண்ணும் நிகர் எனக் கொள்வதால்
அறிவி லோங்கி இவ்வையம் தழைக்குமாம்

* * *

ஞான நல்லறம் வீர சுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்.

* * *

நிலத்தின் தன்மை பயிர்க்குள தாகுமாம்,
நீசத் தொண்டு மடமையுங் கொண்டதாய்
தலத்தில் மாண்புயர் மக்களைப் பெற்றிடல்
சாலவே யரிதாவதோர் செய்தியாம்.

* * *

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கு மிருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்.
அமிழ்ந்து பேரிருளாம் அறியாமையில்
அவலமெய்திக் கலையின்றி வாழ்வதை
உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணற மாகுமாம்,
உதய கன்னி யுரைப்பது கேட்டிரோ!

* * *

திலக வாணுதலார் நங்கள் பாரத
தேச மோங்க உழைத்திடல் வேண்டுமாம்
விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை
வீரப் பெண்கள் விரைவி லொழிப்பராம்

* * *

மூத்த பொய்ம்மைகள் யாவு மழிப்பராம்
மூடக் கட்டுக்கள் யாவும் தகர்ப்பராம்,
காத்து மானிடர் செய்கை யனைத்தையும்
கடவுளர்க் கினிதாகச் சமைப்பராம்
ஏத்தி யாண் மக்கள் போற்றிட வாழ்வராம்
இளைய நங்கையி னெண்ணங்கள் கேட்டிரோ."

'புதுமைப் பெண்' புகன்ற புதுமைகளைக் கேட்டோம்—அவளுரைக்குமுண்மைகளை மறுக்க முடியாது. எனில், கவிதை முனி பாரதியார் கண்ட கனவேயன்றோ? வருங்காலப் புதுமைப் பெண், பாரதி

ஆசாரம், யோக்யதை, கல்வி, தர்மநெறி முதலியவற்றால் மாத்திரமே இவ் வுலகில் பேதங்கள் ஏற்படலாமே யன்றி, பிறப்பினாலேயே வித்தியாசங் காண்பிப்பது தர்மநெறிக்கு ஒவ்வாததாகும்.

யார் கண் முன் தோன்றி, அவருக்குக் காட்சி தந்து போனாள். அவள் திரும்ப வருவதுறுதி. ஆனால் என்று வருவாயோ, பெண் மணியே?

பெண்டிர் அறியாமை இருளில் ஆழ்ந்திருப்பதால் ஆடவரையும் முன் போகவொட்டாது தடுத்து வந்ததுண்டு. கடந்த சுதந்திரப் போரில் தமிழ் நாட்டில் இன்னும் பல ஆடவர் தீவிரமாய் உழைக்கத் தயாராய் இருந்ததை யானறிவேன். காந்தியடிகள் அறப் போருக்கு அறை கூவி அழைத்த காலத்து, தேசபக்தர் சிலர் போர்க்கோலம் தரித்து வெளிக்கிளம்பும்போது, மெல்லிய கைகள் பல பின்னின்று இழுத்து இருத்தின. யாவர் கைகள் என்பீர்? அறியாமை யென்னும் இருளில் அமிழ்ந்து, அரிசியும் அடுப்பும் ஒழியப் பிறிதறியாப் பெண்கள்! என்னே பேதைமை! என்ன மடமை! அறியாமை யன்றோ இதற்குக் காரணம்? வீட்டுக்கு வெளியில் நடக்கும் விஷயங்கள் தெரிந்திருப்பாராயின் இப் பெண்மணிகள் இங்ஙனம் செய்வரோ? எலும்பும் தோலுமாய், அறுபத்திரண்டா மாண்டில், ஆடையின்றி வாடையில் மெலிந்து, அல்லலுறும் காந்தியடிகளின் சத்திய வாழ்க்கையையும், வீர உரைகளையும் மெல்லியற் பெண்டிர் கேட்பராயின், மனமிளகித் தாமே தேச சேவை செய்ய முன் வருவரன்றோ?

பாரதியார் "ஞான ரதம்" என்றோர் அரிய நூல் வசன நடையி லெழுதியுள்ளார். 'ஞானம்' என்ற இரதத்தைக்கொண்டு, உபசாந்தி லோகம், கந்தர்வ லோகம், சத்ய லோகம், தர்ம லோகம் முதலிய லோகங்கள் சென்று, ஆங்கு கண்ட காட்சியை எழுதியுள்ளார். இடையில் சத்ய லோகம் போகு முன்னர் மண்ணுலகத்தில் நடந்த சிற்சில சம்பவங்களை வரைந்துள்ளார். ஒரு "ஸீன்" ஈண்டுக் குறிப்பிடத் தகுந்தது. பாரதியார் தலை நோவுடன் வெளியிலிருந்து வீட்டுக்குத் திரும்பி வந்தார். மாடிமே லேறி, மனைவியை அழைத்துத் "தலை நோகிறது. சிறிது மிளகு அரைத்துக் கொண்டுவா" என்றார். "ஆமாம்; இரண்டு நாளைக் கொருமுறை இதொரு பொய்த்தலை விடும். பால்காரி பணம் கேட்டாள்; ராயர் வீட்டம்மாள் குடிக்கூலிக்கு ஞாபகப்படுத்தச் சொன்னாள்; குழந்தைகளுக்குக் காப்பு வாங்கித் தருவதாகச் சொல்லியிருந்தீர்கள்" என்று ஆயிரங் கணக்குச் சொன்னார் அவர் மனைவி. கடைசியாகத் "தெருவிலே போகிற நாய்களுக்கெல்லாம் பணத்தை வாரியிறைக்கிறது! வீட்டுச் செலவைப்பற்றிக் கேட்டால் முகத்தைச் சுளிக்கிறது. இப்படிச் செய்துகொண்டே வந்தால் அப்புறம் என்ன கிடைக்கும்? மண்தான் கிடைக்கும்" என்று ஆசீர்வாதம்பண்ணிப் பிரசங்கத்தை முடித்தார் அம்மையார்.

ஒரு மனிதனுடைய புதையல்களுக்குள் எல்லாம் மகா சிரேஷ்டமானது ஒரு சன்மார்க்க ஒழுக்கமுள்ள மனைவிதான்.

"தலைநோவு தீர்ந்துபோய்விட்டது. நீ தயவுசெய்து கீழே போகலாம்" என்று வணக்கத்துடன் தெரியப்படுத்தினாராம் பாரதியார்.

இந்தச் சம்பாஷணைக்கும், இந்த வியாசத்திற்குமுள்ள சம்பந்தத்தை வாசகர்கள் யூகித்திருக்கலாம். தேசீயத்தில் ஈடுபட்டுழைக்கும் பல ஆடவருக்கு "அறியாமை"ப் பெண்டிர் வீட்டில் செய்யும் பிரசங்கமும் ஆசீர்வாதமும் இப்படித்தா னிருக்கும் என்பதைப் பாரதியார் ஞாபகமூட்டுகின்றார். மண்ணுலக அத்தியாயத்திலிருந்து, தினசரிக் குறிப்பொன்றின் ஒரு பக்கத்தி லுள்ளதைக் குறித்து விட்டு மேலே செல்லுவோம்.

22-ம் தேதி......"என் ஜீவ தர்மமாகிய 'சுதேசியம்' தப்பு முயற்சி யென்றும், வீணென்றும், அதில் நான் தலையிட்டதிலிருந்து, குடும்பத்துக்குப் பற்பல கேடுகள் உண்டாகு மென்றும் சிறு தாயார் சன்மார்க்க போதனை செய்தாள்........

எதிர்பார்ப்பதற்கு மேல் கட்டுரை நீண்டுவிட்டது பொதுவாக ஆடவர்க்கு ஒரு வேண்டுகோள் செய்து, இவ் வியாசத்தை முடிக்க விரும்புகின்றேன். பெண்ணுலகை முன்னேற்றுவீர்! வீடுதோறும் கலையின் விளக்கம் ஜொலிக்கச் செய்வீர்! உங்கள் பெண்டிர் வெளி விஷயங்கள் அறிவதற்குத் தினசரித் தமிழ்ப் பத்திரிகை யொன்று உங்கள் வீட்டிற்கு வரவழைப்பீர்! உங்கள் பெண்டிரோடு தேசீய விஷயங்கள் பேசி, தேசீய ஞானத்தை ஊட்டுவீர்! விரைவில் வீட்டிலோர் பொந்தில் வளர்வதை விலக்கி, வீரப் பெண்களாய்த் திகழுமாறு செய்வீர்! படிக்கத் தெரியாத பெண்டிர்க்கு வாசிப்பீர். இதுவே என் தாழ்ந்த வேண்டுகோள். தமிழ்ப் பெண்டிர் வீரப் பெண்களாய் விளங்குக. இந்தியா விரைவில் சுதந்திரம் பெறுக.

"பெண்ணறத்தினை ஆண்மக்கள் வீரம்தான்
பேணுமாயின் பிறகொரு தாழ்வில்லை

* * *

அன்னம் ஊட்டிய தெய்வமணிக் கையின்
ஆணை காட்டில் அனலை விழுங்குவோம்."

தாயே! இன்னும் தூக்கமா? மதலையர் எழுப்பவும் தாய் துயில்வாயோ? குதலை மொழிக் கிரங்காததொரு தாயோ?

வந்தே மாதரம்.

போகிற பொழுதை இழுத்துப் பிடித்துப் பயன்படுத்திக்கொள்வது கஷ்டமே தவிர பொழுதைப் போக்குவது சுலபம்.

ஏமாப்பு.

[மு. வேலி.]

1

"உன்மீது அன்பில்லை" என எழுதிவிட்டான்.
சந்தித்தோம்; சந்தோஷமில்லை.
கனிவற்ற சந்திப்பு, களிப்பற்ற சிரிப்பு.
பேசினோம்; பேச்சில் ருசி இல்லை.
பிரியமற்ற பேச்சு, ரசமற்ற சக்கை.
சாப்பிட்டோம்; சாதம் இறங்கவில்லை.
உவப்பில்லா உறவு, உயிரில்லா உடம்பு.

2

நிராகரிக்கப்பட்டேன்.
உதறப்பட்ட அன்பு, உயர்தெரி நெருப்பு.
வாழைக்குத் தானீன்ற குலையே கூற்று,
மனிதனுக்கு இழந்த அன்பே கூற்று.

3

தூக்கிவிட்டார்கள்.
உயிரைத் துரத்தின கயிறே உடலைத் தாங்குகிறது.
மனமுடைந்தேன்.
களிப்பைக் கவ்விய அன்பே காத்திடும் இவ் வுடலை.

4

அவன் அன்புக்கு ஆசைப்படாதே.
வண்டின் கெஞ்சுதலைக் கேட்டா பூ விரிகிறது?
கிட்டாதாயின் வெட்டென மற.

நம் தேசம் கெட்டதிற்கும், நம்மவர் இப் பூலோகத்திலுள்ள மானிட மக்களாகிய பல தேச அந்நியர்களுக்குக் கீழ் அடிமையா யிருப்பதற்கும், உயிரினுமினிய சுதந்திரம் கடவுளால் கொடுக்கப்பட்டிருக்கும் மனிதர் உரிமை, இழந்து திகைத்து வருந்துவதற்குமு காரணம் ஐக்கியமின் கம்மி—ஐக்கிய மில்லாததேயாம்.

அபிநயக் கச்சேரி.

"கலைப் பிரியன்."

வெகு காலமாக இந்த அபிநயக் கலையை நான் ஒரு கலையாகவே மதிக்கவில்லை. கொஞ்ச காலத்திற்கு முன் எங்களூர்க் கல்யாணங்களில் சதுர்க் கச்சேரிகள் நடப்பது சகஜம். நானும் ஒரு சமயம் சதுர்க் கச்சேரி ஒன்றைப் பார்க்கப் போயிருந்தேன். அப்பொழுது நண்பன் ஒருவனும் என்னுடன் வந்திருந்தான். அங்கே இரண்டு நட்டுவர்கள், சிங்கிச் சப்தம் காதைப் பிய்க்கும்படி தெலுங்கில் ஒரு பாட்டைக் கத்தினார்கள். இப்பொழுது சதுர்க்காரியின் முகத்தைப் பார்த்தேன். கொஞ்ச நேரம் எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. பிற்பாடு விஷயம் புரிந்ததும் நண்பனைப் பார்த்து, "இது என்னடா? இவள் எல்லோரையும் பார்த்து வலிக்கிறாள்" என்றேன். என் நண்பன் முன்பின் யோசியாமல் "கொல்" என்று சிரித்தான். உடனே கச்சேரியில் இருப்பதாக உணர்ந்ததும் அப்படியே தன்னை ஒரு சிறிய பந்து மாதிரி ஆக்கி வாய்க்குள் திணித்துக்கொண்டான். பிற்பாடு அந்த சதுர்க்காரி ஒவ்வொருவர் பக்கமும் நெருங்கினாள். எங்கள் இருவரையும் பார்த்துக்கூட ஒரு வலி வலித்துவிட்டாள். எனக்கு அசாத்தியமாகக் கோபம் வந்துவிட்டது. அப்படியே ஒரு அறை விடலாமா என்று பார்த்தேன். இருந்தாலும் 'பொம்பளையாச்சே' என்று விட்டேன். அறையையல்ல, கோபத்தை. கொஞ்ச நேரங் கழித்து அவள் என்னைப் பார்த்து வலித்துக்கொண்டே வருகிறாப்போ லிருந்தது. உடனே அந்தப் பக்கம் விட்டு நழுவிவிட்டேன்.

ஆகக்கூடி நாட்டியக் கலை யென்பது ஒருவித வலிப்பு என்ற தீர்மானத்திற்கு வந்துவிட்டேன். அவள் வலிப்பு முகத்தோடே

ஒரு மனிதனுடைய எலும்புகள் சிறு பிராயத்தில் மெதுவாயிருந்து 21, 22 வயது வரும் பொழுதுதான் கடினமாகி பலமடைகின்றன. இந்த வயதாகு மட்டும் சரீரம் வளர்ந்துகொண்டிருக்கும். குறைந்தது பெண்ணுக்கு 18 வயதும், ஆணுக்கு 22 வயதும் கல்யாணமாகும் பொழுது இருக்க வேண்டும். சகுதி வருமுன் விவாகம் செய்யக் கூடாது.

நின்றதா? இல்லை. தேக முழுதும் பரவிற்று. கால்களும் கைகளும் கோணிக்கொள்வதில் போட்டி போட்டுக்கொண்டதுபோல் தோன்றிற்று. கடைசியாக இதெல்லாம் காக்கா வலிப்பின் கோளாறுகள் போலும் என்று எண்ணிக்கொண்டேன். இவ்வளவு அழகிய பெண்ணுக்கு இவ்வளவு மோசமான சிக்கு வரணுமா என்று அவள் விதியை நொந்தேன். ஆனால் பய்யப் பய்ய உண்மை வெளியாயிற்று, இந்தக் கோணல்களெல்லாம் சதுரைச் சேர்ந்ததுதானென்று.

ஒரு "மகா சுகிர்த ரூப சுந்தரி"யை "மதி வதனி"யை ரூபாய் கொடுத்து முகத்தை வலிக்கப்பண்ணி அதைப் பார்த்து ஆனந்த மடைகிற பேதை மக்களின் புத்தி என்னே! என்று என் உள்ளத்தில் ஒரு சிரிப்பு—ஒரு ஆவர்தனம் தாண்டவமாடிற்று. அதே மாதைப் பாடச் சொல்லியிருந்தால், அந்தப் பாட்டுக் கச்சேரியை நன்றாய் அனுபவித் திருக்கலாமே? அதெல்லாம் வேண்டாமய்யா, அநேகருக்குப் பாட்டு பிடியாதென்று வைத்துக்கொள்வோம். எங்களூர்க் கல்யாணங்களில் பந்தல் காலோடு சேர்த்து அலங்காரத்திற்காகப் பொம்மைகள் கட்டுவது வழக்கம். அவைகளின் அவயவமைப்பைப் பார்த்துச் சிறு பிள்ளைகள் கேலி செய்து சிரித்துக் கொண்டும் கும்மாளம் போட்டுக்கொண்டுமிருக்கும். ஏனென்றால் அவைகள் அவ்வளவு விநோதமாகச் செய்யப்பட்ட பொம்மைகள். இப் பொம்மை ஒன்றுக்குப் பதில் உயிருள்ள பொம்மையாக அந்தச் சதுர்க்காரியை வைத்துவிட்டால், எவ்வளவு ஜோராக இருக்கும்? வந்தவர்களெல்லோரும் ஆசை தீரப் பார்த்துவிட்டுப் போவார்களே. இதைவிட வேறு எவ்விதமாகவாவது கல்யாணத்திற்கு வந்தவர்களைச் சந்தோஷப்படுத்த முடியுமா? என்றெல்லாம் நான் சதுர்க் கச்சேரி பார்த்ததிலிருந்து எண்ணத் தலைப்பட்டேன்.

இப்படி வெகு காலமாக சதுரைப்பற்றியும் அதன் ஒரு பகுதியாகிய அபிநயத்தைப்பற்றியும் எண்ணிக்கொண் டிருந்தேன். ஆனால் இப்பொழுதோ எல்லா எண்ணங்களும் அடியோடு மாறிவிட்டன. எப்படி? ஏன்? என்றெல்லாம் உங்களுக்குத் தெரியவேண்டுமென்றிருக்கிறதல்லவா? சரி, சொல்லுகிறேன்.

ஐந்தாறு மாதங்களுக்கு முன் பட்டணத்தில் ஒரு ரஸிகர் வீட்டில் ஸ்ரீமதி பாலசரஸ்வதியின் அபிநயக் கச்சேரி நடந்தது. கச்சேரி ஆரம்பிப்பதற்கு முன் அங்கே இருந்த புண்ணியவான் ஒருவர் "தயவுசெய்து எல்லாம் தமிழிலேயே இருக்கட்டும்" என்று சொல்

உன் மனைவி—உன் காதலி உன் இளமைப் பருவ நட்பினளாய் இருக்கும்பொழுது எக் காரணம் பற்றியும் நீ இரண்டாவது விவாகம் செய்து கொள்ளக் கூடாது.

லிவிட்டார். அப்படியே அன்று எல்லாப் பாட்டுக்களும் தமிழிலேயே பாடப்பட்டன. ஸ்ரீமதி ஜெயம்மாள் தமிழ்ப் பதங்களைப் பாட, அவைகளுக்கு ஸ்ரீமதி பாலசரஸ்வதி அபிநயம் பிடித்துக் காண்பித்தார்.

முதலில் "எல்லா அருமைகளும் எல்லாப் பெருமைகளும்" என்ற பாட்டுப் பாடப்பட்டது. ஸ்ரீமதி ஜெயம்மாள் பல்லவியையே இரண்டு மூன்று தரம் பாடினார். அப்படிப் பாடும்பொழுது ஸ்ரீமதி பாலசரஸ்வதி தன்னிரு கைகளையும் இடுப்பில் வைத்துக்கொண்டு எதையோ யோசித்துக்கொண் டிருந்ததுபோ லிருந்தார். நான்காந் தடவை அப் பல்லவியைப் பாடும்பொழுது அபிநயம் ஆரம்பிக்கப்பட்டது. கைகளும் முகமும் போன போக்கை என்னென்று சொல்வேன்? என்னை அப்படியே தூக்கி வாரிப் போட்டுவிட்டது. அப் பாட்டில் வரும் கருத்துக்களையெல்லாம் உணர்ந்து, அப்படி உள்ளத்தில் உணர்ந்த உணர்ச்சிகளையெல்லாம் முகத்திற்குக் கொண்டு வந்து காட்டினார். கைகளும் முகத்திலுள்ள அவயவங்களும் கொஞ்சமாவது பிணங்காமல் ஒத்துழைத்தன. ஒவ்வொரு வித உணர்ச்சியும் முகத்தில் கூடு குறைவின்றிப் படமெடுத்ததுபோல், வந்து மறைந்தன. "ராஜாதி ராஜன்" என்றபொழுது அந்த ராஜ தோரணையை அந்த முகத்தில் கண்டேன். இந்த ஆண்மை வீரம் அந்தப் பெண்ணுக்கு எங்கிருந்துதான் வந்ததோ? "கடுந்தொரு வார்த்தை சொன்ன தறியேண்டி" என்றதை வேறெவ் வார்த்தையாலும் அந்த முகத்தில் கண்டதுபோல் விவரிக்க முடியாது. "எங்கிருந்தாலும் அவரை நினைத்துருக" என்பதில் அந்த "உருகுகிறது" என்றது எப்படி என்பதை அன்றுதான் கண்டேன். மார்பில் கையை வைத்து ஒரு தடவை தேக முழுதும் ஒரு குலுக்குக் குலுக்கினார். (இது நாமுந்தான் செய்யலாமே என்று கெட்டிக்காரத்தனமாய் எண்ணிவிடாதீர்கள். அவ்விதம் செய்வது இலகுவில் சாத்தியமாகக் கூடியதில்லை.) அதுபோது பாலசரஸ்வதியின் முகத்திலே அரிய பெரிய மாறுதல்கள் காணப்பட்டன. அவைகளைப் பார்த்தால் அவர் உடம்பைக் குலுக்கியது சாமான்யம் என்று பட்டுவிடும். இந்தப் பாட்டு ஒன்றுக்குப் பிடித்த அபிநயத்திலிருந்தே எனக்கு முதல் முதலாக இக் கலையின் "எல்லா அருமைகளும் எல்லாப் பெருமைகளும் எல்லாந் தெரிந்து"விட்டன என்று சர்வ சாதாரணமாய்ச் சொல்லலாம். இன்னொரு சமயம் "வேலவரே உமைத் தேடி" என்ற பாட்டில்

ஒருவனது உயர் பதவியும், எதற்கும் அஞ்சாத நெஞ்சமும், உறுதியான எண்ணமும், பிறரை அடக்கி ஆளும் தன்மையும், மிகுந்த செல்வாக்கும் அவனது காதலின் முன் ஒன்றுக்கும் உதவாதனவாய் விடக்கூடும்.

"மின்னல் கொடியோ அன்ன நடையோ" என்ற வாக்கியத்தை அபிநயத்தால் விளக்கியதை நான் என்றும் மறக்க முடியாது. முன்னாள் தொட்டு நம்மவர்கள் ஒரு பெண்ணைக் கொடிக்கும் அவளுடைய நடையை அன்னத்துக்கும் ஒப்பிட்டுச் சொல்வது மரபு. அதன் உண்மையை அன்றுதான் நன்கறிந்தேன். இப்படி உதாரணத்துக்காக அழகான இடங்களை எடுத்துச் சொல்ல வேண்டுமானால் ஆயிரம் இரண்டாயிரம் என்று அடுக்கிக்கொண்டு போகலாம். ஆனால் அது இங்கே முடியாத காரியமென்று விடுகிறேன்.

ஆச்சரியத்திலும் ஆச்சரியம் என்னவென்றால் முகத்திலுள்ள கண், மூக்கு, உதடு, கன்னம் முதலிய எல்லா அவயவங்களும் அவர் ஆளுகைக் குட்பட்டு இருக்கின்றன வென்பதே. அவைகளை அவர் என்ன செய்யச் சொன்னாலும் அவைகள் உத்திரவுப்படியே நடக்கும். உதாரணமாக, கன்னத்தில் ஒரு ஓரத்தில் கொண்டுபோய் ஒரு சிரிப்பைத் தவழச் செய்து விட்டுவிடுவார். இன்னொரு சிரிப்பைக் கன்னம் முழுதும் பரப்பிவிடுவார். எல்லாவற்றைக் காட்டிலும் அவர் கண்கள் செய்யும் வேலையே வேலை. அவர் எவ் வுணர்ச்சியைக் காட்டுகிறார் என்பதை அவர் கண்களை மாத்திரம் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். உதாரணமாக, அவருடைய முகத்தைப் பூராவும் மூடிவிட்டுக் கண்களுக்கு மாத்திரம் இரண்டு துவாரங்கள் போட்டுவிட்டால் போதும். எல்லா உணர்ச்சிகளையும் நமக்குத் தெரியும்படி வெளியிட்டுவிடுவார் என்றே சொல்லலாம். இன்னும் கோபத்தில் அவர் உதடுகள் துடிப்பதும், வேண்டிய வேளை வேண்டிய அளவு நெற்றி சுளித்துக்கொள்ளுதலும், எவ்வளவு கடினமான காரியம் என்பதை இக் கலை அனுபவம் உள்ளவர்களுக்குத்தான் தெரியும்.

எப்படி இவர், தான் உள்ளத்தில் உணர்ந்த வெவ்வேறான உணர்ச்சிகளை முகத்திற்குக் கொண்டுவந்து காட்டினார்? மனத்திலிருந்து இவ் வுணர்ச்சிகளை முகத்துக்குப் பிடித்துத் தள்ளினது எது? அது ஒரு சக்தி. அந்த அருஞ் சக்தியைத்தான் அபிநயக் கலை என்று சொல்லுகிறோம். உணர்ச்சியை முகத்துக்குக் கொண்டு வருவது எல்லாக் கலைகளிலும் கடினமானது என்று மேல்நாட்டுப் பெரிய கலைஞர்கள் ஒருமுகமாகச் சொல்லுகிறார்கள். இதில் பெண்களே மிகத் திறமை பெற்றவர்கள். இச் சக்தியைக் கைவசம் வைத்துக்கொண்டுதான், மேல் நாட்டு 'ஸ்டார்கள்' உலகம் யாவையும் தம் வசம் ஆக்குகிறார்கள் நான் இதுகாறும் இப்படிப்பட்ட 'ஸ்டார்கள்' இந்தியாவில் இல்லவே இல்லை யென்றும், மேல் நாட்டு 'ஸ்டார்கள்' போல் நடிக்க இந்தியர்களுக்கு இன்னும் பல்லாண்டுகள் கழிய

பிரியமற்ற சம்பத்தியம் ஜீவன் உடலை விட்டகலும் நாள்வரையும் துயரம் விளைத்து இறுதியில் தற்கொலை புரிந்துகொள்வதற்கும் வழி காட்டும்.

வேண்டு மென்றும் எண்ணியிருந்தேன். ஆனால் இப்பொழுதோ ஸ்ரீமதி பாலசரஸ்வதி ஒரு விதத்தில் அந்த மேல் நாட்டு 'ஸ்டார்க'ளுக்கும் மிகமிக மேலெனத் தெரிந்துகொண்டேன் அந்த நடிகர்களெல்லாம் துக்கமான கட்டம் வரும்பொழுது கொஞ்ச நேரத்திற்குத்தான் முகத்தில் விசனக் குறியைக் காட்டுவார்கள். சந்தோஷமான கட்டத்தில் சந்தோஷக் குறியைக் காட்டுவார்கள். தனித் தனியே ஒவ்வொரு உணர்ச்சியையும் எடுத்துக் காட்டுவார்கள். ஒரு உணர்ச்சியிலிருந்து இன்னொரு உணர்ச்சிக்குப் போவ தென்பது ரொம்ப அபூர்வம். ஆனால் இது ஸ்ரீமதி பாலசரஸ்வதியிடம் வெகு சகஜம். ஒரு வரியில் ஐந்தாறு வேறுபாடான உணர்ச்சிகள் வரும். அவைகளை ஒன்றன்பின் ஒன்றாக முகத்தில் காட்டுவார். உதாரணமாக "அன்புள்ள போது கோபம் இதற்கு மென்மேலே" என்ற வரியை அபிநயித்துக் காட்டும்பொழுது பார்த்தால் இந்த விஷயம் நன்கு விளங்கும் ஒரு விருத்தத்தை ஒரே ராகத்தில் பாடுவது சாதாரணம். இதுதான் மேல்நாட்டு ஸ்டார்கள் செய்வது ஆனால் அதே விருத்தத்தை வெவ்வேறான கருத்துக்கும் உணர்ச்சிக்கும் தக்கவாறு ராகங்களை அமைத்து ராகமாலிகையில் பாடுவது எவ்வளவு கஷ்டமோ எவ்வளவு மேலாக இருக்குமோ அவ்வளவு மேலாக இருக்கும் ஸ்ரீமதி பாலசரஸ்வதியின் அபிநயம்.

இப்படியாக, அன்றைய தினம் எனக்கு அபிநயக் கலையின் அற்புதங்கள் முதன் முதலாகத் தெரியவந்தது இவ்வளவும் இதுகாறும் தெரியாமலல்லவா போய்விட்டது என்று நினைக்கவும் ஆத்திரம் பொங்குகிறது. இதற்கெல்லாம் காரணம் தமிழர் முன்னிலையில் தமிழ்நாட்டுக் கலையை அன்னிய பாஷையில் பாட்டுப் பாடி நாசமாக்கியதுதான் என்று தெளிவாகத் தெரிகிறது அன்றைய தினமும் எல்லாப் பாட்டுக்களும் தெலுங்கில் இருந்திருந்தால், ஸ்ரீமதி பாலசரஸ்வதியின் திறமையும் கலையின் பெருமையும் எனக்குத் தெரியாமல் போயிருக்கும். இதையும் ஒருவித முகவலிப்பு என்றே எண்ணும்படியாக இருந்திருக்கும். அவ்வாறில்லாது எல்லாம் தமிழிலேயே இருந்த ஒரு காரணத்தினால் அன்றைய தினத்தை என் வாழ்நாளிலேயே ஒரு விசேஷ நாளாகவே கருத வேண்டியிருக்கிறது. தமிழ் நாட்டில் தமிழிலும், தெலுங்கு நாட்டில் தெலுங்கிலும், மலையாள நாட்டில் மலையாளத்திலும், இங்கிலாந்தில் இங்கிலிஷிலும் பாட்டுக்கள் பாடி, அவைகளுக்கு அபிநயம் பிடித்தால், ஒவ்வொரு தேசத்திலும் இக் கலை மென்மேலும் அபிவிருத்தியடையும் என்பதில் யாதொரு சந்தேகமும் கிடையாது.

ஆரம்பித்த காரியத்தை செய்துகொண்டு வரவர, அதில் பக்தி உண்டாகும்.

முசோலினி.

திரு. கே. வீ. எஸ். வாஸ் அவர்கள், B. A., (Hons.)

ஜனனமும் தாய் தந்தையர்களும்

இதாலி தேசத்தில் போலோனு (Bologna) ரிமினி (Rimini) என்னும் இரு நகரங்களுக்கும் இடையே செல்லும் இருப்புப் பாதையின் நடுவில் போர்லி (Forli) என்றோர் ஸ்டேஷனிருக்கிறது. இந்த ஸ்டேஷனிலிருந்து இடது புறமாகச் சில மைல்களுக்கப்பால் டோவியா (Dovia) என்றோர் சிறு கிராமமிருக்கிறது. இங்குள்ள வீடுகளெல்லாம் அநேகமாய் ஒன்றிரண்டு அடுக்குகளுள்ளவைகளாகவே யிருக்கும் வீட்டின் அடித்தளத்தில் வியாபாரக் கிடங்குகளோ, தொழிற்சாலைகளோ சாதாரணமாய்க் காணப்படும். ஜனங்கள் வீடுகளின் மாடிகளிலேயே வசிப்பது வழக்கம். இப்படிப்பட்ட வீடுகளொன்றில் 1883-ம் ஆண்டில் ஜூலை 29உ இதாலி தேச சர்வாதிகாரி சிஞ்ஞோர் முசோலினி ஜனனமானார்.

முசோலினி.

முசோலினியின் தந்தையின் பெயர் அலெக்ஸாண்டர் என்பதாகும். அவருடைய தாயாரை ரோஸா மால்டோனி யென்பார்கள். இவ்விருவர்களுக்கும் பிறந்த மூன்று குழந்தைகளுள் முசோலினியே மூத்தவராவார். அலெக்ஸாண்டரும், ரோஸா மால்டோனியும் ஒருவருக்கொருவர் முறணான குணங்களை யுடையவர்கள். அலெக்ஸாண்டர் ப்ரிடாபியோ (Predarpio) என்னுமிடத்தில் 1854-ம் வருடம் நவம்பர் மாதம் பிறந்தார். பிறந்தது முதல் அவர் இறக்கும் வரையில் கலாசாலைகளிலோ, பள்ளிக்கூடங்களிலோ சென்று கல்வி பயின்றதில்லை. அதில் அவருக்கு ஆசையுமில்லை.

டோவாடோலா (Dovadola) என்னும் கிராமத்திற்குச் சென்று அங்கு இரும்பு வேலைகளைக் கற்று தனது இருபத்தியாறும் ஆண்டில் ஓர் கருமானாக டோவியா கிராமத்திற்கு வந்து சேர்ந்தார், அலெக்ஸாண்டர் பிறரிடம் அன்பாய்ப் பேசுபவராயினும், முன் கோபமும் மூர்க்கத்தனமும் இவருக்கு அதிகம். அலெக்ஸாண்டர் சோஷியலிஸ்டுக் கொள்கைகளை மிக ஊக்கத்துடன் பின்பற்றுபவர். இதே காரணத்தினால் தான் அவர் திருமணத்திற்குச் சில காலத்திற்கு முன் கைதி செய்யப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டிருந்தார். அதன் பின் அலெக்ஸாண்டர் விடுவிக்கப்பட்ட போதிலும், எப்பொழுதும் போலீசாருடைய மேற் பார்வையிலேயே வைக்கப்பட்டிருந்தது மன்றி இருந்த விடத்தை விட்டு நகருவதற்கும் போலீஸாரின் அனுமதியின்றி நகர சுதந்திரமற்றிருந்தார். இப்படிப்பட்ட நிலையிலேயே அலெக்ஸாண்டர் ரோஸா மால்டோனி என்னும் மாதை மணந்து கொண்டதும் முசோலினி பிறந்ததுமாகும்.

ஆனால் வெகு விரைவில் காலம் மாறி சோஷியலிஸ்டுகள் அரசாங்கத்தில் அதிகாரம் படைத்தவர்களாகவும் ப்ரிடாப்பியோ நகரத்தின் மேயர் பதவியை அலெக்ஸாண்டர் பெற்றார். அவருக்குக் கல்வி யறிவு அதிக மில்லாவிடினும் பொதுஜன அபிப்பிராயங்களும், உலக விஷயங்களும் நன்கு தெரியுமாதலின் தனது பதவியில் மிகத் திறமையுடனிருந்து வந்ததாகவே கூறப்படுகிறது.

முசோலினியின் தாயாரும் ப்ரிடாப்பியோ நகரத்திற் பிறந்தவளாயினும் அலெக்ஸாண்டரைப் போலின்றி நன்கு கல்வி கற்றவளாகும். போர்லி (Forli) நகரப் பள்ளியில் படித்து உபாத்தியாயினிப் பட்டம் பெற்று ரோஸா மால்டோரை 1882-ம் ஆண்டில் தனக்கு மணமாகும்வரையில் சிறு கிராமப் பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயினியாக யிருந்து வந்தாள். மணமான பின்னரும் ரோஸா மால்டோனி இத் தொழிலைக் கைவிடாது சிறுவர்களைத் தன் வீட்டிலழைத்துப் பாடங்கள் சொல்லிக் கொடுத்து வந்தாள். ரோஸா மால்டோனி கணவனைப்போலின்றி எக் காரணத்தைக் கொண்டும் கோபங் கொள்ளாத சாந்த குணமுடையவளாகும்.

ரோஸா மால்டோனி ஓர் உபாத்தியாயினி யாதலின் சிறுவர்களை எப்படிப் பழக்கினால் அவர்களது வாழ்க்கை தேசத்திற்கும் அவர்களுக்கும் பயனுள்ளதாக விருக்கும் என்பதை நன்குணர்ந்தவள். ஆகவே முசோலினியின் முதல் குரு அவரது தாயாரே யாகும். அவருக்கு ஐந்தாம் ஆண்டு முடிவதற்குள் எந்தப் புஸ்தகத்தை எடுப்

பினும் திறமையுடன் தடங்கலின்றி வேகமாகப் படிப்பதற்கு ரோஸா கற்பித்து வைத்துவிட்டாள் என்றே கூற வேண்டும்.

முஸோலினியின் பாலப் பருவம்

முஸோலினி அவரது ஆறும் ஆண்டில் டோவியா கிராமத்தினின்று இரண்டு மைல்களுக்கப்பாலுள்ள ஓர் பள்ளிக்கு அனுப்பப்பட்டார். ஆனால் பள்ளி வாசம் அவருக்கு நகர வேதனையாக விருந்தது. சேஷ்டைகள் செய்வதிலும் ஓடி விளையாடுவதிலும் தன் ஊக்கத்தை முஸோலினி காட்டி வந்தாரேயன்றி கல்வியிற் சிறிதளவும் தனது கவனத்தைச் செலுத்துபவராகவில்லை. முஸோலினிக்குப் பழவர்க்கங்களிலும் பறவைகளிடமும் விருப்பமதிகமாதலின் இவ்விரண்டையும் எங்கு கண்ட போதிலும் களவாடுவதற்குச் சிறிதும் பின்வாங்க மாட்டார். ஒரு சமயம் சில பறவைகளைத் திருடிக்கொண்டு ஓடி வருகையில் அவைகளின் சொந்தக்காரன் இவரை வெகு தூரம் வரையில் துரத்திக்கொண்டு வந்தானாம். முஸோலினி தப்பித்துக்கொண்டு ஓடி வருகையில் ஓர் சிறு ஆறு குறுக்கிடவும் தொப்பென்று அதில் குதித்துத் தப்பியோடி வந்துவிட்டனராம். அவ்வாறே முஸோலினியின் பால்யச் சேஷ்டைகளைப் பற்றிப் பல கதைகள் கூறப்படுகின்றன.

பழம், பறவைகளைத் திருடுவதைத் தவிர முஸோலினி பால்யமுதற்கொண்டே ஓர் போர் வீரனாக விளங்கினார். தன்னைவிட வளர்ந்தவனாயினும் அவனுடனும் சண்டை செய்ய முஸோலினி எப்பொழுதும் பின்வாங்கியவரல்ல. பல சமயங்களில் முஸோலி சண்டை செய்துவிட்டு உதிரம் வடியக் காயங்களுடன் வீடு திரும்பியதுண்டு. ஆயினும் முஸோலினியை அன்பின் அவதாரமென்றே கூற வேண்டும். பிறர் வருந்துவதைக் காண அவர் மனம் என்றும் சகிப்பதில்லை. பிறருடைய கஷ்ட காலங்களில் அவர்களுக்குதவி புரிய வேண்டியது தனது கடமை என்று நினைக்கும் சுபாவமுடையவர். இதை விளக்க ஓர் சிறு உதாரணம் கூறுவதுண்டு:—ஒரு சமயம் முஸோலினி சில வாலிபர்களுடன் கூடிப் பழங்கள் களவாடச் செல்லுகையில் ஒருவன் மரத்தின் மீதேறிப் பழங்களைச் சுலுக்கிக்கொண்டிருந்தானாம். இதர நண்பர்களும் முஸோலினியும் கீழே உதிர்ந்த ஆப்பிள் பழங்களைப் பொறுக்கிச் சாப்பிட்டுக்கொண்டிருக்கையில் சற்று தூரத்தில் மரத்தின் சொந்தக்காரன் வந்துகொண்டிருப்பதைக் கண்டு எல்லா வாலிபர்களும் ஓட்டமெடுத்தார்களாம். மரத்தின் மேலிருந்தவன் மரத்தின் சொந்தக்காரன் வந்துவிட்டதைக் கண்டு கலவரமுற்று கீழே தாவவும் கால் முறிந்து காயம்பட்டு எழுந்திருக்க வியலாமல் அழுதானாம். மற்றவர்களுடன் தானும் ஓடிய முசலோனி இவனது அழுகுரலைக் கேட்டு ஓடி வந்து அவனையும் தன் தோட்களின் மீது தூக்கிக்கொண்டு ஓடினராம். அவனைக் காப்பாற்றுவதற்குச் சென்றால் தானும் மரத்தின் சொந்தக்காரன் கையிலகப்படுவோம் என்பதை முஸோலினி நன்கறிவாராயினும் காயப்பட்டுக் கதறும் தன் நண்பனைக் காப்பாற்றுவதில் மட்டும் அவர் மனம் சென்றதேயன்றி மரத்தின் சொந்தக்காரன் தண்டிப்பானே யென்ற அச்சம் அவருக்குச் சிறிதும் தோன்றவில்லையாம்!

கைகடந்து போன திரவியத்தை முயற்சியாலும், மறந்துபோன அறிவைகற்பதனாலும், இழந்தசுகத்தை அளவறிந்துண்பதனாலும், ஔஷதத்தாலும் மீளவும் அடையலாம். வீணே கழிந்த காலமோ ஒரு பொழுதும் மீளாது.

இப்படியே 1892-ம் வருடம் வரையில் அதாவது தனது ஒன்பதாம் வயதுவரையில் முஸோலினி ப்ரிடாப்பியோ பள்ளியில் மூன்று வருட காலத்தைக் கழித்துவிட்டு வீடு திரும்பவும் அவருடைய தாய் தந்தையர் முஸோலினியின் பிற்காலத்தைப்பற்றி யோசிக்கலாயினர். அடிக்கடி முஸோலினி தன் தந்தைக்கு அவருடைய வேலைகளில் உதவியாக விருந்திருக்கிறாராதலின், அலெக்ஸாண்டர் முஸோலினிக்குச் சகல வேலைகளையும் கற்றுக்கொடுத்துக் கைதேர்ந்த கருமானாக்க வேண்டுமென்றே விரும்பினார். ஆனால் அவரது தாயாரோ "வளரும் பயிர் முளையிலே தெரியும்" என்றபடி முஸோலினி பிற்காலத்தில் இதாலி தேசத்தில் இணையிலா வீரனாகப் போகின்றான் என்பதை முன்னராகவே அறிந்தவள்போல் இதை மறுத்து, முஸோலினியின் கல்வி வளர்ச்சிக்கே வழி தேடவேண்டுமேயன்றி, கருமான் வேலைக்காகப் பிறந்தவன் அவனல்லவென்று வற்புறுத்தி வந்தாள். முஸோலினி ஒருவருமில்லாத சமையலறைக்கட்டிலும் தாழ்வாரத்திலும் நின்றுகொண்டு தனக்கு முன் இலக்ஷக் கணக்கான ஜனங்கள் நின்றுகொண்டிருப்பதைப்போல் மனதிலெண்ணிப் பிரமாதமாக உரத்த குரலில் பிரசங்கங்கள் செய்வாராம். அவரது தாயார் இதை அடிக்கடி கவனித்துக் "குழந்தாய்! பைத்தியக்காரர்களல்லவா கல்லுடனும், மரத்துடனும், சுவற்றுடனும் பேசுவார்கள்? நீ யாருடன் பேசுகிறாய்?" என்று ஏளனம் செய்வாளாம். "அம்மா! நான் பல்லாயிரக் கணக்கான ஜனங்களின் முன் தடுமாறாமல் பேசுவதற்குக் கற்றுக்கொள்ளுகிறேன்! இதாலி என்னை அண்டி நிற்கும் காலமும் ஒருநாள் வரலாம்!!" என்று புன்முறுவலுடன் முஸோலினி பதிலளிப்பாராம்.

மனோ பலத்தின் ஒரு அங்கமாகிய பொறுமை மிக நுண்ணியது, கனம் மிக்கது, அரியது. போகம் அனைத்திற்கும் பராக்கிரமம் அனைத்திற்கும் மூலம் பொறை. பொறை இல்லாவிடில் இதயத்திற்கு இன்பம் தரும் ஆசையும் துன்பமாய்விடும்.

முசோலினியின் இப்படிப்பட்ட அப்பியாசங்களே ஒரு காலத்தில் அவர் இதாலி தேசத்தில் பெயரும் புகழுடனும் விளங்குவார் என்று எண்ணும்படி ரோஸா மால்டோனியைத் தூண்டியது.

முசோலினியின் வீட்டினின்று சுமார் ஆறு மைல்களுக்கப்பால் பேயன்ஸா (Faenza) என்னும் நகரத்திலுள்ள ஓர் கலாசாலைக்கு முசோலினி 1892-ம் ஆண்டில் அனுப்பப்பட்டார். முசோலினி பள்ளியை விட்டுக் கலாசாலையை யடைந்தபோதிலும், அவருடைய பள்ளி வழக்கங்களும், குறும்புத்தனமும் அவரை விட்டபாடாகவில்லை. ஒருநாள் மாணவனொருவனுடன் சண்டை போடுகையில் முசோலினி மூர்க்கமாகத் தனது பேனாக் கத்தியால் அவனைக் காயப்படுத்திவிட்டாராம். இது கலாசாலை மேலதிகாரிகளுக்குத் தெரியவும் முசோலினி கலாசாலையினின்று வெளியேற்றப்பட்டார். ஆனால் முசோலினி இத்துடன் படிப்பை விட்டுவிடவில்லை. உபாத்தியாயர் தொழிலைக் கற்பிக்கும் மற்றோர் கலாசாலையில் சேர்ந்து படிக்க வாரம்பித்தார். கடைசியாக உபாத்தியாயரெனப் பட்டமொன்றையும் பெற்று, முசோலினி 1898-ல் வீடு திரும்பினார் இவ்வாறே 1892 முதல் 1898 வரையில் ஆறு வருட காலங்களைக் கலாசாலைகளில் கழித்துத் தனது பதினைந்தாம் ஆண்டைக் கடந்தார்.

எங்கெங்கோ வேலைக்குத் தேடியலைந்து, கடைசியாக 1902-ம் ஆண்டில் ஓர் உபாத்தியாயர் உத்தியோகத்தைப் பெற்றார். அவருடைய வகுப்பில் சுமார் நாற்பது மாணவர்களேயிருந்தனர். அவர் தினமொன்றுக்கு நான்கு மணி நேரமே வேலை செய்தார். அவருக்குக் கொடுக்கப்பட்ட மாதச் சம்பளம் 55 லயர் (Lire இதாலி தேச நாணயம்). ஆனபோதிலும் (அதாவது அப்பொழுது 2 பவுன் 5 ஷிலிங்குக்குச் சமானமானதாகும்) சாமான்களெல்லாம் வெகு மலிவாக விருந்தமையால் மாதம் தன் வருமானத்தில் 10 லாயர் சேகரம் செய்துவந்தாராம். தனது வேலை நேரம் தவிர இதர சமயங்களில் முசோலினி சித்திரம், சிற்பம், கானம், நடனம், இவைகளையும் கற்றுவந்தார். இக் காலத்தில் பல நூல்களைப் படிக்கவும் அவருக்கு ஓழிவிருந்தது. அந்த நகரத்தில் ஒவ்வொரு விளையாட்டு மேடைகளிலும், நடனசாலைகளிலும் ஊக்கமெடுத்துக்கொண்டு முசோலினி இன்பமாகவே தனது காலத்தைக் கவலையின்றிக் கழித்துவந்தார். ஆனால் இந்த உபாத்தியாயர் வேலையும், இன்ப வாழ்க்கையும் முசோலினிக்கு வெகு நாட்கள் வரையில் நீடித்திருக்கவில்லை.

பொது அறிவு, சந்தர்ப்பம், கருத்து, விடா முயற்சி, சாமர்த்தியம் முதலிய குணங்களே மிகு உயர்ந்த கல்வித் துறைப் பயிற்சியைக் காட்டிலும் மனிதருக்கு முக்கியமாய் உதவுகின்றன.

முசோலினி—ஓர் வேலைக்காரன்

முசோலினிக்கு யாத்திரை செய்து பல தேசங்களையும் சென்று பார்த்து மகிழவேண்டுமென்றோர் அவாவுண்டாகியது ஆனால் அக் காலத்தில் யாத்திரை செய்வதென்றால், பணச் செலவு அதிகமாகுமென்பதை முசோலினி அறியாதவரல்ல. ஆனால் எவ்வித அவஸ்தைகளுக்கு உட்படினும் தேச சஞ்சாரியாகக் கிளம்பவேண்டியது அவசியமெனத் தீர்மானித்துச் சிறிது பண மனுப்பும்படி தன் தாயாருக்கு முசோலினி தந்தியடிக்கவும், அவரது தாயார் தந்தி மணியார்டரில் 45 லயர் அனுப்பினார்களாம். இத்துடன் முசோலினி ஊரைவிட்டுக் கிளம்பி ஸ்விஸர்லாந்து தேசத்திற்கு வந்து சேர்ந்தார். ஆனால் இங்கு வந்ததும் கையிலிருந்த பணமெல்லாம் செலவழிந்துவிட்டது. ஆயினும் அவர் மனம் சிறிதும் தளர்ச்சியடையவில்லை. அவ்வூரிலுள்ள கொல்லன் ஒருவனை யணுகித் தனக்கு ஏதாயினும் ஓர் வேலை கொடுக்கும்படி வேண்ட, அவனும் அப்பொழுது கட்டிக்கொண்டிருந்த வீட்டில் வேலை யொன்றைக் கொடுத்தான். இங்கு முசோலினி கற்களைத் தூக்கிக் கொடுத்துக்கொண்டும், சுவற்றுக்கு மண் பூசிக்கொண்டும் சாதாரண வேலையாளைப்போல் சில காலம் வேலை செய்துவந்தார். அவருக்குத் தினமொன்றுக்கு 3 லயர் சம்பள மளிக்கப்பட்டது. சிறிது பணம் கையில் சேர்ந்ததும் (1902-ம் வருடம் ஜூலை மாதம் 20உ ஞாயிற்றுக்கிழமை) அவ்வூரை விட்டுக் கிளம்பி, லாஸேன் (Lausanne) நகரத்திற்கு வந்து சேர்ந்தார். லாஸேன் நகரில் வேலை யொன்றும் கிடைக்காமையால், முசோலினி உணவிற்கு வெகு கஷ்டப்படவேண்டி வந்ததாம். கடைசியாக முசோலினிக்கு ஓர் கொல்லனிடம் கல் தூக்கும் உத்தியோகம் கிடைத்தது. பீய்ட்ரோ நேவ் (Pietro Nave) என்னும் முசோலினியின் யஜமானன் (கொல்லன்) தன்னிடம் வேலை செய்யும் இதர ஆட்களெல்லாம் ஓழிவு நேரத்தைச் சாராயக் கடைகளில் கழிக்க, முசோலினிமட்டும் படிப்பதிலும் எழுதுவதிலும் தன் ஓய்வு காலத்தைக் கழித்துக்கொண்டிருப்பதைக் கண்டு, அவரிடம் மிகவும் அன்பாகவிருந்ததுமன்றி மற்றவர்களைவிட முசோலினிக்குச் சம்பளமும் அதிகமாகவே கொடுத்துவந்தானாம்.

முசோலினி எவ்வளவு காலம் லாஸேன் நகரில் வேலை செய்துகொண்டிருந்தார் என்று திண்ணமாய்க் கூற முடியாவிடினும், வெகு

மேல் நாடுகளில் தங்கள் சுதேசத்துக்குள் எவ்வளவு பிரிவினை இருந்தாலும், தங்கள் விவாதம் வழக்குகளைத் தீர்க்க அந்நியரிடம் ஓடி அவர்கள் அதிகாரிகளின் உதவியைத் தேடாமல், தாங்களே பார்த்துக்கொள்வார்கள்.

காலம்வரையில் இதே வேலையி லிருந்திருப்பதாக மட்டும் தெரிகிறது. மழை காலம் வந்துவிடவும் லாஸேன் நகரில் கட்டிட வேலைகளெல்லாம் நிறுத்தப்பட்டுவிட்டது. ஆகவே முஸோலினிக்கு வேறு வேலைகளொன்று மில்லாததால், கலாசாலை உபந்நியாசங்களுக்குச் சென்றுகொண்டும் இதர நேரங்களில் படித்துக்கொண்டும் முஸோலினி காலங் கழித்து வரலானார். இதற்கு மத்தியில் சில்லறையாகப் பல வேலைகளிலும் முஸோலினி இருந்துவந்ததாகத் தெரிகிறது. ஸ்விட்ஸர்லாந்து தவிர இக் காலத்தில் ஜர்மனி, பிரான்ஸ் முதலிய தேசங்களுக்கும் யாத்திரை செய்திருப்பதாகவும் தெரிகிறது.

முஸோலினியின் ஆசிரியப் பதவி

1905-ம் வருடம் தாய் தந்தையர்களைப் பார்க்க வேண்டுமென்ற ஆசையால் தூண்டப்பட்டு முஸோலினி தனது யாத்திரையை முடித்துக்கொண்டு ஊருக்குத் திரும்பவும் அவ் வருடம் ரோஸா மால்டோனி விண்ணுலகேகினள். தாயை யிழந்த முஸோலினியின் மனத் தடுமாற்றத்திற்கு அமைதியை யளிக்க வந்தவள் போல் டான்னு ராக்கேலி (Donna Rachele) என்பவள் முஸோலினிக்கு மனைவியாக வந்து சேர்ந்தாள். முஸோலினி மிகவும் ஏழ்மைத்தனத்திலேயே இல்லறம் நடத்தி வந்தார். போர்லி (Forli) என்னுமிடத்திலிருந்த ஸோஷியலிஸ்டு ஹவுஸ் ஆப் லேபர் (Socialist House of Labour) ஆபீஸில் முஸோலினி காரியதரிசி வேலை பார்த்து வந்தாரேயாயினும், 125 லையர் சம்பளமே (அதாவது 1 பவுன் 5 ஷில்லிங் வாரச் சம்பளமாகும்) கொடுக்கப்பட்டு வந்தார்.

முஸோலினி லாஸேன் நகரத்தில் கொத்த வேலை செய்துகொண்டிருந்த காலமுதற்கொண்டே கட்டுரைகள் வரைவதில் ஓர் தனிப்பட்ட அவாக்கொண்டிருந்தார். ஆகவே இப்பொழுது ஆசிரியப் பதவியையே ஓர் ஜீவனத் தொழிலாகவும் கொண்டு அதே துறையில் தீவிரமாக உழைக்க வாரம்பித்தார். 1910-ம் வருடம் போர்லி (Forli) நகரில் "லா லோட்டா டி கிளாஸி" (La Lotta de Classe) என்ற பெயருடன் கூடிய ஓர் சிறு வாரப் பதிப்பை யாரம்பித்து வகுப்புச் சண்டைகளைக் கிளப்பிவிடுவதையே தனது நோக்கமாகவும் கொண்டு நடத்திவரலானார். காரியதரிசி வேலையையும், வாரப் பத்திரிகையின் பத்திராசிரியர் தொழிலையும் பார்த்துக்கொண்டே அவை

ஒருவன் மற்றவர்களைப் போல் அறிவில் பண்படாதவனும், அற்ப சாமர்த்தியமுள்ளவனும், சிறிது பணமுள்ளவனும் ஆயிருப்பினும், அவன் நடத்தை மட்டும் உயர்ந்திருக்குமானால், தொழிற்சாலையோ, கணக்குச் சாலையோ வர்த்தகசாலையோ, மந்திராலோசனை சபையோ எவ்விடத்திலாயினும் தலைவனாய்ச் செல்வதற்கு அதிகமாகும்.

களுடன் சற்று வீணை வாசிக்கவும் அப்பியாசம் செய்யத் தலைப்பட்டார். அவருக்கு வீணை கற்றுக் கொடுத்து வந்த மாண்டானல்லி (Montanelli) என்பவர் முதலில் முஸோலினிக்கு வயதாகிவிட்டபடியால், இனிமேல் வீணைகானம் கற்றுக்கொடுப்பது அரிதென்று எண்ணினாரேயாயினும், அவரே பிரமிக்கும்படி முஸோலினி வெகு விரைவில் வீணைகானத்தில் நல்ல தேர்ச்சி பெற்றாராம். நடுவில் சில வாரங்கள் முஸோலினி வீணை கற்றுக்கொள்ள வாராமலிருக்கவும் ஏன் வரவில்லையென மாண்டானல்லி வினவியதற்கு "விசேஷமொன்றுமில்லை! ஏதோ ஓர் கட்டுரைக்காக அரசாங்கத்தார் என்னைச் சிறையிலடைத்து வைத்திருந்தனர்" என்று வெகு அலட்சியமாகப் பதிலளித்தாராம். உண்மையில் முஸோலினி சிறைவாசத்தைச் சிறிதும் வெறுத்தவரல்லர். சிறையிலிருக்கும் பொழுதே அவரது மூளை அதிக தீவிரமாக வேலை செய்யும்.

1910-ம் வருடம் ட்ரெண்ட் (Trent) நகரத்திலிருந்த ஸோஷியலிஸ்டு சங்கத்திற்குக் காரியதரிசியாக விருக்கும்படி அழைக்கப்படவே போர்லி நகரத்தையும் வீணை உபாத்தியாயரையும் முஸோலினி விட்டுவிட்டுச் செல்ல வேண்டிய அவசியமேற்பட்டது. அதே வருடம் பிரபல இதாலிய சிரேஷ்டரான ஸிஸாரி பாடிஸ்டி (Cesare Battiste) என்பவரால் நடத்தப்பட்டு வந்த இல் பாபோலோ (Il Popolo) என்னும் பத்திரிகைக்குத் துணை யாசிரியர் பதவியையும் பெற்றார். இது மிகவும் அபாயகரமான உத்தியோகமென்பதை முஸோலினி நன்கறிந்தவரேயாயினும் அதற்காகச் சிறிதும் கவலைப்படவில்லை. ஏனெனில் ட்ரெண்ட் என்னும் நகரம் அப்பொழுது ஆஸ்திரியாவிற்குச் சொந்தமாக விருந்தது. மேலும் அங்கு இராணுவப் படைகள் எப்பொழுதும் காவலிருந்ததுமன்றி இதாலி தேசத்தினர்கள் எவர் அங்கு வந்தபோதிலும் ஆஸ்திரியப் போலீஸ்களால் மோருகல் வைக்கப்பட்டு வந்தனர். ஆனால் ட்ரெண்ட் நகரம் உண்மையில் இதாலிக்கே சொந்தமாக விருந்திருக்க வேண்டும். இதை முஸோலினி பகிரங்கமாகத் தனது பத்திரிகையின் வாயிலாகக் கூறிக் கிளர்ச்சி செய்யத் தலைப்படவும் உடனே கைது செய்து சில காலம் சிறையிலடைக்கப்பட்டுப் பின்னர் ஆஸ்திரியா எல்லையை விட்டு முஸோலினி வெளியேற்றப்பட்டார்.

அதன் பின் இதாலி தேசம் பிரபல ஸோஷியலிஸ்டுப் பத்திரிகையான ல' அவந்தி (L' Avanti) என்னும் தினசரிக்கு முதலில் துணை ஆசிரியராகச் சேர்ந்து சிறிது காலத்தில் ஆசிரியராகவுமானார். இப் பத்திரிகை பல முறை அரசாங்கத்தாரால் பறிமுதல் செய்யப்பட்டும்

ஒரு காரியமுண்டானால், அதற்குக் காரணமுண்டென்பது எப்படி நிச்சயமோ, அப்படியே அவரவருடைய நடத்தையும அதற்கேற்ற பயனை விளைவிக்குமென்பது நிச்சயம்.

தடை செய்யப்பட்டும் வந்தபோதிலும், முசோலினியின் வீரம் நிறைந்த கட்டுரைகளினால் அப் பத்திரிகையின் செலவு 30,000 பிரதிகளினின்று 100,000 பிரதிகள் வரையில் உயர்ந்தது. 1914-ம் வருடம் ஆகஸ்டு மாதம் இரண்டாம் தேதி ஜர்மனியும் ஆஸ்திரியாவும் சண்டை துவக்கவே இதாலி தேசத்தில் கலவரமிருந்து இதாலியர்கள் தாங்களும் மகா யுத்தத்தில் கலந்துகொள்வதா அல்லது கலக்காமலிருந்து விடுவதா என்ற விஷயமாக மூன்று கக்ஷிகளாகப் பிரிந்தனர். ஸோஷியலிஸ்டுகள் சண்டையிற் கலந்துகொள்வது தவறெனக் கருதிப் பிரசாரங்கள் செய்யத் தொடங்கவும், இதாலி அவசியம் மகா யுத்தத்திற் பங்கெடுத்துக்கொள்ள வேண்டுமென்று அபிப்பிராயம் கொண்ட முசோலினி ஸோஷியலிஸ்டுப் பத்திரிகையான ல்’ அவந்தியின் ஆசிரிய பதவியை ராஜீநாமா செய்ய வேண்டிய அவசிய மேற்பட்டது. ஆனால் முசோலினி வாளாவிராமல் இல் பாபுலோ டி இதாலியா (Il Populo d’ Italia) என்னும் ஓர் பத்திரிகையையாரம்பித்து அரசாங்கத்தையும் அரசாங்கத்திற்கு அஸ்திவாரமாகவிருந்து வந்த போல்ஷிவிஸ்டு, ஸோஷியலிஸ்டு இவர்களையும் பலமாகக் கண்டனம் செய்து பொது மக்களின் மனதில் இவர்களின் மீது வெகு விரைவில் அருவருப்பைக் கிளப்பிவிட்டார். ஒவ்வோர் நாளும் மகாயுத்தத்தின் நடவடிக்கைகளையும் அதில் இதாலி கலந்துகொள்ள வேண்டியதின் அவசியத்தையும் குறிப்பிட்டுப் பல கட்டுரைகள் அவர் பேனாவின் மூலம் வெளியாயின. ஜனங்களும் அனேகமாய் முசோலினியைப் போன்றே அபிப்பிராயப்படலாயினர். 1915-ம் வருடம் மார்ச்சுமீ முசோலினி செய்த பிரசங்கங்களிலொன்றில் “இத்தாலிய அரசாங்கம் சண்டையில் கலந்துகொள்ள வேண்டிய அவசியத்தை இன்னும் உணராவிடில் அதை நன்குணர்ந்த பொது ஜனங்கள் அரசாங்கத்தைத் தலைகீழாகக் கவிழ்த்து விடுவார்கள்” என்று பகிரங்கமாகக் கூறினார். கடைசியாக முசோலினி தனது பிரசாரத்தில் வெற்றி பெறாமலிருக்கவில்லை. ஒவ்வோர் நகரங்களிலும் ஜனங்கள் யுத்த வெறிகொண்டு ஆரவாரம் செய்யத் தலைப்படவும் இதாலி தேச மன்னனான விக்டர் இம்மானுவல் III ஜியோலிட்டி (Giollitti) மந்திரி சபையைக் கலைத்து சலாண்ட்ரா (Salandra) என்பவரைக் கொண்டு புதிய மந்திரி சபையைக் கூட்டி ஆஸ்திரியாவின் மீது யுத்தத்தை யாரம்பித்தார்.

மகாயுத்தத்தில் முசோலினி

இதாலி மகாயுத்தத்தில் பிரவேசித்தது 1915-ம் வருடம் மேமீ 24உ யாகும். இதாலி தேசத்தின் வலதுபுறம், இடதுபுறம், கிழ

ஒரு தேசத்தின் பலம், தொழில், முயற்சி, நாகரீகம் ஆகிய இவை அனைத்திற்கும் ஆதாரம் அங்கங்குள்ள மனிதர்களுடைய நடத்தையே.

இதாலியின் எல்லைப்புறம், மேல்புறம் முதலிய விடங்களிலெல்லாம் ஆஸ்திரிய தேசப் படைகள் ஆரவாரம் செய்துகொண்டு தயாராகவிருக்கின்றன. மேலும் ஆஸ்திரியாவிற்குச் சொந்தமான ட்ரென்ட் என்னுமிடத்தில் எப்பொழுதும் ஆஸ்திரியப் படைகள் யுத்தத்திற்குத் தயாராகவிருக்கின்றன. இதற்கிடையில் இதாலி தேசம் சண்டையிட்டு வெற்றி பெறுவது கனவிலும் கருதக்கூடியதல்ல வென்பதை முசோலினியைப் பின்பற்றி யுத்தத்தைத் தொடங்கும்படி அரசாங்கத்தைத் தூண்டியவர்கள் நன்கறிவார்கள். ஆயினும் தைரியத்தைமட்டிலும் சற்றும் இழக்காது ஒவ்வொரு இதாலிய வீரனும் சண்டையிட்டு வெற்றி பெறவோ அல்லது போர்க்களத்தில் உயிரை விடவோ தயாராக முன்வந்தான். சண்டையில் இதாலி தேசத்தின் விஸ்தீரணம் மேற்கிலும் கிழக்கிலும் அதிகரித்தது. சண்டையில் தேசத்திற்கு உழைத்ததுமன்றி முசோலினி காயத்துடன் ஆயுதங்களை யெடுக்கச் சக்தியற்றிருக்கையில், பேனாவைக்கொண்டு தனது பத்திரிகையின் மூலம் ஜனங்களின் ஆர்வத்தை யதிகரித்துத் தொண்டு புரியலானார். யுத்தத்தில் காட்டிய ஊக்கத்தையும், தைரியத்தையும் மெச்சி முசோலினிக்குக் கார்ப்போரல் பதவியும் அளிக்கப்பட்டது.

இதாலியப் படை ஐஸன்ஸோ (Isonzo) ஆற்றைக் கடந்து, ஆஸ்திரியா தேசப் படைகளில் பிரதான ஸ்தானமான கொரிஸியா (Gorizia) என்னுமிடத்தைக் கைப்பற்ற முயன்றது. ஏனெனில் ஆஸ்திரியா தேசம் இந்த நகரத்தை யிழந்துவிட்டால், அதன் பாதி பலமே போய்விட்டதுபோலாகும் என்பதை இதாலியப் படை நன்குணர்ந்ததே காரணமாகும். இந்த ஆற்றுக்கு இரண்டு பாலங்கள் (ஒன்று வண்டிகளுக்கும் மற்றொன்று இருப்புப் பாதைகளுக்குமாகும்) இருந்தன. இதாலியர்களுக்குப் பயந்து, இவ்விரு பாலங்களையும் ஆஸ்திரியர்கள் உடைத்துவிட்டதுமன்றி ஆற்றின் கரையிலும் ஆஸ்திரியப் படை இதாலியர்களைத் தாக்கத் தயாராகவிருந்தது. இந்த நிலைமையில் ஐஸன்ஸோ ஆற்றைக் கடந்து கொரிஸா நகரைக் கைப்பற்றுவதோ அல்லது ட்ரிஸ்டி (Trieste) நகரத்தின்மீது படையெடுப்பதோ இதாலியர்களுக்கு அரிதாகவே யிருந்தது. ஆயினும் இதாலியர்கள் சண்டை செய்து ஆஸ்திரியர்களை ஆற்றின் கரையினின்று விரட்டியடித்துவிட்டுக் கடக்காவிடினும் தந்திரத்தால் அவர்களை விரட்டிவிட்டு அக்கரையை யடைந்தனர். அதாவது ஆற்றின் இக்கரையில் சில தாழ்ந்த குன்றுகளிருந்தன. இதாலியர்கள் அங்கு செயற்கைப் பாலமொன்றைக் கட்டி மறைத்து வைத்துவிட்டு மலைகளினுச்சியில் பல காந்த விளக்குகளையும் பதிப்பித்திருந்தனர்.

நீ பிறரை வசப்படுத்திக்கொள்ள விரும்பினால், முதலில் உன் மனத்தை நீ வசப்படுத்திக்கொள்ள வேண்டும்.

ஓர்நாளிரவு இதாலியப் படை திடீரென மலையுச்சியிலுள்ள காந்த
விளக்குகளை யெல்லாம் திடீரென எரியவிடவும் ஆற்றின் அக்கரையி
லிருந்த ஆஸ்திரியப் படைகளின் கண்கள் கூசிச் சண்டையிட முடியா
வண்ணம் ஓட்டமெடுத்தனர். அடுத்த நிமிடம் ஆற்றில் செயற்கைப்
பாலம் போடப்பட்டுப் பொழுது விடிவதற்குள் இதாலியப் படைகள்
எல்லாம் பியேவ் ஸோ ஆற்றைக் கடந்தது. கொரிஸியா நகரமும் கைப்
பற்றப்பட்டது. இதில் முசோலினி செய்த தொண்டு மிகவும் போற்
றற்குரியது.

முசோலினியின் தயாள குணத்தையும் அன்பையும்பற்றி முன்
னமே குறிப்பிட்டிருக்கிறோமாயினும் மகா யுத்தத்தில் நிகழ்ந்த சில
அபூர்வ சம்பவங்களைப்பற்றிக் கூறவேண்டுவது அவசியமாகும். பகல்
முழுதும சண்டையிட்டுவிட்டு முசோலினியும் அவருடைய சகாக்க
ளும் இளைப்பாறிக்கொண் டிருக்கையில், மரணாவஸ்தையிலோர் சிப்
பாய் அலறுவதைச் செவியுற்று, முசோலினி தான் போர்த்தியிருந்த
சால்வையை யெடுத்து அவனுக்குப் போர்த்திவிட்டுத் தான் குளிரில்
சரீரத்தைத் திறந்துகொண் டிருந்தாராம். அவஸ்தையி லிருப்பவன்
தாகத்திற்கு ஜலம் வேண்டுமெனக் கேட்கவும் ஜலம் கொண்டுவர
நடுநிசி நேரத்தில் வெளியே செல்வது அபாயமென்பதை உணர்திருந்
தும் தன் உயிரைச் சிறிதும் சட்டை செய்யாது முசோலினி ஜலம்
கொண்டுவந்து கொடுத்ததாகக் கூறப்படுகிறது.

மகா யுத்தத்தில் முசோலினி பல முறைகள் இறந்து இறந்து
பிழைத்தாரென்றே கூறவேண்டும். ஒரு சமயம் முசோலினி நின்று
கொண்டிருந்த விடத்திற்குப் பத்தடி தூரத்தில் ஆஸ்திரியப் படை
களின் பாம் (வெடிகுண்டு) ஒன்று வந்து வீழ்ந்து வெடிக்க, அதில்
பலர் காயமடைந்தனர். அப்பொழுது முசோலினி காற்றின் வேகத்
தால் பல கஜ தூரம் வரையில் கொண்டுபோய்த் தள்ளப்பட்டாராம்.
1917-ம் வருடம் பிப்ரவரி மாதம் 22உ ஓர் பெரிய ஆபத்து முசோ
லினிக்கு நேர்ந்தது. முசோலினியும் அவருடைய சகாக்களும் பீரங்
கியைக் கெட்டித்துக்கொண் டிருக்கையிலேயே அது வெடித்துவிடப்
பலர் மாண்டனர். முசோலினியின் உடலில் பல இரும்புக் கம்பிகள்
பாய்ந்துவிட்டன. உடல் முழுதும் உதிரம் வடிய முசோலினி ஆஸ்
பத்திரிக்கு இட்டுச் செல்லப்பட்டு ஆப்ரேஷன் செய்யப்பட்டார்.
அப்பொழுதும் மனோ திடத்தையும் தைரியத்தையும் முசோலினி
விட்டவராகக் காணப்படவில்லையாம். ஆஸ்பத்திரியில் சிகிச்சையில்
கிடக்கும் முசோலினியை மன்னர் பிரானும் அடிக்கடி வந்து பார்த்
துக்கொண்டு வந்தாராம்.

சற்குணம் செல்வத்திலும் அதிக செல்வாக்குள்ளது.

ரணம் சிறிது சுகமானதும் முசோலினி மறுபடி தன் பத்திரி
கையைத் தொடர்ந்து நடத்த வாரம்பித்தார். மகா யுத்தம் முடிந்த
பின்பும் முசோலினியின் யுத்தம் மட்டும் முடிந்தபாடாயில்லை. இப்
பொழுது முசோலினி ஜெயிக்கவேண்டியவர்கள் உள்நாட்டிலுள்ள
பகைவர்களையன்றி வெளியிலுள்ள ஆஸ்திரியர்களல்ல. உள்நாட்டுப்
பகைவர்களான போல்ஷிவிஸ்டு, கம்யூனிஸ்டு, ஸோஷியலிஸ்டு, மதஸ்
தர்கள் முதலியவர்களின் அட்டகாசத்தை யடக்கினாலன்றி அரசாங்
கத்தில் அமைதி யிராதென்பதை முசோலினி யறிந்தார். இவர்கள்
இதாலி யுத்தத்திற் பிரவேசிக்கையில் அதைத் தடுப்பதற்கான பிர
சாரங்கள் செய்ததுமன்றி யுத்தத்தி லீடுபட்டிருக்கும் இராணுவப்
படைகளையும், யுத்தத்தினின்று வெற்றியுடன் திரும்பிய வீரர்களையும்
புகழ் மாலை சூட்டி. வரவேற்பதற்குப் பதிலாக ஏளனம் செய்து
நகைத்து வந்தனர். போல்ஷிவிஸத்தை இதாலியில் பரப்புவதற்கென
லெனின் திரண்ட செல்வத்தை யனுப்பி உதவி செய்து, ஆங்காங்கு
பிரசாரங்கள் செய்வதற்கான ஏற்பாடுகளையும் செய்திருந்தார். இப்
பொழுதே இதாலியும் மற்றோர் ருஷியாவாக ஆகிவிடுமோ
வென்ற அச்சம் தோன்றியது. இந்த உள்நாட்டுப் பகைவர்கள்
முசோலினியைச் சார்ந்தவர்களுக்கு இழைத்துவந்த தீங்கும் அவ
மானமும் சொல்லொணாதது. யுத்தத்தில் வெற்றி பெற்று வந்த
வீரர்களை நடு வீதியில் சந்திக்கும் போதெல்லாம் பரிகசித்து வந்தது
மன்றி அவர்களைக் கண்டவிடங்களிலெல்லாம் கூட்டமாகச் சேர்ந்து
கொண்டு கொள்ளை யடிப்பதும், சண்டையி லவர்கள் பெற்ற ரிப்பன்
கள் (War ribbous and bauds) மெடல்கள் முதலியவைகளைப்
பிடுங்கிக்கொள்வதும், அவர்கள் இரயில் வண்டிகளில் ஏறினால் போல்
ஷிவிஸ்டுகளைச் சேர்ந்த இரயில் ஓட்டி வண்டியை யோட்ட மறுப்ப
தும், இதாலி தேசக் கொடிகளைப் பிரதான ஸ்தலங்களிலிருந்தால்
அவைகளை யெடுத்துவிட்டு அவ் விடங்களில் சிவப்புக் கொடிகளைப்
பறக்க விடுவதுமாக அட்டகாசம் செய்துவந்தனர்.

இவைகளைத் தவிர மிலான் (Milan) டூரின் (Turin) முதலான
விடங்களிலிருந்த தொழிற்சாலைகளை யெல்லாம் தங்களுக்குச் சொந்த
மாக்கிக்கொண்டு போல்ஷிவிஸ்டுகள் நிர்வகிக்கத் தலைப்பட்டனர். குடி
யானவர்களை யெல்லாம் தங்கள் தங்கள் எஜமானர்களுடன் புரட்சி
செய்து அவர்களுடைய நிலங்களைப் பறித்துத் தாங்களே சொந்தத்தில்
சாகுபடி செய்து முழுதையு மனுபவிக்கும்படி தூண்டப்பட்டனர்,
முதலாளித்துவத்தைக் கண்டவிடங்களி லெல்லாம் ஏளனம் செய்ய
வாரம்பித்தனர் முனிஸிபாலிடிகள் அவர்களுடைய ஆளுகையின்
கீழிருந்தன இவர்களே புதிய வரியைப் போட்டும், வரிகளை வசூல்

மனிதர்களுக்கு நற்குணமே உயர்ந்த அந்தஸ்து.

செய்துகொண்டும், அப்படி வசூல் செய்த தொகையைத் தங்களிஷ்டம்போல் செலவு செய்துகொண்டும், எல்லா வேலைகளிலும் கூலியை யதிகரித்தும், முதலாளிகளின் இலாபத்தைக் குறைத்தும் எங்கும் ஒரே அமளியைத் தோற்றுவித்தனர். மகா யுத்த சமயத்தில் இருப்புப் பாதைகளில் வேலை செய்ய அதிகமாக அமர்த்தப்பட்ட 20,000 அதிகப்படி வேலையாட்களுக்கு யுத்தத்திற்குப் பின் எவ்வித வேலையும் இருப்புப் பாதைகளி லில்லாதபோதிலும் அவர்களை வேலையினின்று விலக்குவது தவறென்று போல்ஷிவிஸ்டுகள் வாதாடி ஒரு வேலையும் செய்யாது வாளாவிருக்கும் அவர்களுக்குச் சம்பளத்தை மட்டிலும் ஒழுங்காகக் கொடுத்து வரும்படி வற்புறுத்தினர். அரசாங்கத் தொழிற்சாலைகளான புகையிலை, உப்பு முதலிய தொழிற்சாலைகளில் ஒரு வேலையுமின்றிப் பல ஆட்கள் சம்பளம் வாங்கிக்கொண் டிருந்தமையால் ஏராளமான நஷ்டம் வருடா வருடம் ஏற்படத் தலைப்பட்டது. பிரதம மந்திரியாகவிருந்த நிட்டி (Nitti) என்பவரும் இப் பகைவர்களை யாதரித்து வந்ததுமன்றிச் சில ராஜீய வாதிகள் பொதுவுடைமையைச் சிலாகித்தும் கூறத் தலைப்பட்டனர். இதற்கிடையே "போல்ஷிவிஸ்டுகள் "யுத்தம்தான் முடிந்துவிட்டதே! இனி இராணுவத்தைக் கலையுங்கள் யுக்க வீரர்களெல்லாம் கத்தியையும் துப்பாக்கியையும் எறிந்துவிட்டுக் கலப்பையை யெடுத்துக்கொண்டு முன் வரட்டும்!" என்று ஓலமிடத் தலைப்பட்டனர். நூற்றுக்கணக்கான குழந்தைகளுக்கு இதாலியில் இப்பொழுது லெனின் (Lenin) என்று பெயரிடப்பட்டது. இவ் விதமாக இதாலி தேசம் ஒவ்வோர் நிமிடமும் போல்ஷிவிஸ்டுகளினிடம் அகப்பட்டுக்கொண்டு பேராபத்திலிருந்தது. இன்னும் சில காலம் அவர்களுடைய பிரசாரம் வளர விடப்படுமாயின், இதாலி தேசம் விரைவில் பொதுவுடைமைக் கொள்கைகளுடன் கூடிய மற்றோர் ருஷியாவாக ஆகிவிடுமென்பதில் ஐயமில்லை.

முசோலினி இந்த அபாயகரமான நிலைமையை நன்குணர்ந்து, தன்னுடைய முழு சாமர்த்தியத்தையும் வெளிக் காட்டி யவர்களை 'இல் பாபுலோ டி இதாலியா' பத்திரிகையின் மூலம் கண்டனம் செய்து வந்தார். ஓர் நாள் முசோலினி தனது பத்திரிகாலயத்திலமர்ந்து எழுதிக்கொண் டிருக்கையில், வெளிப்புறத்தில் உரத்த சப்தமும் கரகோஷமும் கேட்டுச் சாளர வழியாக என்னவென்று கவனித்தார். "முதலாளித்துவம் ஒழிக! முசோலினியை ஒழியுங்கள்! ருஷியாவிற்கு ஜே! லெனின் பிரபுவிற்கு ஜே!!" என்ற ஆரவாரத்துடன் சிவப்புக் கொடி தாங்கிக்கொண்டு பலர் வருவதைக் கண்டார். அவர்

பாஷாபிமானம் வலுத்துக்கொண்டிருக்கும் இப்பொழுது, இதர பாஷைகளிலிருக்கும் நூற்களை சுதேச பாஷைகளில் மொழிபெயர்த்து வெளியிடுவது அவசியமாகும்.

களைக் கண்டு முசோலினி சற்றும் அஞ்சினாரில்லை. முசோலினியின் நண்பரொருவர் எச்சரிக்கை செய்யவும் "ஹூம்! எனக்குப் பயமென்பதே யில்லை. எவன் இந்தப் படியைத் தாண்டி உள்ளே நுழைகிறானோ அவன் மறுபடி உயிருடன் வெளியேறமாட்டான்!" என்று அழுத்தமாகக் கூறினார்.

பாஸிஸம் Fascism

இதுமுதல் முசோலினிக்குத் தன்னுடன் சில சகாக்களைக் கூட்டிக்கொண்டு வாளை யேந்திப் போர் புரிந்தாலன்றி பத்திரிகையின் மூலமாகப் பகைவர்களை விரட்டுவது துர்லபம் என்பது தோன்றிவிட்டது. மூர்க்கரை மூர்க்கத்தனத்தாலன்றி சாந்தமாக வெல்வது அரிது என்பதை யுணர்ந்து ஓர் பெரிய இராணுவப் படையைத் தயாரிக்க மும்முரமாக வாரம்பித்தார். பண்டைக் காலத்தில் உரோமானிய நீதிபதிகளும், அரசாங்க உத்தியோகஸ்தர்களும் கையில் வழக்கமாக வைத்திருக்கும் பாஸிஸ் (Fasees அதாவது சிறு ஈட்டியைப் போல் நுனியில் கூர்மையான இருப்பு ஆயுதம்) என்னும் ஆயுதத்தை அடையாளமாக முசோலினியின் இராணுவ வீரர்களெல்லாம் தாங்கி வந்ததால் முசோலினியைச் சார்ந்தவர்களுக்கு பாஸிஸ்ட் (Fascist) என்றும், அவர்களுடைய கொள்கைகளுக்கு பாஸிஸியம் (Fascism) என்றும் பெயரிடப்பட்டது. பாஸியா என்னும் லத்தீன் பதத்தினின்று உண்டான பாஸிஸ்மோ என்ற வார்த்தைக்கு ஒன்று சேர்ப்பது என்றோர் அர்த்தம் உண்டு. முசோலினியும் அவருடைய கட்சியினரும் இதாலியினின்று பகைவர்களை விரட்டி இதாலியர்களை ஒன்று சேர்ப்பதையே முக்கிய கருத்தாகவுள்ளவர்களாதலின் அவர்களுடைய கட்சிக்கு பாஸிஸ்மோ அல்லது பாஸிஸியம் என்ற பெயர் முசோலினியால் கொடுக்கப்பட்டது என்றும் கூறுவதுண்டு. மார்ச்சுமீ 23உ (1919-ம் வருடத்தில்) முசோலினி தனது நண்பர்களை யெல்லாம் மிலான் (Milan) என்னுமிடத்தில் கூட்டித் தனது நோக்கத்தை யவர்களுக்கு விரிவாக எடுத்துரைக்கவும் அவரது அபிப்பிராயங்களெல்லாம் கரகோஷத்துடன் ஆமோதிக்கப்பட்டன. பாஸிஸம் காட்டுத் தீயைப் போல் இதாலி தேசத்திலுள்ள ஒவ்வோர் சிறு கிராமத்திலும் வெகு விரைவில் பரவியது. ஒவ்வோர் யுவர்களும் ஸ்திரீகளும் குழந்தைகளும் தங்களை பாஸிஸ்டு என்று சொல்லிக் கொள்வதையே ஓர் பெரும் கௌரவமாகக் கருதினர். புரட்சிக்

மனிதனால் செய்யப்படும் எல்லா வேலைகளும் மனிதரால் எல்லாவிடங்களிலும் செய்யச் சாத்தியமுண்டு.

காரர்கள் எப்படி சிவப்பு உடை யணிந்துகொண்டு காணப்பட்டனரோ அதைப்போல் பாஸிஸ்டுகளும் தங்களுக்குப் பிரத்தியேகமாகக் கருப்புடையைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு சகலரும் கருப்புடை யணிந்தனர். பாஸிஸ்டுகளுக்கும் பகைவர்களுக்கும் சண்டை மும்முரமாகவே தொடங்கியது. ஒவ்வோர் காலையிலும் பத்திரிகைகள் கொலை, கொள்ளை, தீ, வெடிகுண்டு விபத்து முதலிய பயங்கர விஷயங்களைத் தாங்கி வந்தனவாயினும், எங்கும் பாஸிஸ்டுகளே வெற்றி பெற்றனரெனக் காணப்பட்டது. ஸோஷியலிஸ்டு சங்கங்கள், கம்யூனிஸ்டு கட்டிடங்கள் முதலியனவெல்லாம் தரையுடன் தரையாக்கப்பட்டன. போல்ஷிவிஸ்டுகளின் ஆட்சியினடியிலிருந்து வந்த நகர சபைகளெல்லாம் ஒவ்வொன்றாய்க் கைப்பற்றப்பட்டன. இவ்வாறே எட்டு மாத காலங்கள் இதாலி பயங்கரமான உள் நாட்டுச் சண்டைகளில் கொந்தளித்துக் கொண்டிருந்தது.

இப்படி யிருக்க மிலான் நகர அதிகாரிகள் போல்ஷிவிஸ்டுகளாகவே இன்னுமிருந்து வந்ததால் முசோலினியை யோர் புரட்சிக்காரன் என்று குற்றம் சாட்டிக் கைதி செய்ய ஏற்பாடு செய்தனர். முசோலினியைக் கைதி செய்வதற்காக அனுப்பப்பட்ட டி லிடாலா (Di Litala) என்னும் போலீஸ் உத்தியோகஸ்தன் முசோலினியின் நண்பனாக விருந்தது மட்டுமின்றி பாஸிஸ்டு கொள்கைகளை நம்பியவனாதலின் தன் கையால் முசோலினியை அரஸ்ட்டு செய்வதற்கு விரும்பாமல் அவரை யணுகியதும் "நண்பரே! தங்களைக் கமிஷனர் அழைத்து வரும்படி கூறினர்!" என்று வினயமாகக் கூறினன். ஆனால் முசோலினி "அவர் என்னுடன் என்ன பேச வேண்டுமென்று விரும்பியபோதிலும் அவருடன் நான் பேசுவதற்கு விரும்பவில்லை யென்று கூறிவிடு" என்று கூறவும் அதன் பின் டி லிடாலா, தான் அனுப்பப்பட்டதின் காரணத்தை வருத்தத்துடன் தெரிவித்தார். "என்னைக் கைதி செய்து கொண்டுவரும்படி நீங்கள் அனுப்பப்பட்டீர்களென்றால் நான் அப்பொழுதே பதில் பேசாமல் உங்களுடன் கூட வந்திருப்பேனே!" என்று சாந்தமாகப் பதிலளித்த வண்ணம் டி லிடாலாவைத் தொடர்ந்து சென்றாராம். ஆனால் முசோலினி உடனே விடுவிக்கப்பட்டுவிட்டார். ஏன் உடனே விடுவிக்கப்பட வேண்டுமென்ற காரணம் மட்டிலும் ஒருவருக்கும் தெரியாது.

ஒவ்வோர் நாளும் பாஸிஸ்டுகளின் தொகை வளர்ந்து கொண்டே வந்தது. 1922-ம் வருடம் அக்டோபர் மாதம் 22உ முசோலினி தனது படைகளுடன் உரோமாபுரியின் மீது படை

ஒரு தேசம் புத்துயிருடன் எழுந்திருப்பதற்குக் காவியங்களும், வாலிப இயக்கமும், அபாரத் தொண்டும், தியாகமும் முக்கியமான சாதனங்களாம்.

யெடுத்தார். சுமார் மூன்று லக்ஷம் பாஸிஸ்டுகள் மூன்று பிரிவுகளாகப் பிரிந்து யுத்தத்திற்குப் புறப்பட்டனர். அப்பொழுது பிரதம மந்திரியாகவிருந்த பாக்டா (Facta) என்பவருக்கு "நாற்பத்தெட்டு மணி நேரத்திற்குள் நீங்கள் உரோமாபுரியை விட்டு வெளியே செல்லாவிடில் எனது சகாக்கள் உங்களை பலாத்காரமாக வெளியேற்றி விடுவார்கள்" என்றோர் கட்டளையை முசோலினி அனுப்பி வைத்தார். பாக்டா உரோமாபுரியைச் சுற்றியுள்ள கோட்டைக் கதவுகளை யெல்லாம் தாளிட்டுவிட்டு பாஸிஸ்டுகள் உள்ளே நுழையாவண்ணம் பந்தோபஸ்துகள் செய்தபின் இதாலியில் இராணுவச் சட்டம் (Marshall Law) போட மன்னர் பிரானின் உத்திரவிற்காக அரண்மனைக்குச் சென்றார். மன்னர்பிரான் பாக்டாவின் ஆர்டரில் கையொப்பமிடுவதற்குப் பதிலாக அவரைப் பிரதம மந்திரி பதவியினின்று விலக்கியதுமன்றி முசோலினியை யழைத்துப் பிரதம மந்திரிப் பதவியைப் பெற்று மந்திரி சபையைக் கூட்டும்படி கட்டளை யிட்டார். அக்டோபர் மாதம் 29உ மிலான் நகரத்திலிருந்த முசோலினிக்கு அரசரின் அழைப்பு வந்து சேரவும் மறு நிமிடம் பூர்ண வெற்றியுடன் பலரின் கரகோஷங்களுக்கிடையே முசோலினி மன்னரைச் சந்தித்துப் பிரதம மந்திரிப் பதவிக்குரிய சின்னங்களைப் பெற்று தனது மந்திரி சபையையும் கூட்டினார்.

இதாலியை ஒன்று சேர்த்து அமைதியை யுண்டாக்குவதற்கு இரகசியச் சங்கங்களும், கக்ஷிச் சண்டைகளும் துரோகிகள் என்பதை நன்குணர்ந்த முசோலினி இரகசியச் சங்கங்களை யெல்லாம் சட்ட விரோதமான கூட்டங்களாக்கியதுமன்றி அதைச் சேர்ந்தவைகளையும் தண்டனைக்குட்படுத்தினார். கக்ஷிச் சண்டைகளை ஆதரித்து வந்த பத்திரிகைகளுக்கெல்லாம் தடையுத்திரவு போடப்பட்டது. வியாபாரச் சங்கங்கள் கக்ஷிச் சண்டைகளை வளர்ப்பதற்குக் காரணமாக விருந்தமையால் அவைகளை யெல்லாம் வேருடன் பிடுங்குவதற்கான முயற்சிகளெடுத்துக் கொள்ளப்பட்டன. இவ்வாறு இதாலியின் முன்னேற்றத்திற்குக் குறுக்கிட்டு நின்ற இடையூறுகளை யெல்லாம் ஒவ்வொன்றாய் விலக்கியதும் இதாலியர்கள் யாவரையும் ஒரே குடும்ப சகோதரர்களைப் போல் ஆக்குவதற்குச் சட்டங்களின் மூலம் முசோலினி முயற்சி செய்யலானார். ஒவ்வொருவனும் தனக்காகவும், தனது சகோதரர்களுக்காகவும் சேர்ந்தே உழைக்க வேண்டுமே யன்றி சுயநலம் கருதி யுழைப்பது தேச முன்னேற்றத்திற்கு இடையூறானது என்பதை இதாலிய தேச மக்கள் யாவரும் நன்குணரும் வண்ணம் முசோலினி பிரசங்கங்கள்

கல்வி மனத்தைப் பண்படுத்துவது போன்று, உழைப்பு தேகத்தைப் பண்படுத்தும்.

மூலமாகவும், பத்திரிகைகளின் மூலமாகவும் சட்டங்களின் மூலமாகவும் செய்யத் தலைப்பட்டார்.

இப்படி ஏற்படுத்தப்பட்ட சட்டங்களி லொன்றே 1926-ம் வருடம் மார்ச்சு 11உ நிறைவேற்றப்பட்ட ஸிண்டிகள் லா (Syndical Law) என்பதாகும். ஒரு குடும்பத்திலுள்ளவர்கள் எல்லோரும் ஒரே விதமான சக்தியையும் திறமையையுமுடையவர்களாகவில்லை. அதைப் போன்ற பெரியதோர் குடும்பமே அரசாங்கமாகும். பேதப்பட்ட திறமைகளுடையவர்களாக விருப்பினும் எப்படி குடும்பத்தைப் பற்றிய மட்டும் யாவரும் ஒத்துழைக்கின்றனரோ அதைப் போன்றே வேலையாள், யஜமானன், முதலாளி தொழிலாளி முதலியோர்களும் பகையின்றி வாழவேண்டும். ஒருவருடைய உதவியின்றேல் மற்றவர் அமைதியுடனும் சுகத்துடனும் வாழ்தலரிதாதலின் மானிட சமூக முன்னேற்றத்திற்கு ஒற்றுமையும் ஒத்துழைப்புமே அவசியமானது. ஆகவே இந்த ஸிண்டிகல் சட்டம் இவ்வித ஒத்துழைப்பை இத்தாலி தேசத்திலுண்டாக்கவே நிறைவேற்றப்பட்டது. இதுவரையில் முதலாளிகளும் தொழிலாளிகளும் தனித் தனியே சங்கங்களேற்படுத்திக் கொண்டிருந்த வழக்கம் மறைந்து இரு வகுப்பினரும் ஒன்றுகூடி ஒரே சங்கத்தின் அங்கத்தினர்களாயினர். இவர்களுள் உண்டாகும் சச்சரவுகளைத் தீர்ப்பதற்கும் ஓர் நியாய சபை பிரத்தியேகமாக ஸ்தாபிக்கப்பட்டது. இவ்வித சட்டங்கள், இதாலிய மக்கள் யாவரும் ஓரே குடும்பத்தைச் சார்ந்தவர்கள் என்ற பொது உணர்ச்சியை யுண்டாக்கியது. கைத்தொழில், விவசாயம், கல்வி முதலியவைக ளெல்லாம் வெகு விரைவில் முன்னேற்றமடைந்தன.

சீர்திருத்தங்கள்

கலாசாலை மாணவர்களே பிற்கால இதாலிய தேசத்திற்குத் தூண் போன்றவர்களாதலின் அவர்களைப் பற்றி அதிக கவனமெடுத்துக்கொள்ள வேண்டுவதை முசோலினி அதிக ஊக்கத்துடன் கவனிக்கலானார். சுகாதாரம் ஒவ்வோர் கலாசாலைகளிலும் வற்புறுத்தப்பட்டது. சரீர சௌக்கியத்தின் பொருட்டு மாணவர்கள் ஒவ்வோர் வருடமும் ஒரு மாத காலம் கிராமப் புறங்களிற் சென்று வசிக்க வேண்டிய அவசியத்தைச் சட்டங்கள் கட்டாயப்படுத்தின.

குடி வழக்கத்தை நிறுத்துவதற்கு முசோலினி தன்னாலியன்ற வரையில் பிரசாரங்களின் மூலம் முயன்று வந்தார். அவர் அதிகாரத்

வருந்தி உழைத்து வசப்படுத்தும் அறிவு நமது உடைமையாகும்.

திற்கு வந்தபோதிருந்த சுமார் 187,000 சாராயக் கடைகளுள் 25,000 கடைகள் வரையில் எடுக்கப்பட்டன. புதிதாக வைக்கப்படும் சாராயக் கடைகளுக்கு அனுமதியளிக்க மறுக்கப்பட்டதுமன்றி பதினாறு வயதிற்குட்பட்ட வாலிபர்களுக்கோ பெண்களுக்கோ சாராயம் விற்பது சட்ட விரோதமெனக் கருதப்பட்டது. குடி மட்டுமின்றிப் பதினாறு வயதிற்குக் கீழ்ப்பட்டவர்கள் சுருட்டுக் குடிப்பதினின்றும் சட்ட மூலமாகத் தடுக்கப்பட்டனர். பொது ஸ்தலங்களில் சத்தியம் செய்வது தடுக்கப்பட்டது. இரயில், டிராம் முதலிய வண்டிகளில் "சத்தியம் செய்யாதே!" என்ற விளம்பரங்களும் காணப்பட்டன.

ஆடையில்லாமல் ஆபாசமாக எடுக்கப்படும் புகைப் படங்கள் கடை வீதிகளில் விற்கப்படுவதோ அல்லது பொதுவிடங்களில் வைத்துக்கொண்டிருப்பதோ பொதுமக்களின் நல்லொழுக்கத்தைக் கெடுத்துவிடுமெனக் கருதிய முசோலினி இவ்விதப் படங்களைப் பறிமுதல் செய்ய உத்திரவிட்டார். இவ்விதமாக ஒவ்வொரு சிறு விஷயங்களிலும் மாணவர்கள் நல்லொழுக்கத்திலும், சுகாதார வழக்கங்களிலும், சரீரப் பயிற்சியிலும், கல்வியிலும் முன்னேற்றமடைவதற்கான வழிகளை முசோலினி எடுத்துக்கொண்டார். முசோலினியின் மீது பலர் பலவிதக் குறைகளை யெடுத்துக் காட்டக்கூடும். அவரது சர்வாதிகார ஆட்சி சிலருக்கு வெறுப்பையே அளிக்கலாம். ஆயினும் இதாலிய தேசத்தைச் சீர்படுத்தி, அதை இதர ஐரோப்பிய தேசங்களுக்குச் சமமான நிலையில் கொண்டுவந்து வைத்தவர் சிஞ்ஞோர் முசோலினியே யென்பதை எவரும் மறக்க முடியாது. முசோலினி தனது உயிரையும் மதியாது வீராவேசத்துடன் பத்திரிகை வாயிலாகவும், வாளின் உதவியாலும் போர் முனையிலும் அஞ்சா நெஞ்சுடன் அமர்புரிந்திராவிடில், இவ்வளவு நாட்களுக்குள் இதாலி தேசமும் மற்றோர் போல்ஷிவிக் ருஷியாவாக மாறியிருக்குமென்பதற்குச் சந்தேகமேயில்லை.

ஒவ்வொருவனுக்கும் இருவிதக் கல்விப் பயிற்சி உண்டு. ஒன்று பிறர் கற்பிக்கத் தான் கற்றுக்கொள்வது; அதனிலும் முக்கியமான மற்றொன்று தனக்குத் தானே கற்பிப்பது.

ஆராய்ச்சி மேடை.

திருவிதாங்கூர் அரசர் ஸ்ரீ சித்திரைத் திருநாள்.

நூலாசிரியர்:—T. இராமலிங்கம் பிள்ளை, M.A.

வெளியிட்டவர்:—R. S. பிள்ளை, காந்தாரி அம்மன் வீதி,
திருவனந்தபுரம்.

தென்னிந்தியாவில் மிகப் பிரசித்தி வாய்ந்த சுதேச சமஸ்தானங்களுள் ஒன்றாகிய திருவிதாங்கூரைத் தற்போது ஆண்டு வரும் ஸ்ரீ சித்திரைத் திருநாள் அரசரின் ஜீவிய சரித்திரம் தமிழில் விரிவாக இந் நூலில் எழுதப்பட் டிருக்கிறது. அரசரின் சரித்திர வரலாற்றுடன் திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் இயல்பும், சிறப்பும், வரலாறும், அந் நாட்டு அரச குலத்தின் தொன்மையும் இதில் அழகாக வர்ணித்திருப்பது வாசகர்களின் மனத்தைக் களிக்கச் செய்வதாகும். தமிழ் நாட்டு மூவேந்தர்களில் முதல்வராகிய சேர அரசரின் வழித் தோன்றிய பழம்பெருமை வாய்ந்த மன்னர் குலத்தின் மாபெரும் வரலாறுகள் தமிழ் மக்களின் உள்ளத்தைக் கொள்ளை கொள்வனவாம். 7625 சதுர மைல் பரப்பும், 50 லட்சத்திற்கு மேற்பட்ட ஜனத் தொகையுங் கொண்ட இச் சுதேச சமஸ்தானத்தை, இளவரசராம் ஸ்ரீ சித்திரைத் திருநாள் தக்க வயதடையும் வரையில், வெகு திறமையுடன் ஆட்சிபுரிந்து வந்து, 1931-ம் ஆண்டு நவம்பர் மாதம் 6-ம் தேதியில் பருவமும், பண்பும் வாய்ந்த தம் புதல்வருக்கு மகுடாபிஷேகம் புனைவித்த மகாராணி ரீஜெண்ட் அம்மையாரின் பெருமையும், ஸ்ரீ சித்திரைத் திருநாள் அரசர் அரியணை யேறிய இரண்டு ஆண்டுகளுக்குள் தன் நாட்டு மக்களுக்கு வழங்கிய அரசியல் உரிமைகளின் பெற்றியும் புகழ்தற்பாலனவாகும். கல்விப் பயிற்சியிலும், பெண்கள் உரிமையிலும் இந்தியாவில் முதன்மையுற்று விளங்குவது இச் சமஸ்தானமே. அரசரின் உருவப் படத்துடன் பொலியும் இந் நூலினை இவ்வளவு சிறப்புடன் தமிழில் இனிமை கலந்த செவ்விய நடையில் எழுதிப் பிழையற அச்சிட்டுத் தமிழகத்திற்கு அளித்துள்ள ஆசிரியர் திரு. T. இராமலிங்கம் பிள்ளை யவர்களின் உழைப்பை யாரே மதிக்

கிராமவாசிகளுக்கு வேண்டிய அவசியமான வைத்திய வசதிகளும் வைத்தியசாலைகளும் வெகு தீவிரமாய் ஏற்படுத்தாவிட்டால், அவர்களுக்கு மிகக் கொடுமை செய்ததாகும்.

காதார்? ஆங்கிலத்திலும், மலையாளத்திலும் புலமை வாய்ந்து, அகில இந்திய ஆங்கில வியாசப் பரிசும், ஹார்வி ஞாபகார்த்தத் தத்துவ வியாசப் பரிசும் பெற்றுள்ள இவ் வாசிரியர் அவ் விரு மொழிகளில் பல நூல்கள் எழுதி வெளியிட் டிருப்[illegible]வும், தென்னாட்டுத் தாய்மொழியாந் தமிழிலும் "அன்னபூர்ணாலயம்" "திருவிதாங்கோட்டு அன்னை மஹாராணியார்" போன்ற சீரிய நூல்கள் சில எழுதி உபகரித்துள்ளமை அவரது தமிழ் மொழிப் பற்றுக்கும், ஆராய்ச்சித் திறனுக்கும் உதாரணமாகும். இந் நூல் தமிழ் நாட்டில் உயர்தரப் பாடசாலைகளில் உபபாடப் புத்தகமாக அமைக்கத் தக்கதென உவப்புடன் குறிப்பிடுகின்றோம். இம் முறைபற்றி மற்றும் பல நூல்களை எழுதித் தமிழ் இலக்கியத்தைச் சிறப்பிக்குமாறு நண்பர் திரு. பிள்ளையவர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றோம். கிரௌன் ⅛ அளவில் நூறு பக்கங்களுக்கு மேற்பட்ட இப் புத்தகத்தின் விலை எட்டணாவேயாகும்.

N. V.

அன்னபூர்ணா தேவியின் கடிதங்கள்.

இப் பெயரிய தெலுங்கு வசன நூலொன்றினை மதிப்புரைக்காக வரப்பெற்றோம். மஹாத்மா காந்தியடிகளாரின் அபிமானப் புத்திரி யெனப் பெயர் பெற்று, ஆந்திர தேசமெங்கும் தேசிய இயக்கத்தைப் பரவச் செய்து, ஒத்துழையா இயக்கத்தில் வீறுகொண்டு, கத்தர் இயக்கத்திற்கு ஆந்திர நாட்டில் அடிகோலி, ஹரிஜன சேவையில் உழைத்து, தெலுங்கு மாகாணத்தில் சுதந்திர தாகத்தைக் கிளப்பிவிட்டு, அத் தேசப் பணியிலேயே தன் உயிரை யர்ப்பணஞ் செய்த வீராங்கனையாம் அன்னபூர்ணா தேவியின் ஜீவிய சரித்திரம் நம் "பாரதி"யின் 2-வது வால்யத்தில் வெளிவந்திருக்கிறது. அவ் வம்மையாரின் உள்ளத்தில் எழுந்த நாட்டுப் பற்றும், சுதந்திர தாகமும், தன்னலத் தியாகமும், வீர உணர்ச்சியும், பொதுஜன சேவையில் ஆர்வமும் இக் கடிதங்களின் மூலமாய் வழிந்து பாய்கின்றன. தேவியார் தம் கணவருக்கு எழுதிய 60 கடிதங்களுடன், தேச ஊழியர் திரு. த. நாராயண ராஜு அவர்களுக்கு எழுதிய இரு கடிதங்களும் இப் புத்தகத்திற் சேர்க்கப்பட்டுள்ளன. தேவியார் தெலுங்கிலும், ஆங்கிலத்திலும், வங்காளியிலும் போதிய அறிவு பெற்றிருந்தார். அவர் எழுதிய தெலுங்கு மொழிக் கடிதங்களுடன், ஆங்கில மொழிக் கடிதங்களும் தெலுங்

கடுந் தரித்திரத்திலிருந்து குடியானவர்கள் கொடுக்கிற வரியைச் சேர்த்து உத்தியோகஸ்தர்களுக்குப் பெரிய சம்பளங்கள் ஏற்படுத்துவது அவர்கள் இரத்தத்தைக் குடிப்பதற்குச் சமானமாகும்.

ில் மொழிபெயர்த்து இந் நூலில் வெளியிடப் பட்டுள்ளன. தெலுங்கு வசன நடை எளிதாகவும், கம்பீரமாகவும், இனிமையாக வும் அமைந்திருக்கிறது. அன்னபூர்ணா தேவியாரின் கணவரும், தெலுங்கு நாட்டு ஹரிஜன சேவா சங்கத்தின் காரியதரிசியும், காங்கிரஸ் ஊழியரும், ஆந்திர நாட்டுத் தலைவரும் ஆகிய திரு. மாகண்டி பாபிநீடு அவர்கள் தமது இரண்டாவது மனைவியாராகிய திருமதி டாக்டர் சகுந்தலா தேவியாரைத் திருமணம் புரிந்தகாலையில், அவ்வம்மையாருக்குத் திருமணப் பரிசிலாக இந் நூலினை நல்ல தாளில் அழகிய முறையில் அச்சிட்டு வழங்கியுள்ளார். இதனில் "என்னை மறப்பினும் நந் நாட்டை மறவாதீர்கள்" என்று பர்த்தாவை வேண்டிக்கொண்ட அன்னபூர்ணாவின் திருவுருவப் படம் (அவரது கணவர், தாய் தந்தையர் முதலியவர்களோடு கூடிய) ஒன்றும் சேர்க்கப் பட்டுள்ளது. இந் நூலினை நமது மதிப்புரைக்காக அனுப்பியதோடன்றி, இதனைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடும் உரிமையையும் நமக்களித்துள்ள நண்பர் திரு. எம். பாபிநீடு அவர்களுக்கு நமது வந்தனங்களைக் கூறுகின்றோம். இத் தெலுங்குப் பிரதி வேண்டுவோர் "திரு. எம். பாபிநீடு அவர்கள், ஏலூர், மேற்கு கோதாவரி ஜில்லா" என்ற விலாசத்திற்கு எழுதிப் பெறலாம். விலை ரூபாய் ஒன்று.

N. V.

வேதசந்திரிகை.

ஆசிரியர்:— எம். ஆர். ஜம்புநாதன்.

104 பக்கங்கள். காகிதமும் அச்சும் சிறந்தவை.

விலை அணா 8.

கிடைக்குமிடம்:—

ஜம்புநாதன் புக் டிபோ,

14. பள்ளியப்பன் தெரு, சென்னை.

நமது தேசத்தில் வழங்கப்பட்டு வருவனவும், ஆனால் சாதாரணமாக அறியப்படாமலிருப்பனவுமாகிய பல வார்த்தைகளில்

நமக்குக் கிடைத்த சக்திகளை நாம் எப்படி உபயோகிக்கிறோமோ, அதற்குத் தக்கபடியே நமக்கு உயர்வுண்டாகும்.

'வேதம்' என்பது ஒன்று. "வேதம் என்றால் என்ன?" என்று போகிற வருகிறவர்களை யெல்லாம் கேட்டு, அவர்கள் சொல்லும் பதிலைச் சேகரம் செய்தால் இதன் உண்மை நன்கு விளங்கும். இப்படிச் சாதாரணமாக வழங்கப்படும் இந்த வார்த்தையால் இந்த விஷயங்கள்தான் அறியப்பட வேண்டும் என்பதை இந்தப் புஸ்தகம் எடுத்துக் கூறுகிறது.

உலகத்திலுள்ள எல்லா அறிஞர்களும் வேதங்களை விரும்பிப் படிக்கிறார்கள். நமது இந்தியாவில் இப்படி அறிஞரால் படிக்கப் படுவதுமட்டுமன்றி, பெரும்பான்மையான பாமர ஜனங்களால் இதற்கு ஒரு குருட்டு மரியாதையும் கொடுக்கப்படுகிறது. தாங்கள் செய்யும் பல தவறான காரியங்களுக்கும் வேதத்தில் ஆதாரம் உண்டு என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருக்கிறது என்பது ஒத்துக்கொள்ள வேண்டிய விஷயமே. இந்த ஒரு காரணத்தைக் கொண்டே, 'வேதம் தொலைந்தால்தான் நாடு முன்னேறும்' என்ற கொள்கையைப் பிரசாரம் செய்வோரும் நம் நாட்டில் இருக்கின்றனர்.

ஆனால் தொன்றுதொட்டு வேதத்தின் கொள்கைகள் பல பெரியார்களை யுண்டாக்கி அவர்களால் பல பெரிய காரியங்களைச் சாதித்திருக்கின்றன. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரும் சுவாமி தயானந்தரும் இதற்குச் சிறந்த உதாரணமாவார்கள். நம் நாட்டின் தீவினைகளுக்கு வேதம் காரணமில்லை என்பதும், வேதத்தினுடைய உண்மையான கொள்கைகளைக் கடைப்பிடித்தால் நாடு முன்னேறுமே யொழியக் கெட்டுப் போகாதென்பதும் அவர்கள் கட்சி. தங்கள் காரியங்களால் இதை ருசுப்படுத்தி யிருப்பதுடன் அக் கொள்கைகளைப் பலரறியுமாறு பிரசாரம் செய்தும் இந்த உண்மையை நிலை நாட்டப் பார்க்கிறார்கள்.

இந்த நோக்கங்களுடன்தான் ஸ்ரீ. ஜம்புநாதன் இப் புத்தகத்தை எழுதியுள்ளார். திருப்பனந்தாள் அடிகள் இதற்குப் பொருளுதவி செய்ததிலிருந்து அவரும் இக் கொள்கைகளை ஒப்புக்கொள்வதாக எண்ணலாம்.

ரா. ஸ்ரீ. ஸ்ரீ.

விவசாயத்திலும் ஐக்கியமும் கூட்டுறவும் இல்லாததினால், நாம் பல விஷயங்களில் நஷ்டமடைகிறோம்.

ஆசிரியக் குறிப்புகள்.

29—9—34-ல் நடைபெற்ற தமிழ் மாகாண மகாநாடு

ஸ்ரீமான் சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாரின் அக்ராசனாதிபத்தியத்தின் கீழ் கோயம்புத்தூரில் சிறப்புடன் தமிழ் மாகாண மகாநாடு நடைபெற்றது. இது 36-வது மகாநாடாகும் என்று சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். இந்த மகாநாட்டின் மூலம் தமிழ் நாட்டில் சற்று அயர்ந்திருந்த தேசீய உணர்ச்சி பொங்கி எழும்ப ஆரம்பித்திருக்கிறது. 1. சட்டசபைப் பிரவேசம், 2. நூல் சந்தா ஆகிய இரண்டு தீர்மானங்கள் இம் மகாநாட்டில் முக்கியமானதாகும். சட்டசபைப் பிரவேசத் தீர்மானத்தை ஏகமனதாய் ஜனங்களும் வரவேற்கிறார்கள். தேக உழைப்பாளிகள் 4 அணா சந்தா செலுத்திக் காங்கிரஸில் அங்கத்தினராகலாமென்றும், மூளை உழைப்பாளிகள் நூல் நூற்று நூலை அனுப்பித்தான் அங்கத்தினராகலாமென்றும், காங்கிரஸ் ஸ்தாபனங்களில் நிர்வாக ஸ்தானம் வகிப்பவர் அவசியம் நூல் சந்தாவே செலுத்த வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. காந்தி அடிகளுக்கும் பம்பாயில் கூடப்போகும் காங்கிரஸுக்கும் இது சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

காங்கிரஸ் அபேக்ஷகரை ஆதரியுங்கள்.

ஏறக்குறைய 50 ஆண்டுகளுக்கு முன் ஸ்தாபிக்கப்பட்ட காங்கிரஸ் சபையானது பெருகி இன்று கடல் போன்ற பெரிய ஸ்தாபனமாகி யிருக்கிறது. இப்பொழுது இஃது இந்தியாவில் இணையற்ற பெரியதோர் அரசியல் சபையாகும் என்பதை எவர் மறுக்க முடியும்? தேச விடுதலை—தேச நன்மை என்பதே காங்கிரஸின் நோக்கம். இந்தியாவிற்கே காங்கிரஸ்தான் பிரதிநிதித்துவ ஸ்தாபனமா யிருக்கிறபடியால், காங்கிரஸை ஆதரிக்க வேண்டியது தேச மக்கள் ஒவ்வொருவரது கடமையாகும். இன்று காங்கிரஸ், இந்திய சட்டசபைப் பிரவேசத்தை ஆதரிப்பதால், வரும் தேர்தலில் இந்திய சட்டசபையில் காங்கிரஸ் காரர்களை வெற்றி பெறச் செய்வது இந்திய மக்களது வேலையாகும்.

நம் தேசத்திலேயே நாம் செய்யக்கூடிய சாதாரணப் பொருள்களெல்லாம் அந்நிய நாட்டிலிருந்து நமது நாட்டுக்கு வந்து ஏராளமாக நமக்கு விற்பனையாகின்றன. இப் பொருள்கள் நம் நாட்டிலேயே செய்யப்பட்டால், எத்தனையோ ஏழை ஜனங்களுக்குப் பிழைப்புண்டாகும்.

மகாத்மா காந்தி அடிகள்

காந்தி என்றால் இந்தியா; இந்தியா என்றால் காந்தி என்று பொருள் கொள்ளலாம். அடிமை இந்தியா, மஹான் காந்தி அவர்களால் புத்துயிர் பெற்றிருக்கிறது. மஹாத்மா பேசுவதென்றால் இந்தியா பேசுவதாகும். பாரதகண்டத்தின் அருந் தவப்பயனாய் அவதரித்த அன்பின் குன்றம்—சாந்தமூர்த்தி—உண்மையின் உருவம்—மகாத்மா காந்தி அடிகள் சில விஷயங்களால் மனம் புண்பட்டுக் காங்கிரஸை விட்டு விலக விரும்புவதாக அறிக்கையின் மூலம் தெரியப்படுத்தி யிருக்கிறார். இதைக் கேட்டு இந்திய மகாஜனங்கள் மிக மிக வருத்தப்படுகிறார்கள். மஹாத்மா காங்கிரஸினிடம் அளவற்ற அன்பு கொண்டவர். அவர் காங்கிரஸை ஒருக்காலும் கைவிடவே மாட்டார். அவருக்கு இந்தியாவின்மீது பிரீதி யில்லையா? அவர் தற்போது விலகுவதா யிருந்தாலும், விரைவில் புது பலத்தோடு காங்கிரஸை நடத்தக் கூடுமென நாம் ஏன் உறுதியாய் நம்பக் கூடாது?

பெரியகுளம் தாலூகாவில் கம்மவார்கள்

மதுரை ஜில்லா, பெரியகுளம் தாலூகாவில் கண்டமநாயக்கனூர் ஜமீன் வட்டகையில் நாகலாபுரம், சீரங்கபுரம், வெங்கிடாசலபுரம், கோவிந்தநகரம், பாலகிருஷ்ணாபுரம், கோனூன்பட்டி, அம்பாசமுத்திரம் முதலிய கிராமங்களிலும், லட்சுமிபுரம், காமராஜபுரம் ஆகிய இடங்களிலும் இவ் வகுப்பினர் மிகுதியாக இருக்கிறார்கள். கண்டமநாயக்கனூர் (வள்ளல்நதி) ஜமீன் பிராந்தியத்திற்கே இவர்கள் முதுகெலும்பு போன்றவர்களாகும். ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களிலிருந்து இவர்கள் இங்கு குடிவந்தவர்கள். விவசாயத்தையே குலத்தொழிலாகக் கொண்டவர்கள். இவர்களில் பலர் பொருளபிவிருத்தியில் மட்டும் கவனம் செலுத்தினார்களே யன்றி, கல்வி அபிவிருத்தியிலும், சமூக சீர்திருத்தங்களிலும் கவலை எடுத்துக் கொள்ளவில்லை.

இயற்கைச் சக்தியால் இவர்களிடையில் இதுபொழுது சுதந்திர ஒளி பிரகாசிக்க ஆரம்பித்திருக்கிறது; சமூக சீர்திருத்த உணர்ச்சி வளரத் தொடங்கி யிருக்கிறது; கல்வி அபிவிருத்தியில் அபார ஆசை உண்டாகி யிருக்கிறது. கோவிந்தநகரத்தில் ஒரு நல்ல பள்ளிக்கூடம் உண்டாகி யிருக்கிறது; சீரங்கபுரத்தில் கருங்கல்லினால் ஒரு கெட்டியான கட்டிடம் பாடசாலைக்காகக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். சமூகச் சங்கங்களும் ஏற்படுத்தி வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்.

கதர் உடுத்துதல் ஒருவன் தன்னை ஏழைகளோடு ஐக்கியப்படுத்திக் கொள்வதற்கு ஓர் சிறந்த அறிகுறி.

பெரியகுளம் தாலூகா, கம்மகுல மகாஜனங்களின் எல்லாவித அபிவிருத்திகளின் பொருட்டு ஏற்ற காரியங்கள் அவசியம் செய்யுமாறு தெக்ஷிண கம்ம குலத் தலைவர்களான ஸ்ரீமான் கி. அழகர்சாமி நாயுடு அவர்கள் (தலைவர், ராஜகோபால் பாங்கு, கோவில்பட்டி), நாராயணவரம் ஸ்ரீமான் சென்னகேசவலு நாயுடு அவர்கள், வக்கீல் ஸ்ரீமான் S. ராமசாமி நாயுடு அவர்கள் முதலிய தலைவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

வெங்கிடாசலபுரம்

கிராம சீர்திருத்த வேலை என்ற முறையில் இப் பாகம் கம்ம மகா ஜனங்களுக்காக நாம் பெரிதும் உழைத்துக்கொண்டு வருகிறோம். வெங்கிடாசலபுரத்தில் ஒரு நல்ல பாடசாலைக் கமிட்டியை ரிஜிஸ்டர் செய்து பாடசாலையை ஸ்தாபித்து, அதை அதி விமரிசையுடன் திறப்பு விழாவை நடத்தியதை இப் பாகத்திய மக்கள் அறிவார்கள். இக் கல்விச்சாலை அதி வேகத்துடன் அபிவிருத்தி அடைந்து கொண்டு வருகிறது. இவ்விதம் இப் பள்ளி முன்னேற்றம் அடைவதற்குக் கிராமத் தலைவர்களும் பொது ஜனங்களும் இதன் மீது காட்டும் அளவற்ற அன்பே காரணமாகும். இப் பள்ளிக்கூடத்திற்கென ரூ. 5,000 செலவு செய்து ஒரு நல்ல அழகான, கம்பீரமான கட்டிடர், இக் கம்ம மகாஜனங்கள் கட்டியிருக்கிறார்கள். இக் கிராமத்தின் ஒற்றுமையை—முன்னேற்றத்தைக் கண்டு அடுத்த கிராமத்தார்கள் அதிசயிக்கிறார்கள். எமது சீர்திருத்தப் பணியை யேற்று, அதனைக் கிரியாம்சையில் கொணரப் பெரிதும் உதவியாகவிருந்ததோடல்லாது, எம்மீது இக் கிராமத்தார்கள் பூண்டிருக்கும் அன்பிற்காக மிக மிக வந்தனங்கள். இக் கிராமத்தில் சில அபிவிருத்தி வேலைகள் மேலும் நடக்கப் போகின்றன. அவைகளுக்கும் முன்மாதிரியே ஒற்றுமையுடனும் உறுதியுடனும் நின்று வெற்றி பெறுவதற்கு அனைவரும் உழைக்க வேண்டுகிறோம்.

கோவிந்தநகரம்

இக் கிராமத்தில் பள்ளிக்கூடத்திற்காக நல்ல கட்டிடம் கட்டி பள்ளிக்கூடத்தை நடத்துகிறார்கள். இக் கம்ம வித்யாலயத்தை ஒரு கமிட்டியின் ஆதரவில் நன்கு நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். இப்பொழுது ரிஜிஸ்ட்டர் செய்வதற்காகக் கமிட்டியின் விதிகளைத் தயார் செய்துகொண்டிருக்கிறோம்.

பெரியகுளம் தாலூகா கம்ம வாலிப மகாநாடு

கம்ம வாலிபர்கள் மிகுந்த உழைப்பாளிகள். தேசியத்திலும் அதிகமாய் ஈடுபட்ட சில வாலிபர்கள் இவர்களில் இருக்கிறார்கள்.

மெய்யான தெய்வ பக்தி, ஜனசமூகப் பிரிவினையை உண்டாக்காது. ஆனால் அது அன்பையும் ஒற்றுமையையும் உண்டுபண்ணும்.

இச் சமூக வாலிபர்கள் ஒன்றுபட்டால் அநேக காரியங்களைச் செய்யக்கூடும். இக் குல வாலிபர்களில் அநேகரை எமக்கு நன்கு தெரியும். புத்துணர்ச்சி வாலிபர்களுக்கு ஏற்பட்டுக்கொண்டு வருகிறது. இந்த இளங் கம்மவார்களுக்குப் புதிய சகாப்தம் தோன்றப்போகிறதென்பதற்கு அநேக அறிகுறிகள் தோன்றிக்கொண் டிருக்கின்றன.

இந்த மகாநாடு கோவிந்தநகரத்தில் நடைபெறுவதற்கு வேண்டியபடி முயன்றுகொண்டிருக்கிறோம். இவ்வூர்ப் பெரியார்கள் இம் மகாநாட்டிற்கு உதவி செய்வதாக வாக்குறுதி கொடுத்திருக்கிறது, போற்றத் தக்கது. இம் மகாநாட்டால் கண்டமநாயக்கனூர் பிராந்தியத்திற்கே அநேகவித முன்னேற்றம் உண்டாகுமென்று நாம் வெகுவாக நம்புகிறோம்

அமெரிக்காவில் பணக்காரர்கள்

செல்வம் ததும்பும் தேசம் அமெரிக்கா. கோடீஸ்வரர்கள் அதிகமாகவுள்ள நாடு அமெரிக்கா. அமெரிக்காவில் 1 இலட்சத்து 80 ஆயிரம் குடும்பங்களுக்கு மாத்திரம் வருடம் 1-க்கு 1000 பொன் வருமானம் வருகின்றது. 20 லட்சம் குடும்பங்களுக்கு 600 பொன் வருட வருமானம். 1 கோடியே 40 இலட்சம் குடும்பங்களுக்கு வருமானம் 400 பொன்னுக்கு மேலில்லை. லண்டனிலும் அமெரிக்காவிலும் பணக்காரர்களைக் கணக்குப் பார்க்கும்பொழுது, இந்தியாவில் ஏழைகளையும் கணக்குப் பார்க்கிறோம். ஒரு வேளை உணவு உட்கொண்டு அடுத்த வேளை உணவிற்குக் கஷ்டப்படும் மக்கள் இந்தியாவில் 10 கோடிக்கு மேலிருக்கிறார்கள். குடியானவர்கள் மட்டும் 1000 கோடி ரூபாய்க்கு அதிகமாகக் கடன்பட்டிருக்கிறார்கள். இந்தியரின் சராசரி நாள் வருமானம் 1 அணா 9 தம்பிடிகளா யிருக்கிறது. இத் தேசத்தின் பெயரால் இதுபோது ஓராயிரத்தி ஐநூறு கோடிரூபாய் கடனிருக்கிறது. அமெரிக்கா சுதந்திர நாடு; இந்தியா அடிமை நாடு. அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் ஏணி வைத்தாலும் எட்டுமா?

ஜப்பானில் ஒரு இந்தியர்

திரு. P. ஹரிஹரன் என்பவர் திருவாங்கூர் வாசி. இவர் சாதாரணக் கல்வி பயின்றவர் தானென்று நமது நண்பர் G. ராமச்சந்திரன் அவர்கள் எம்மிடம் வேலூர் சிறையில் கூறி யிருப்பது எமக்கு ஞாபகமிருக்கிறது. இவர் சித்திரத்தில் மிகவும் ஆர்வம் கொண்டு, கவிச் சக்கிரவர்த்தியாரது சாந்திநிகேதனம் சென்று, சித்திர நிபுணர் நந்தாலால் போஸ் அவர்களிடம் கலாபவனத்தில்

சீன தேசத்தில் உயர்தரக் கல்வி கற்கும் வாலிபர், பிரதிபலனை எதிர்பார்க்காமல் தொழிலாளிகளாகிய சாதாரண ஜனங்களுக்கு உற்சாகமாய்க் கல்வி கற்றுக் கொடுக்கிறார்கள்.

சித்திரக்கலை பயின்றார். இந்தியச் சித்திரக் கலையை ஜப்பானுக்கு எடுத்துச் சொல்லுமாறும் ஜப்பான் கலையைக் கற்று வருமாறும் இவ் வாலிப மலையாளியை பேராசிரியர் ரவீந்திரநாத் தாகூரவர்கள் ஜப்பானுக்கு அனுப்பினார். ஜப்பானில் மகத்தான போர்ஸிலையின் தொழிற்சாலையில் ஆர்ட் (Art) சூப்பிரண்டாக இருக்கிறார். இவருடைய ஆற்றல் அங்கு மிகவும் போற்றப்படுகிறது. பெரும் புகழுடன் தனது தாய் நாட்டுக்கு இவர் இப்பொழுது வருகிறார்.

ஜப்பான் செல்வச் சீமான் ஈற்றோ அவர்களும் அவரது மனைவியாரும் திருவாங்கூருக்கு விஜயம் செய்யப் போகின்றார்கள். இந்த திரு. ஹரிஹரனே இவர்களை அழைத்துக்கொண்டு வருவது இங்கு குறிப்பிடத் தக்கது. மலையாளிகள் உழைப்பாளிகள்—உற்சாகிகள்—கஷ்டங்களைத் தாங்குபவர்கள். இதனாலன்றோ மலையாளிகள் உலகின் பல பாகங்களிலும் காணப்படுகிறார்கள்.

ஆதிமூர்த்தியின் மறைவு

ஸ்ரீமான் ஆதிமூர்த்தி அவர்கள் தமிழ் நாட்டிலிருந்து வட இந்தியாவில் காசியில் வியாபார நிமித்தமாகக் குடியேறினவர். அங்கு 1907-ம் வருஷத்தில் பட்டு பீதாம்பரக் கம்பெனியென்ற பெயருடன் நிலையம் ஒன்றை ஸ்தாபித்து, பட்டு வஸ்திர வர்த்தகம் நடத்திச் செல்வம் சேகரித்தவர். இக் கம்பெனியின் விளம்பரங்கள் பலவற்றைப் பத்திரிகைகளில் பார்த்திருக்கலாம்.

அயல் மொழி பேசுமிடமாகிய காசியிலிருந்தாலும் தமிழ்த் தாயையும் இந்திய அன்னைக்குத் தொண்டு செய்வதையும் அவர் மறந்துவிடவில்லை. தமிழ் நாட்டிலுள்ள பல பண்டிதர்களிடத்திலும் அறிஞர்களிடத்திலும் கடிதப் போக்குவரத்துச் செய்து அவர் நேசமாயிருந்தார். கவிச் சக்கிரவர்த்தி சுப்ரமண்ய பாரதியார், ஆசிரியர் வி.வி.எஸ். அய்யர் போன்ற பெரியார்களிடத்திலும் அவருக்கு நட்பு உண்டென்றால் அவரது பெருமையைப் பற்றிக் கூறவும் வேண்டுமா? இனிய பாக்கள் இயற்றுவதிலும், நல்ல கட்டுரைகள் எழுதுவதிலும் அவருக்கு ஆற்றல் உண்டு என்பதை நாம் நன்கு அறிவோம். தமிழ் நாட்டாரும் அறிவார்கள். ஆராய்ச்சி மிக்கவர். மருந்தில்லா வைத்தியத்திலும், தெய்வ சிகிச்சையிலும் சில அவருக்குப் பயிற்சி உண்டு. இதனைப் பற்றி எமக்கு அவர் அதிகமாக அறிவித்திருந்தார். 'பாரதி'ப் பத்திரிகைக்கு அவர் பல வியாசங்கள் எழுதி யிருந்ததை "பாரதி"யின் வாசகர்கள் வாசித்திருப்பார்கள். அவரது உயரிய பாக்கள் பல முறை "பாரதி"யை அலங்கரித்திருக்கின்றன.

மதத்தின் பெயரைச் சொல்லிக்கொண்டு, தங்கள் தங்கள் சுய நலத்தையும் உயர்ந்த பதவியையும் அடையநாடும் தன்னயக்காரத் தலைவர்களைக் குறித்து எச்சரிக்கையா யிருங்கள்.

அறிஞரும் நண்பருமான திரு. ஆதிமூர்த்தி அவர்கள் பக்ஷவாத நோயுற்று, காசியில் சென்ற ஜூன்மீ 8உ யன்று காலங் கடந்துவிட்டாரென்று இப்பொழுது அறிந்து மிக மிக வருந்துகிறோம். தமிழ்த் தாய் ஒரு உண்மைப் புதல்வனை இழந்து வாடுகிறாள். நாம் ஒரு நண்பரைப் பிரிந்து வருந்துகிறோம். அவரது மனைவியார் ஸ்ரீமதி ஆதிலட்சுமி அம்மாள் அவர்களுக்கும் அவரது அருமைக் குமாரர்களுக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம். அவரது ஆத்மா சாந்தி அடைவதாக.

அவரது பாக்களிற் சில நம் "பாரதி"யில் அண்மையில் வரும்.

தாவரங்களின் காதல் அதிசயம்

செடிகொடிகள், புல் பூண்டு முதலியவைகளுக்கு உயிர் இருப்பது போன்றே, சுகம், துக்கம்போன்ற உணர்ச்சிகளும் உண்டு என்று தனது ஆராய்ச்சியின் மூலம் நிரூபித்துக் காட்டியிருக்கிறார் பேரறிஞர் ஸர் J. C. போஸ். இவர் செடிகளுக்கு மயக்க மருந்தை ஊட்டி, அச் செடிகளின் மயக்கத்தைக் கருவியின் மூலம் வெளிப்படையாகக் காட்டித் தாவர உலகில் ஒரு பெரும் அதிசயத்தை உண்டாக்கினார். இதனாலன்றோ "கீழ்த்திசை மந்திரவாதி" என்ற பட்டப்பெயர் அவருக்கு வழங்கலாயிற்று. மனித வர்க்கத்தைப் போன்றே தாவர வர்க்கங்களும் காதல் வாழ்க்கை நடத்தி வருவதாக இப்பொழுது ஸர் போஸ் அவர்கள் கண்டுபிடித்திருக்கிறார். லண்டன், ஆக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ் முதலிய சர்வகலாசாலைகளில் தமது இந்த நூதன ஆராய்ச்சியைத் தமது நுண்கருவிகளின் மூலம் நிரூபித்துக் காட்ட, இவர் சமீபத்தில் இங்கிலாந்திற்குச் செல்கிறார். தாவர நூல் அறிவில் இவருக்குச் சமமாக உலகத்தில் வேறொருவரும் கிடையாது. இந்தியா இவரைப் பெற்றிருக்கிறதற்குப் பெருமையும் மகிழ்ச்சியும் கொள்ளவேண்டும். இவர் நெடுங்காலம் வாழ்க!

ஆசிரியர், "பாரதி."

நமது வந்தனங்கள்

நமது பர்மா வாசத்திலும் சுற்றுப் பிரயாணத்திலும் சிரமம் பாராது, பல அனுபவங்களையும் ஆதரவையும் பெறுதற்குப் பெரிதும் உதவியாக விருந்த பர்மாவாழ் தனவணிகச் செம்மல்கட்கும் அவர் தம் பணியாளர்கட்கும் எமது மனமுவந்த வந்தனங்கள்.

இந்தப் பிரயாணத்திலே சிறப்பாக நமக்குப் பல்வேறு வழிகளிலும் உதவி செய்து, பிரயாணத்தின் சிரமத்தைத் தோன்றாதவாறு செய்த அன்பர்களான திருவாளர்கள் K. G. கிருஷ்ணன் அவர்கள், S. KN. முத்தையா அவர்கள், A. M. சிதம்பரம் அவர்கள், A. ஞானகுருபரன் அவர்கள், சுந்திர முதலியார் (ஆசிரியர், 'சுதந்தி

ரன்') அவர்கள், டேவிட் (ஆசிரியர், 'பர்மா நாடு') அவர்கள், A. K. செட்டியார் (ஆசிரியர், 'தனவணிகன்') அவர்கள், K. M. K. முத்தையா அவர்கள், S M S. PL. முருகப்ப செட்டியார் அவர்கள், K. இராமநாதன் அவர்கள், "காந்தி தாசன்" அவர்கள், சங்கரலிங்கம் பிள்ளை அவர்கள் ஆகியோருக்கும் நமது பிரத்தியேகமான வந்தனங்கள்.

"பாரதி"யையும் அதன் புத்தகங்களையும் தம்மாலான அளவு பெற்று, உதவி செய்த அன்பரானோர் அனைவருக்கும் நமது வந்தனங்களை அன்புடன் அறிவித்துக் கொள்ளுகின்றோம்.

ஜான்ஸி லாட்' பெற்ற அன்பர்கட்கு

நமது பர்மா சுற்றுப்பிரயாணம் மிகவும் நீண்டு, பல மாதங்களைக் கொள்ளைகொண்ட தென்பதைச் சொல்லாமலே அறியலாம். அங்கு இவ்வளவு கால மிருக்க வேண்டிய அவஸ்யம் சிறிதுமில்லை. என்றாலும் நமது தேக நிலை அலைச்சலைத் தாங்காததினால், பல தடவை நோயுற்றதே காலம் மிகுதிப்படுவதற்குப் பெரிதுங் காரணமாகும் அங்கு அவ்விதமாக, இங்கு கால நிலையாலும், நிர்வாக மாற்றத்தாலும் எதிர்பாராத முறையில் கஷ்ட—நஷ்டம் மிகுந்து நிலை குலையச் செய்துளதை யறிந்து மிகவும் வருந்துகின்றோம் அது காரணமாகவே 'ஜான்ஸி லாட்'டைப் பெற்ற அன்பர்களுக்கு பாக்கி அனுப்பித்தர வேண்டிய 3 புத்தகங்களையும் பூர்த்தி செய்து அனுப்பக்கூடவில்லை யெனத் தெரிகின்றோம். இவ்விதம் நேருமெனச் சிறிதும் எண்ணினோமில்லை எனினும் அன்பர்களின் ஆவலையும் நமது கடமையையும் பூர்த்தி செய்ய, அப் புத்தகங்களை சமீபத்திலே வெளியிடுவதாக விருக்கின்றோம். அதுபற்றி அன்பர்கள் கவலையுற வேண்டியதில்லை. பாக்கியுள்ள புத்தகங்கள் வந்து சேராதது பற்றிக் கடிதமெழுதும் அன்பர்களும் பிற நண்பர்களும் மேலும் சிறிது காலம் பொறுத்துப் பெற்றுக்கொள்ள மிகுதியும் வேண்டிக் கொள்ளுகின்றோம்.

ஓர் திருத்தம்

சமீபத்திலே நமது "பாரதி"ப் பத்திரிகைக்குப் போஷகராகச் சேர்ந்து, தமது கடமையைச் செலுத்திய அன்பர் திரு. S. PL. முருகப்ப செட்டியார் அவர்களின் சொந்த விலாசம்: S. M. S. PL. முருகப்ப செட்டியார் என அறிகிறோம். இது முதற்கொண்டு அவ்விதமே திருத்திக்கொள்ள வேண்டுகின்றோம்.

பொறுப்பாசிரியர், 'பாரதி."

பொறுப்பாசிரியர் ரா. சுப்ரமண்யம அவர்களால்,
தமது உத்தமபாளையம் ஆனந்தா பிரஸில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

இந்திய மூலதனம்! சுத்த சுதே

தமிழ் நாடு அஷ்யூரன்ஸ் & பாங்கிங் கம்பெனி Ltd.,

போடிநாயக்கனூர்.

அக்கிராசனாதிபதி:

மதுரை ஜில்லா போர்ட்
மெம்பரும் போடிநாயக்கனூர் பிரபல லாண்-லார்டுமான
1. மகா-ா-ா-ஸ்ரீ S. A. ரெங்கசாமி செட்டியா ரவர்கள்.

டைரக்டர்கள்:

2. ,, S. P. சுல்தான் அஹமெட் பதாதீன் ருவுத்தர் அவர்கள், லாண்-லார்டு, போடி.
3. ,, V. புன்னைவனம் பிள்ளை, லாண்-லார்டு & முனிசிபல் கவுன்சிலர், போடி.
4. ,, B. K. ஒன்னுராம் செட்டியார், லாண்-லார்டு, போடி.
5. ,, S. S. M. பழனியப்பன் செட்டியார். வர்த்தகம், போடி.
6. ,, T. S. சாமிநாதன் அவர்கள், K. D. H. P. Co. Ltd., மூணார்.
7. ,, Dr. ஜான் ஜோசப், தந்த வைத்தியர், பெரியகுளம்.
8. ,, P. O. நயினன், கொட்டகுடி ரோட் ஓவர்சீயர், போடி.

மானேஜிங் டைரக்டர்:

9. ,, T. S. கிருஷ்ணசாமி அய்யர், கொட்டகுடி ரோப்வே, போடி.

செக்ரட்டரி: பாஸ்கரன்.

10. ,,

மேற்கண்ட கண்ணியமும் பொறுப்பும் வாய்ந்த டைரக்டர்களால் இக் கம்பெனி ஸ்தாபிக்கப்பட்டு நன்கு நடந்து வருகிறது. அன்னிய நாட்டு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள் மூலமாக நமது திரவியம் அகலுவதை நிறுத்தி, இக் கம்பெனியில் சேர்ந்து பாலிசி எடுத்துக்கொண்டு பொருள் சேகரிக்க முயலுங்கள். எல்லா விபரங்களுக்கும் இக் கம்பெனி காரியதரிசிக்கு எழுதிக்கொள்ளுங்கள்.

நமது சொந்தப் பிரசுரங்கள்

புதுமை! மிகவும் உயர்தவை!!

சோவியத் ருஷியா.

பண்டித ஜவஹர் லால் நேரு எழுதிய ஆங்கில நூலின்
நேரான தமிழ் மொழிபெயர்ப்பு.
"தமிழ் நாடு" ஆசிரியர்
டாக்டர் P. வரதராஜுலு நாயுடு அவர்களின்
முகவுரையுடன் கூடியது.
தோட்டியும் தொண்டமானும் பிச்சைக்காரனும் பிரபுவும்
ஏற்றத் தாழ்வில்லாமல் குபேர வாழ்வு வாழுகின்ற
சோவியத் ருஷியாவை அறிய இதுவே வழிகாட்டியாகும்
விஷயத்தை விளக்க கண்ணைக் கவரும் 21 ஆர்ட்டோன்
படங்களுடன் கூடியது
ஆர்ட் & கிளேஸ் பதிப்பு விலை ரூ. 1—4—0.
தபால் செலவு வேறு

ராட்டூர்- வீரன்- துர்க்கா தாஸ்

(சரித்திர சம்பந்தமான ஓர் தேசிய நாடகம்)
வங்காள மஹாகவி பாபு துவிஜேந்திர லால் ராய்
எழுதியது.
அவரது நாடகங்களனைத்திலும்
இத் துர்க்கா தாஸே முதன்மையானது.
ஆரம்ப முதல் இறுதி வரை
அற்புதம்!- ஆச்சர்யம்!! ஆனந்தம்!!!
தேசபக்தி ததும்புகிறது! சத்தியம் ஒளிர்கிறது!!
ஆவேச நடை! அலங்கார பாஷை!
மயிர் சிலிர்க்குஞ் செயல்கள்!!!
கிரௌன் 1/8 சைஸ்
380 பக்கங்கொண்ட புத்தகம் 1-க்கு விலை ரூ. 1—4—0.
தபால் செலவு வேறு.
பாரதிப் புத்தகாலயம், உத்தமபாளையம்.